சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com


# தினமணி

திங்கள்கிழமை
26 ஜூலை 2021
சென்னை
12 பக்கங்கள் ரூ.7





## உலக கேடட் மல்யுத்தம்: தங்கம் வென்றார் பிரியா மாலிக்



**ஹ**ங்கேரியில் நடைபெற்ற உலக கேடட் மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் 73 கிலோ எடைப்பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார் இந்திய இளம் வீராங்கனை பிரியா மாலிக்.

அவர் பெலாரஸின் படா போவிச்சை 5–0 என்ற புள்ளிக் கணக்கில் வென்று தங்கம் வென்றார். அவருக்கு நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் சமூக வலைதளத்தில் வாழ்த்து கூறியுள்ளனர்.

# தேசமே முதன்மையானது; முன்னோக்கிச் செல்வோம்

## மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி


**புது தில்லி, ஜூலை 25:** 'தேசமே முதன்மையானது; எப்போதும் முதன்மையானது' என்ற தாரக மந்திரத்துடன் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சி மூலமாக நாட்டு மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை உரையாற்றிய அவர், மேலும் கூறியதாவது:

வரும் ஆகஸ்ட் 15-ஆம் தேதி, நாடு சுதந்திரம் அடைந்ததன் 75-ஆவது ஆண்டில் இந்தியா அடியெடுத்து வைக்கிறது. இதையொட்டி, நாடு முழுவதும் 'அம்ருத் மகோத்சவம்' கொண்டாடப்படவுள்ளது. இதுதொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மத்திய கலாசாரத் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. பல இந்தியர்கள் ஒன்று சேர்ந்து ஒரே நேரத்தில் தேசிய கீதத்தைப் பாடுவது அதில் ஒரு நிகழ்ச்சியாகும்.

இதற்காக, http://rashtragaan.in என்ற பெயரில் புதிய வலைதளமும் தொடங்கப்பட்டுள்ளது. அந்த வலைதளத்தின் உதவியுடன் ஒருவர் தேசிய கீதத்தைப் பாடி, அதில் பதிவு செய்ய முடியும். இதை நீங்கள் முயற்சி செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை மகாத்மா காந்தி முன்னெடுத்தார். அந்த வகையில், ஒவ்வோர் இந்தியரும் நாட்டின் வளர்ச்சிக்காக ஒன்றிணைந்து ஒற்றுமை இந்தியா இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும். இது, நமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும். நாம் நமது கடமையை சரிவர செய்யும்போது, அது, பன்முக கலாசாரம் நிறைந்த நமது நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்த உதவும். தேசமே முதன்மையானது; எப்போதும் முதன்மையானது என்ற தாரக மந்திரத்துடன் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.



டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று வரும் இந்திய வீரர்களுக்கு மக்கள் அனைவரும் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும். சமூக ஊடகங்களிலும் இந்திய ஒலிம்பிக் குழுவினருக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

ஜூலை 26, கார்கில் வெற்றி தினமாகும். நாம் அனைவரும் அன்றைய தினம், கார்கில் போரில் உயிர்நீத்தவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும். மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசுவதற்குத் திரட்டப்படும் அனைத்து விஷயங்களையும் என்னால் பேச இயலுவதில்லை. அவற்றை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்து விடுகிறேன்.

மனதின் குரல் நிகழ்ச்சிக்காக கருத்துகள் தெரிவிப்பவர்களில் 75 சதவீதத்தினர் 35 வயதுக்கு குறைவானவர்களே. இது நல்ல அறிகுறியாகவே தெரிகிறது. வரும் ஆகஸ்ட் 7-ஆம் தேதி, தேசிய கைத்தறி துணிகள் தினம் வருகிறது. கைத்தறி பொருள்கள் மூலமாக கிராமங்களுக்கு கணிசமான அளவில் வருமானம் கிடைக்கிறது. கடந்த 2014-ஆம் ஆண்டுக்குப் பிறகு காதி பொருள்களின் தேவை பலமடங்கு அதிகரித்துள்ளது என்றார் பிரதமர் மோடி.

நிகழ்ச்சியில் உள்ளூர் மேம்பாட்டுக்கு பாடுபட்ட குழுவினரையும், தனி நபர்களையும் பிரதமர் மோடி பாராட்டினார்.

**உணவக உரிமையாளருக்கு பிரதமர் பாராட்டு:** சண்டீகரில் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், தடுப்பூசி செலுத்திக் கொள்பவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கும் உணவக உரிமையாளருக்கு மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்தார். அவர் பேசியதாவது:

சண்டீகரின் செக்டார்-29-இல் மிதி வண்டியில் சோளா பூரி விற்பனை செய்யும் சஞ்சனா ராணா என்பவர் தடுப்பூசியைப் போட்டுக் கொள்பவர்களுக்கு சோளா பூரியை இலவசமாக வழங்குகிறார். அவருடைய உணவை இலவசமாகப் பெறுவதற்கு தடுப்பூசியைப் போட்டுக் கொண்டதற்கான ஆதாரத்தைக் காண்பிக்க வேண்டும். அவருடைய முயற்சிக்கு பாராட்டுகள். சமூக நலனுக்கு செல்வத்தை விட சேவை மனப்பான்மை, கடமை ஆகியவை அதிகம் தேவை என்பதை இந்த நிகழ்வு உணர்த்துகிறது என்றார் பிரதமர் மோடி.

## நீலகிரியில் ஆட்டோ அவசர ஊர்தி சேவை: பிரதமர் மோடி பாராட்டு

**நீ**லகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ராதிகா சாஸ்திரி என்பவரின் ஆட்டோ அவசர கால ஊர்தி சேவையை பிரதமர் நரேந்திர மோடி தனது மனதின் குரல் நிகழ்ச்சியில் பாராட்டினார். அவர் பேசியதாவது:

குன்னூரில் உணவகத்தை நடத்தி வரும் ராதிகா சாஸ்திரி, தமது நண்பர்களிடம் நிதியுதவி பெற்று 'ஆம்புரெக்ஸ்' என்ற ஆட்டோ அவசரகால ஊர்தி சேவையைத் தொடங்கினார். மலைப் பிரதேசங்களில் வசிக்கும் நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்காக அவர்களுக்கு எளிதான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

தற்போது, நீலகிரி மலைப்பிரதேசத்தில் 6 அவசர ஊர்திகள் இயங்குகின்றன. தொலைதூரத்தில் வசிக்கும் நோயாளிகளுக்கு அவசர காலத்தில் இவை மிகவும் உதவிகரமாக உள்ளன. படுக்கை, பிராணவாயு சிலிண்டர், முதலுதவிப் பெட்டி மற்றும் இதர பொருள்களுடன் ஆம்புரெக்ஸ் அவசர ஊர்தி சேவை நடத்தி வரும் ராதிகா சாஸ்திரிக்கு பாராட்டுகள் என்றார் பிரதமர் மோடி.

பிரதமரின் பாராட்டுதலை அடுத்து, மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் எல்.முருகனும், ராதிகா சாஸ்திரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். பிறகு அவர் வெளியிட்ட சுட்டுரைப் பதிவில், 'இந்தத் தன்னலமற்ற சேவை நீலகிரியில் வசிக்கும் மக்களை ஊக்குவிப்பதுடன் அந்தப் பகுதியில் சுகாதார வசதிகளையும் மேம்படுத்தும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

### 'தொடர்ந்து சேவை செய்வேன்'

**குன்னூர், ஜூலை 25:** நீலகிரி மாவட்டம் தனக்கு மிகவும் பிடித்துள்ளதால் தன்னால் முடிந்த சேவைகளைத் தொடர்ந்து செய்வேன் என்று சமூக ஆர்வலர் ராதிகா சாஸ்திரி தினமணி செய்தியாளரிடம் தெரிவித்தார்.


ராதிகா சாஸ்திரி

நீலகிரி மாவட்டத்தில் தனியார் அமைப்புகளை ஒன்றிணைத்து பல்வேறு நிறுவனங்களின் பங்களிப்புடன் ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய ஆட்டோ வடிவிலான 6 மினி ஆம்புலன்ஸ்களை ராதிகா சாஸ்திரி வழங்கியுள்ளார். ஏசிடி கிராண்ட் என்ற தனியார் அமைப்பின் மூலம் ரூ. 70 லட்சம் செலவில் ஆக்சிஜன் உற்பத்திக் கலனை அரசு லாலி மருத்துவமனைக்கு இலவசமாகப் பெற்று தந்தார்.

இந்த இரு நிகழ்வுகளும் குன்னூர் பகுதி மக்களிடையே அதிக வரவேற்பை பெற்றிருந்த நிலையில் மன் கி பாத் வானொலி நிகழ்ச்சியில் ராதிகா சாஸ்திரியை பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை பாராட்டினார்.

இதனைத் தொடர்ந்து தினமணி செய்தியாளரிடம் ராதிகா சாஸ்திரி கூறியதாவது: உத்தரகண்ட் மாநிலம், டேராடூன் எனது சொந்த ஊர். குன்னூரில் தங்கி முக்கிய பிரமுகர்களுக்கான உணவகம் நடத்தி வருகிறேன். பிரதமரின் பாராட்டு எனக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது. நீலகிரி மாவட்டம் எனக்கு மிகவும் பிடித்துள்ளதால் என்னால் முடிந்த சேவைகளைத் தொடர்ந்து செய்வேன்.

இனி வரும் காலங்களில் அனைவருக்கும் தடுப்பூசி கிடைக்கும் வகையில் தொடர்ந்து பணியாற்றுவேன் என்றார்.

https://t.me/Tamil_epaper2

## ஒலிம்பிக்: அடுத்த சுற்றுக்கு மேரி கோம், பி.வி. சிந்து, மனிகா பத்ரா முன்னேற்றம்


மேரி கோம்

**ம**களிர் குத்துச்சண்டை 51 கிலோ எடைப்பிரிவில் 6 முறை உலக சாம்பியன் மேரி கோம் 4–1 என்ற புள்ளிக் கணக்கில் டொமினிக்கன் குடியரசு வீராங்கனை மியுகுலினா ஹெர்னான்டஸ் கார்ஸியாவை வீழ்த்தினார். மேரி கோம் தனது அனுபவத்தால் எளிதாக கார்ஸியாவை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார். அடுத்த சுற்றில் கொலம்பியாவின் இங்கிரிட் வலேன்சியாவை சந்திக்கிறார் கோம்.


பி.வி.சிந்து

**ஞா**யிற்றுக்கிழமை நடைபெற்ற பாட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு தொடக்க சுற்று ஆட்டம் ஒன்றில் உலக சாம்பியன் பி.வி. சிந்து 21–7, 21–10 என்ற புள்ளிக் கணக்கில் இஸ்ரேலின் சேனியா போலிகர்போவாவை வென்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார். அடுத்த சுற்றில் ஹாங்காங்கின் சியின் யியை எதிர்கொள்கிறார் அவர்.


மனிகா பத்ரா

**டே**பிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை மனிகா பத்ரா 57 நிமிஷங்கள் நீடித்த ஆட்டத்தில் கடுமையாகப் போராடி உக்ரைனின் மார்கரிட்டா பெஸோட்ஸ்காவை வென்று மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்றார். பெஸோட்ஸ்கா 32–ஆவது இடத்தில் உள்ள நிலையில், 62–ஆவது இடத்தில் உள்ள மனிகா அவரை அதிர்ச்சித் தோல்வியுறச் செய்தது குறிப்பிடத்தக்கது.

### உள்ளே...



- ஜம்மு–காஷ்மீரில் குடியரசுத் தலைவர்



- தெலங்கானா ராமப்பா கோயிலுக்கு யுனெஸ்கோ அங்கீகாரம்



- முதல்வராக நீடிப்பேனா, இல்லையா?: எடியூரப்பா



- தில்லியில் ஓ.பி.எஸ்.–இ.பி.எஸ்.
- கரோனா நிவாரணம்: ஜூலை 31 வரை பெறலாம்
- பி.இ.: இன்றுமுதல் விண்ணப்பிக்கலாம்



- மூத்த தமிழறிஞர் இளங்குமரனார் காலமானார்



- கார் விபத்தில் தோழி பலி; நடிகை காயம்

# தனியார் மருத்துவமனைகளில் இலவச கரோனா தடுப்பூசி

## வரும் 28-இல் முதல்வர் தொடக்கி வைக்கிறார்

**சென்னை, ஜூலை 25:** பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி மூலம் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக கரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை சென்னையில் வரும் 28-ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சைதாப்பேட்டை மேற்கு பகுதியில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 98-வது பிறந்தநாளை முன்னிட்டு 5,300 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சென்னை தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கட்சியின் பொதுக்குழு உறுப்பினர் வழக்குரைஞர் எம்.ஸ்ரீதரன், தலைமை செயற்குழு உறுப்பினர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி செயலாளர் இரா.துரைராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

அப்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கரோனா தொற்று பாதிப்பு அதிகமாக இருந்ததால் நலத்திட்ட உதவிகள் வழங்க முடியவில்லை. தற்போது, கரோனா தொற்று குறைந்துள்ளதால் நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணி தொடக்கப்பட்டுள்ளது. இந்த வட்டத்தில் 5,300 குடும்பங்களுக்கு ரூ.1,100 மதிப்புள்ள 15 வகையான மளிகை பொருட்கள் மற்றும் ரூ.500 மதிப்புள்ள ஹாட் பாக்ஸ் வழங்கப்படுகிறது. கரோனா தொற்றை தடுக்க முகக்கவசம் சிறந்த தீர்வு ஆகும். முந்தைய ஆட்சியில் விலை குறைவான தரமற்ற முகக்கவசங்கள் வாங்கி பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டது. அது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

தொழில் நிறுவனங்களின் பெரு நிறுவன சமூகப் பொறுப்பு நிதி (சிஎஸ்ஆர்) மூலம் தனியார் மருத்துவமனைகளில் கரோனா தடுப்பூசிகளை இலவசமாக பொதுமக்களுக்கு செலுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை ரூ.5 கோடிக்கும் அதிகமாக நிதி வந்துள்ளது. இந்தத் திட்டம் இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில்தான் செயல்படுத்தப்படவுள்ளது.



வரும் 28-ம் தேதி காலை 10 மணி அளவில் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் இலவச கரோனா தடுப்பூசி திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்கவுள்ளார். அடையாறு ஆனந்த பவன் ஹோட்டல் சிஎஸ்ஆர் நிதி மூலம் இந்த மருத்துவமனையில் இலவசமாக தடுப்பூசி போடப்படுகிறது. இதன்மூலம், ஆழ்வார்பேட்டையில் உள்ள பொதுமக்கள் பயனடைய உள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக தமிழகம் முழுவதும் சிஎஸ்ஆர் நிதி மூலம் இணைக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளில் இலவச கரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம் 29-ஆம் தேதி முதல் தொடக்கப்படவுள்ளது. ஒவ்வொரு தனியார் மருத்துவமனையும், எந்த நிறுவனத்தின் சிஎஸ்ஆர் நிதி மூலம் இணைக்கப்பட்டுள்ளது. எவ்வளவு பேருக்கு இலவசமாக தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என்பதை விளம்பரப்படுத்தி அந்தந்த பகுதி மக்களுக்கு தெரியப்படுத்தும்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனம் தங்களிடம் பணியாற்றும் 3 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி போடவேண்டுமென கோரிக்கை வைத்தனர். தனியார் மருத்துவமனையில் ரூ.780 கட்டணத்தில் கோவிஷீல்ட் தடுப்பூசி போடப்படுகிறது. அதனால், அவர்கள் ரூ.24 லட்சத்தை செலுத்த முன்வந்துள்ளனர். தொழில் நிறுவனங்கள் தனியார் மருத்துவமனையுடன் இணைந்து தங்களிடம் பணியாற்றும் ஊழியர்களுக்கு தடுப்பூசி போடவுள்ளனர்.

கேரளம், ஆந்திரம், கர்நாடகத்தில் இருந்து தமிழகம் வருபவர்களுக்கு பரிசோதனை செய்யப்படுகிறது.

அரசு மருத்துவர்கள் ஊதிய உயர்வு தொடர்பாக அரசாணை 293, அரசாணை 354 எது வேண்டுமென அவர்கள் முடிவு செய்ய வேண்டும். அப்படி அவர்கள் முடிவு செய்தபின் நிறைவேற்றப்படும் என்றார் அவர்.

### மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்



**ம**க்களின் வீடுகளுக்கே சென்று மருத்துவ வசதிகளை அளிக்கும் திட்டம் விரைவில் தமிழகத்தில் செயல்படுத்தப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

தமிழக மக்களைப் பரிசோதித்து, அவர்களுக்கு எத்தகைய நோய் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, நோய் உள்ளவர்களுக்கு வீடுகளுக்கே சென்று மருத்துவம் பார்ப்பதும், இலவசமாக மருந்துகளை அளிப்பதுமான திட்டத்தை முதல்வர் விரைவில் தொடக்கி வைக்க இருக்கிறார்.

அதற்காக ஓரிரு நாள்களில் கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களுக்கு சென்று ஆய்வு மேற்கொண்டு, எந்தப் பகுதியில் அதனை தொடங்கலாம் என்ற முடிவு எடுக்க இருக்கிறோம் என்றார் அவர்.




## ‘உதவும் உறவுகள் குழு’ காவலர்களின் மனிதநேயம்

# உயிரிழந்த 5 காவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.72.31 லட்சம் நிதிஉதவி

**சென்னை, ஜூலை 25:** தமிழக காவல்துறையில் கடந்த 3 மாதங்களில் உயிரிழந்த 5 காவலர்களின் குடும்பங்களுக்கு 1999-ஆம் ஆண்டு பேட்ச் காவலர்களின் ‘உதவும் உறவுகள் குழு காவலர்கள்’ கட்செவி அஞ்சல் குழு மூலமாக ரூ.72.31 லட்சம் நிதி உதவி செய்துள்ளனர்.

தமிழக காவல்துறையில் 1999 -ஆம் ஆண்டு 3,500 காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அடிப்படைப் பயிற்சி முடித்து, தற்போது தமிழகம் முழுவதும் பல்வேறு காவல் பிரிவுகளில் தலைமைக் காவலர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். 1999 பேட்ச் தலைமைக் காவலர் சபரிநாதன் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகர காவல்துறையில் பணிபுரிந்தபோது, அவருடன் பணிபுரிந்த காவலர் இறந்ததால், அவருடன் பயிற்சி பெற்ற காவலர்களைக் கொண்டு உதவும் உறவுகள் -99 என்ற கட்செவி அஞ்சல் குழுவை உருவாக்கி ரூ.40 ஆயிரம் நிதி திரட்டி இறந்த காவலரின் குடும்பத்துக்கு உதவினார்.

அவருடன் பயிற்சி பெற்ற காவலர்களில் 100 காவலர்கள் மட்டும் இக்குழுவில் இணைந்து, முதல் உதவி பணியை தொடங்கினர். சபரிநாதனின் கடும் முயற்சியால், தமிழகத்தில் உள்ள பிற மாவட்டங்களில் 1999-ஆம் ஆண்டு பயிற்சி பெற்ற காவலர்கள் சிறிது சிறிதாக இணைந்து ‘தற்போது உதவும் உறவுகள்- 99’ குழுவில், 1999 பேட்ச் காவலர்கள் 2,900 பேர் சேர்ந்துள்ளனர். காவலர்கள் இறந்தால் தலா ரூ. 500 வீதம் செலுத்தி, இறந்த காவலரின் குடும்பத்திற்கு ரூ.14 லட்சம் வரை பணம் வசூல் செய்து கொடுத்து வருகிறார்கள்.

‘உதவும் உறவுகள் 99’ குழுவினர் இவர்களது குழுவில் அங்கம் வகித்துள்ள இவர்களது பேட்ச் காவலர்கள் (தற்போது தலைமைக் காவலர்கள்) எவரேனும் இறந்துவிட்டால், அனைவரும் ஒருங்கிணைந்து பணம் வசூலித்து இறந்த தலைமைக் காவலரின் குடும்பத்திற்கு நிதி உதவி அளித்து வருகின்றனர்.

கடந்த 2020-ஆம் ஆண்டு வரையில் அவர்களது உதவும் உறவுகள் குழுவில் இறந்த 18 காவலர் குடும்பத்தினருக்கு பண உதவி செய்திருந்தனர்.

இந்நிலையில், இக்குழுவைச் சேர்ந்த தலைமைக் காவலர் காந்தி (திருச்சி மாவட்டம்) கடந்த ஏப்ரல் மாதம் இறந்தார்.

‘உதவும் உறவுகள் 99’ குழுவினர் அவருக்காக ரூ.14 லட்சத்து 26 ஆயிரம் வசூல் செய்து, அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைத்தனர். இதையடுத்து, மதுரையைச் சேர்ந்த சையது முகமது மற்றும் சென்னையைச் சேர்ந்த ஜீவானந்தம் ஆகிய தலைமைக் காவலர்கள் கடந்த மே மாதம் உயிரிழந்தனர். இரு தலைமைக் காவலர் குடும்பத்திற்கும் ஒரே நேரத்தில் தமிழகம் முழுவதும் உதவிப் பணியை தொடங்கி இருவரின் குடும்பத்துக்கும் தலா ரூ. 14 லட்சத்து 76 ஆயிரத்து 120 கொடுத்து உதவினர்.

கடந்த ஜூன் மாதத்தில் ஈரோட்டைச் சேர்ந்த ராமமூர்த்தி, சென்னையைச்சேர்ந்த நாராயணன் ஆகியோர் உயிரிழந்தனர். இவர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.14 லட்சத்து 26 ஆயிரத்து 750 வசூலித்து கொடுக்கப்பட்டது. இப்படி, கடந்த 3 மாதங்களில் இறந்த 5 காவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.72 லட்சத்து 31 ஆயிரத்து 740 நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

# பிரியா மாலிக்கிற்கு அன்புமணி வாழ்த்து

**சென்னை, ஜூலை 25:** உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுள்ள பிரியா மாலிக்கிற்கு, பாமக இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரது சுட்டுரைப் பதிவு: ஹங்கேரி புடாபெஸ்ட் நகரில் நடைபெற்று வரும் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டிகளின் 73 கிலோ எடை பிரிவில் பெலாரஸ் வீராங்கனையை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றுள்ள இந்திய வீராங்கனை பிரியா மாலிக்கிற்கு பாராட்டுகள். அவரது சாதனைப் பயணம் தொடர வாழ்த்துகள் எனக் கூறியுள்ளார்.

## புதிதாக திறக்கப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில்

# சூரிய மின்சக்தி தகடுகள் நிறுவத் திட்டம்

நமது நிருபர்

**சென்னை, ஜூலை 25:** வடசென்னையில் புதியதாக திறக்கப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் சூரிய மின்சக்தி தகடுகளை நிறுவ சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதாவது, வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை உள்ள மெட்ரோ ரயில் நிலையங்களில் 300 கிலோ வாட் சூரியசக்தி மின்சாரம் தயாரிப்பதற்கான தகடுகளை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக, கார்பன் மாசு குறைவது மட்டுமின்றி, மின்சாரத்துக்காக, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தை சார்ந்து இருப்பது குறையும்.

**சூரிய மின்சக்தி திட்டம்:** கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்தல், பசுமையைக் காத்தல், பாதுகாப்பான மின்ஆற்றலைப் பெறுதல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக சூரிய மின்சக்தி திட்டத்துக்கு சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் ஊக்கம் அளித்து வருகிறது. அந்த வகையில், மெட்ரோ ரயில் நிலையங்கள், கோயம்பேடு பணிமனையில் சூரிய சக்தியை பயன்படுத்தி 5.6 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.



குறிப்பாக, அசோக்நகர் மெட்ரோ ரயில் நிலையத்தின் கூரை மேல் 260 கிலோவாட் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் அமைத்து, மின் உற்பத்தி கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது. இது போல, மண்ணடி மெட்ரோ ரயில் நிலையத்தின் கூரை மேல் 20 கிலோவாட் சூரியசக்தி மின் உற்பத்தி தொடங்கப்பட்டது. இதன்மூலமாக, சூரிய சக்தி மின் உற்பத்தி மேலும் அதிகரித்தது.

தற்போது, மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் டிப்போக்களில் நிறுவப்பட்ட சூரியசக்தி தகடுகள் (சோலார் பேனல்கள்) மூலமாக, ஒவ்வோர் ஆண்டும் 74 லட்சம் கிலோவாட்ஸ்க்கு (kilowatt-hours) மேலாக சூரியசக்தி மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன்மூலம், மின்சார கட்டணங்களில் கிட்டத்தட்ட ரூ.1.4 கோடி சேமிக்கப்படுகிறது.

**வடசென்னை மெட்ரோ ரயில் நிலையங்கள்:** இந்நிலையில், வடசென்னையில் புதியதாக திறக்கப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் சூரியசக்தி தகடுகளை நிறுவ சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: தற்போது, ஆலந்தூர், அண்ணா நகர் கிழக்கு, கீழ்ப்பாக்கம், நேரு பூங்கா, ஷெனாய் நகர், எழும்பூர், மீனம்பாக்கம், கோயம்பேடு உள்பட 18 நிலையங்களில் சூரியசக்தி மின்தகடு நிறுவப்பட்டுள்ளது. மேலும், கோயம்பேடு நிர்வாக கட்டடம், ரயில் பணிமனை மேற்கூரைகளில் சூரிய மின்சாதனம் நிறுவப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் பெரும்பாலும் மின் விளக்குகள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் டிப்போக்களில் உள்ள மின் சாதனங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

**300 கிலோவாட் மின் உற்பத்தி:** இந்த தகடுகள் 5.6 மெகாவாட் திறன் கொண்டவை. அவை சராசரியாக 74.6 லட்சம் கிலோவாட் (kilowatt-hours) மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. முதல்கட்ட மெட்ரோ ரயில் நீட்டிப்பு நிலைய மேற்கூரைகளில் மேலும் 300 கிலோவாட்ஸ் (கிலோவாட்-பீக்) மின் உற்பத்தி நிலையம் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். அதாவது, சூரிய சக்தி மின்தகடு மூலமாக,உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் எங்கள் சொந்த தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின்சார பயன்பாட்டை குறைக்கிறது.

**பிரேக்கிங் முறை:** மெட்ரோ ரயில்கள் ஒரு மீளுருவாக்க செய்யும் பிரேக்கிங் முறை (Regenerative braking system) யில் இயங்குகின்றன. இந்த ரயில்களில் மூன்று கட்ட இழுவைமோட்டார்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த இழுவை மோட்டார்களில் பிரேக் பயன்படுத்தப்படும் போதெல்லாம், மின்சாரம் உற்பத்தி செய்யும்விதமாக செயல்படுகின்றன. இந்த மின்சாரம் உயர்நிலை மின்சார பாதைகளுக்குள் செல்கிறது. ஒரு மெட்ரோ ரயில் நாள் ஒன்றுக்கு சுமார் 6,300 கிலோவாட் (யூனிட்டுகள்) மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

இது விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் அடிப்படை உள்நாட்டு உபகரணங்கள் அடங்கிய ஆறு வீடுகளுக்கு ஓர் ஆண்டுக்கு மின்சாரம் வழங்க போதுமானது. சொந்தமாக மின் சக்தியை உருவாக்குவது மூலம், மின் வாரியத்தை சார்ந்திருப்பதை குறைக்கிறது, மேலும், கார்பன் வெளியேற்றத்தை குறைக்கும்.

நான்கு கார் மெட்ரோ ரயில் ஒரு நாளைக்கு சுமார் 400 கி.மீ தூரத்திற்கு இயங்கும். இந்த ரயிலின் இழுவைமுறை மூலம், 1,900 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறது. இந்த மின்சாரம் பெரும்பாலும் ரயில்களின் அதே மின் பிரிவில் நுகரப்படுகிறது என்றனர்.

# 5 மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு

**சென்னை, ஜூலை 25:** நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், தென்காசி ஆகிய 5 மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் திங்கள், செவ்வாய்க்கிழமை (ஜூலை 26, 27) ஆகிய இரண்டு நாள்களுக்கு மிதமான மழை பெய்யக் கூடும்.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஞாயிற்றுக்கிழமை கூறியது:

தென் மேற்குப் பருவக்காற்று காரணமாக, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், தென்காசி ஆகிய 5 மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் திங்கள், செவ்வாய்க்கிழமை (ஜூலை 26,27) ஆகிய இரண்டு நாள்களுக்கு இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். எஞ்சிய மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும். ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

**ஜூலை 28, 29:** மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய நீலகிரி, கோயம்புத்தூர், தேனி திண்டுக்கல், தென்காசி ஆகிய 5



மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் ஜூலை 28, 29 ஆகிய தேதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். எஞ்சிய மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்டவானிலையே நிலவும்.

https://t.me/Tamil_epaper2

**சென்னையில்...:** சென்னையைப் பொருத்தவரை திங்கள்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கும் என்றார் அவர்.

**மழை அளவு:** தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் கோயம்புத்தூர் மாவட்டம் சோலையாறில் 90 மி.மீ., சின்னக்கல்லாறில் 70 மி.மீ., வால்பாறையில் 60 மி.மீ., சின்கோனாவில் 50 மி.மீ., சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 40 மி.மீ., நீலகிரி மாவட்டம் பந்தலூரில் 30 மி.மீ., கன்னியாகுமரி மாவட்டம் சிற்றாரில் 20 மி.மீ., கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் தலா 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

**மீனவர்களுக்கு எச்சரிக்கை:** தெற்கு வங்கக்கடல் மற்றும் தெற்கு அந்தமான் கடல் பகுதிகள், தெற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய வங்கக் கடல் பகுதிகளில் மணிக்கு 40 கி.மீ. முதல் 50 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். எனவே, இந்தப்பகுதிகளுக்கு மீனவர்கள் ஜூலை 29-ஆம் தேதி வரை செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தவிர, தென் மேற்கு அரபிக்கடல், மத்திய மேற்கு அரபிக்கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், இந்தப்பகுதிகளுக்கும் ஜூலை 27-ஆம் தேதி வரை செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஞ்சியில் இன்று ஸ்ரீஜயேந்திரர் ஜயந்தி விழா

## ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பங்கேற்பு



**காஞ்சிபுரம், ஜூலை 25:** காஞ்சிபுரத்தில் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் 87-ஆவது ஜயந்தி விழா திங்கள்கிழமை நடைபெறுகிறது. இதில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் கலந்து கொள்கிறார்.

காஞ்சி காமகோடி பீடத்தின் 69-ஆவது பீடாதிபதியாக இருந்தவர் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். இவரது 87-ஆவது ஜயந்தி விழா காஞ்சிபுரத்தை அடுத்த ஓரிக்கையில் அமைந்துள்ள மகா பெரியவர் சதாப்தி மணிமண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் திங்கள்கிழமை மாலை ஓரிக்கை மணி மண்டபத்துக்கு வருகிறார். விழாவில் ஆந்திர மாநில முன்னாள் எம்.எல்.ஏ. என்.பி.வெங்கடேச சாஸ்திரி எழுதிய வியத்நாம், கம்போடியா தேசங்களில் இந்து கோயில்கள் என்ற தெலுங்கு நூலை ஆளுநர் வெளியிடுகிறார். பின்னர் வேத சித்தாந்தங்களில் பிரசித்தி பெற்றவரும், சென்னை சம்ஸ்கிருத கல்லூரி பேராசிரியருமான மணி திராவிட சாஸ்திரியை கௌரவிக்கிறார்.

இவ்விழாவில் ஏழைகளுக்கு இலவச தையல் இயந்திரங்கள், இட்லி பாத்திரங்கள், சலவைப் பெட்டிகள் உள்ளிட்ட நல உதவிகளும் வழங்கப்படவுள்ளன. இதையடுத்து காஞ்சி பீடாதிபதி ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தும் சிறப்புரையாற்றுகின்றனர்.

விழாவின் நிறைவாக குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடுவும் புதுதில்லியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக வாழ்த்துரை வழங்குகிறார்.

விழாவுக்கான ஏற்பாடுகளை சங்கர மடத்தின் மேலாளர் ந.சுந்தரேச ஐயர், மணிமண்டப நிர்வாக அறங்காவலர் ந.சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் இணைந்து செய்துள்ளனர்.




## வெறிச்சோடிய மெரீனா...



கரோனா தளர்வுக்குப் பின் மெரீனா கடற்கரையில் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கூடத்தொடங்கியதை அடுத்து ஞாயிற்றுக்கிழமை கடற்கரைப் பகுதிக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் சாலைகளில் திரண்ட கூட்டம். (வலது) காவல்துறையின் கண்காணிப்பால் வெறிச்சோடிய மணற்பரப்பு.

# பி.இ.: இன்றுமுதல் விண்ணப்பிக்கலாம்

## பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு செப். 14-இல் தொடக்கம்

**சென்னை, ஜூலை 25:** பொறியியல் கலந்தாய்வுக்கான விண்ணப்பப் பதிவு திங்கள்கிழமை (ஜூலை 26) தொடங்குகிறது. பொதுப் பிரிவினருக்கான கலந்தாய்வு, செப்டம்பர்14-ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 4 ஆம் தேதி வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொறியியல் கலந்தாய்வு குறித்து தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் வெளியிட்டுள்ள அறிவிப்பு:

பொறியியல், தொழில்நுட்ப இளநிலை படிப்புகளுக்கான கலந்தாய்வுக்கு திங்கள்கிழமை (ஜூலை 26) முதல் விண்ணப்பிக்கலாம். அன்று முதலே சான்றிதழ்களையும் பதிவேற்றம் செய்யலாம். இதற்கான இணையதள முகவரி, www.tneaonline.in. சான்றிதழ் பதிவேற்றம் மற்றும் கலந்தாய்வுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள் ஆக.24-ஆம் தேதி.

முதல் கட்டமாக சிறப்புப் பிரிவினரான மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவ வீரர்களின் வாரிசுகள், விளையாட்டு வீரர்கள் ஆகியோருக்கு, செப்.7 முதல் செப்.11-ஆம் தேதி வரை கலந்தாய்வு நடைபெறுகிறது. தொடர்ந்து பொதுப் பிரிவினருக்கான கலந்தாய்வு செப்.14 முதல் அக்.4-ஆம் தேதி வரையும், துணை கலந்தாய்வு அக்.12 முதல் அக்.16-ஆம் தேதி வரையும், எஸ்சிஏ, எஸ்சி பிரிவினருக்கான கலந்தாய்வு அக்.18 முதல் அக்.20 தேதி வரை என அனைத்து கலந்தாய்வையும் அக்.20-ஆம் தேதிக்குள் இணைய வழியில் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டைப் பொருத்தவரை, 461 பொறியியல் கல்லூரிகளில் பி.இ., பி.டெக். படிப்புகளில் மொத்தமுள்ள 1 லட்சத்து 63,154 இடங்களில், 71,195 இடங்கள் நிரம்பியிருந்தன. 20 கல்லூரிகளில் ஒருவர்கூட சேரவில்லை. 61 கல்லூரிகளில் ஒற்றை இலக்கத்தில் மாணவர்கள் சேர்ந்திருந்தனர். அண்ணா பல்கலை. வளாக கல்லூரிகள் உள்பட 13 கல்லூரிகளில் மட்டுமே 100 சதவீத மாணவர் சேர்க்கை நடைபெற்றிருந்தது. குறிப்பாக மாணவர்களிடையே எப்போதும் வரவேற்பு அதிகமாக இருக்கும் மெக்கானிக்கல், சிவில் படிப்புகளில் மாணவர் சேர்க்கை கணிசமாக குறைந்திருந்தது. இதன்படி, மெக்கானிக்கல் பாடத்தில் 301 கல்லூரிகளில் பொதுப்பிரிவு இடங்களில் மாணவர்கள் சேரவில்லை.

அதேபோல 250-க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் சிவில் பொதுப்பிரிவு இடங்கள் காலியாகவே இருந்தன. அதே நேரம், இசிஇ, கம்ப்யூட்டர் சயின்ஸ், ஐ.டி. ஆகிய பாடப்பிரிவுகளை மாணவர்கள் அதிகம் விரும்பியிருந்தனர். இதையடுத்து, காலியிடங்களுக்கு துணைக் கலந்தாய்வு மூலம் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

| | |
|---|---|
| விண்ணப்பப் பதிவு தொடக்கம் | ஜூலை 26 |
| விண்ணப்பிக்க கடைசி நாள் | ஆக. 24 |
| சமவாய்ப்பு எண் வெளியீடு | ஆக. 25 |
| தரவரிசைப் பட்டியல் வெளியீடு | செப். 4 |
| சிறப்பு ஒதுக்கீட்டு பிரிவினருக்கான கலந்தாய்வு | செப். 7 முதல் செப். 11 |
| பொதுப்பிரிவினருக்கான முதற்கட்ட கலந்தாய்வு | செப்.14 முதல் அக். 4 |
| துணைக் கலந்தாய்வு | அக். 12 முதல் அக். 16. |
| எஸ்.சி.ஏ., எஸ்.சி. பிரிவினருக்கான கலந்தாய்வு | அக்.18 முதல் அக். 20. |

# மங்களூரு சென்ட்ரல் சிறப்பு ரயில்: சென்னை சென்ட்ரலில் இருந்து இயக்கம்

**சென்னை, ஜூலை 25:** காட்பாடி யார்டில் பொறியியல் பணி காரணமாக, சேவையில் மாற்றம் செய்யப்பட்டிருந்த சென்னை சென்ட்ரல்-மங்களூரு சென்ட்ரல் சிறப்பு ரயில் திங்கள்கிழமை (ஜூலை 26) முதல் சென்னை சென்ட்ரல் ரயில்நிலையத்தில் இருந்து இயக்கப்படும்.

காட்பாடி ரயில்நிலையத்தில் ரயில்வே பொறியியல் பணி காரணமாக, ரயில் சேவையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. இதில், சென்னை சென்ட்ரல்-மங்களூரு சென்ட்ரல் சிறப்பு ரயில் (06627) சென்னை சென்ட்ரல்-ஜோலார்பேட்டை இடையே ஜூலை 8-ஆம் தேதி முதல் ஜூலை 26-ஆம் தேதி வரை வெவ்வேறு நாள்களில் பகுதி ரத்து செய்யப்பட்டிருந்தது.

தற்போது, காட்பாடியில் பொறியியல் பணிகள் முடிவடைந்துள்ளன. இதையடுத்து, சென்னை சென்ட்ரல்-மங்களூரு சென்ட்ரல் சிறப்பு ரயில் (06627) திங்கள்கிழமை (ஜூலை 26) முதல் வழக்கம்போல இயக்கப்படவுள்ளது. அதன்படி, சென்னை சென்ட்ரல் ரயில்நிலையத்தில் இருந்து இந்த ரயில் இயக்கப்படும்.

# சென்னையில் குற்றச்செயல்களைத் தடுக்க தீவிர நடவடிக்கை

## காவல் ஆணையர் சங்கர் ஜிவால்

**சென்னை, ஜூலை 25:** சென்னையில் வழிப்பறி, செல்லிடப்பேசி பறிப்பு உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சென்னை காவல் ஆணையர் சங்கர் ஜிவால் தெரிவித்தார்.

வடமாநிலங்களில் இருந்து சென்னைக்கு வந்து, ஆதரவின்றி சுற்றித் திரிந்த 557 பேர் 'காக்கும் கரங்கள்' மூலமாக மீட்கப்பட்டுள்ளனர். முதல்கட்டமாக, அவர்களில் 127 பேரை ஜி.டி விரைவு ரயில் மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு வழியனுப்பும் நிகழ்வு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில், சென்னை காவல் ஆணையர் சங்கர் ஜிவால் கலந்து கொண்டு, அவர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய பெட்டகத்தை வழங்கி வழியனுப்பி வைத்தார். இதைத் தொடர்ந்து நிருபர்களிடம் அவர் கூறியது:

சென்னையில் மீட்கப்பட்ட வடமாநிலங்களைச் சேர்ந்த 127 பேர் ராஜஸ்தானுக்கு அழைத்து செல்லப்பட்டு, அங்குள்ள அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள். பின்னர், ராஜஸ்தான் காப்பகங்களில் உள்ள 57 தமிழர்களை ரயில் மூலமாக சென்னைக்கு அழைத்து வருவார்கள்.

சென்னையில் வழிப்பறி, செல்லிடப்பேசி பறிப்பு உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, அதிக அளவு வழிப்பறி சம்பவங்கள் நடைபெறும் பகுதிகள் 'ஹாட் ஸ்பாட்' ஆக அடையாளம் காணப்பட்டு, பகுதி வாரியாக பிரித்து கண்காணிப்பை அதிகரித்துள்ளோம். மேலும், அதிக அளவு குற்றச் செயல்கள் நடைபெறும் பகுதிகளில் 'மப்டி' உடை அணிந்த போலீஸாரும் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பிடிபடும் குற்றவாளிகளில் 50 சதவீதம் பேர் புதிய குற்றவாளியாக இருக்கிறார்கள். அனைவரையும் கைது செய்து அவர்களின் விவரங்களை சேகரித்து வைத்துள்ளோம்.

கண்காணிப்பு கேமரா உள்ள பகுதிகளில் 90 சதவீதம் குற்றவாளிகள் கைது செய்யப்படுகின்றனர். குற்றச் செயல்களை தடுக்கும் வகையில், ரவுடிகளை வகைப்படுத்தி கைது செய்து வருகிறோம். தேவைப்பட்டால் குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சில நாள்களுக்கு முன்பு நடந்த ஏ.டி.எம் கொள்ளை தொடர்பாக இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மீதம் உள்ளவர்களும் விரைவில் கைது செய்யப்படுவார்கள். ஏ.டி.எம் கொள்ளையர்கள் நாடு முழுவதும் 16 மாநிலங்களில் கைவரிசை காட்டி உள்ளனர். அதில், தமிழகத்தில் மட்டுமே கொள்ளையர்கள் பிடிபட்டுள்ளனர். மேலும், இந்த வழக்கு சி.பி.ஐ-க்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றார் காவல் ஆணையர் சங்கர்ஜிவால்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆணையர் லோகநாதன், ரயில்வே காவல் கண்காணிப்பாளர் டாக்டர் தீபா சத்யன், சென்னை ரயில்வே கோட்ட கூடுதல் மேலாளர் இளங்கோவன் உள்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



சென்னையில் உதவி மையம் மூலம் மீட்கப்பட்ட வெளிமாநில நபர்களுக்கு பாதுகாப்பு உபகரணப் பெட்டகம் வழங்கி வழியனுப்பி வைத்த சென்னை பெருநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால்.



## வாசம் நிறைந்த சுவாசப் பயிற்சி..

☞ உங்களுக்குப் பிடித்த மலரை நினைத்துக் கொள்ளுங்கள்; பின்னர், உதடுகளைக் குவித்து, பிறந்தநாள் மெழுகுவர்த்தியை ஊதுவதுபோல் ஊதுங்கள்; இதுபோல், காலையிலும் மாலையிலும் நான்கைந்து முறை செய்யுங்கள்.

தகவல்:
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்.

## சுதந்திர தின கொண்டாட்ட ஏற்பாடுகள்...



சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் ஆகஸ்ட் 15–ஆம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியேற்ற உள்ளதைத் தொடர்ந்து நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க கோட்டையின் எதிரே தயாராகும் பார்வையாளர்கள் மாடம்.

# குடியரசுத் தலைவர் வருகை: அதிகாரிகளுடன் தலைமைச் செயலர் ஆலோசனை

**சென்னை, ஜூலை 25:** குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வரும் ஆகஸ்ட் 2–ஆம் தேதி சென்னைக்கு வருகை தரவுள்ள நிலையில், அதற்கான பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடுகளை மேற்கொள்வது குறித்து அதிகாரிகளுடன் தலைமைச் செயலர் வெ.இறையன்பு ஞாயிற்றுக்கிழமை ஆலோசனை நடத்தினார்.

காவல்துறை டிஜிபி, உள்துறைச் செயலர் உள்பட முக்கிய அதிகாரிகள் அக்கூட்டத்தில் பங்கேற்றனர். குடியரசுத் தலைவர் வருகையின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அப்போது விவாதிக்கப்பட்டது.

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் உருவப் படத்தை ஆகஸ்ட் 2–ஆம் தேதி, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைக்க உள்ளார். சட்டப்பேரவையின் நூற்றாண்டு விழாவிலும் அவர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க உள்ளார்.

இவ்விழாவுக்கு, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தலைமை தாங்குகிறார். முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலை வகிக்க உள்ளார். விழாவுக்கான ஏற்பாடுகள் சட்டப் பேரவைச் செயலகத்தின் மூலமாக நடைபெற்று வருகிறது. விழாவில், குடியரசுத் தலைவர், ஆளுநர், முதல்வர் ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

இதற்காக சட்டப் பேரவை பேரவை மண்டபம் முழுவதையும் தூய்மைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. பேரவை மண்டப வளாகத்தில் உள்ள வசந்த மண்டபமும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

பேரவை மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நிறைவடைந்ததும், குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட மிக முக்கிய விருந்தினர்கள் தேநீர் அருந்தும் வகையில் வசந்த மண்டபத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், அந்நிகழ்வுகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும், சிறப்பு ஏற்பாடுகளையும் மேற்கொள்வது குறித்த கலந்தாலோசனைக் கூட்டம் தலைமைச் செயலர் இறையன்பு தலைமையில் நடைபெற்றது. அப்போது அதிகாரிகளுக்கு பல்வேறு முக்கிய அறிவுறுத்தல்களை தலைமைச் செயலர் வழங்கினார்.

மேலும், பாதுகாப்பு ஒத்திகைகள் நடத்துவது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

# தீவிர தூய்மைப் பணி: 4,479 டன் குப்பைகள் அகற்றம்

**சென்னை, ஜூலை 25:** சென்னையில் தீவிர தூய்மைப் பணி திட்டத்தின் கீழ் 5 நாள்களில் 4,479 டன் குப்பைகள், கட்டடக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட 15 மண்டலங்களுக்கு உள்பட்ட 200 வார்டுகளிலும் நாள்தோறும் சராசரியாக 5,000 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரிக்கப்படுகின்றன. இதில், மக்கும் குப்பைகள் இயற்கை உரமாகவும் மற்றும் உயிரி எரிவாயுவாகவும், மக்காத குப்பைகள் மறுஉபயோகத்திற்கும், மறுசுழற்சிக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

https://t.me/Tamil_epaper2

தூய்மைப் பணிகளை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் கடந்த மே மாதம் முதல் மாநகராட்சி சார்பில் தீவிர தூய்மைப் பணி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், கடந்த மே மாதம் 10 நாள்கள் மேற்கொள்ளப்பட்ட தூய்மைப் பணியில் 3,260 மெட்ரிக் டன் குப்பைகள், 10,085 மெட்ரிக் டன் கட்டடக் கழிவுகள் என மொத்தம் 13,345 மெட்ரிக் டன் கழிவுகளும், கடந்த ஜூன் மாதம் ஒரு வாரம் நடைபெற்ற தீவிர தூய்மைப் பணியில் 2,000 மெட்ரிக் டன் குப்பைகளும், 6,700 மெட்ரிக் டன் கட்டடக் கழிவுகள் என மொத்தம் 8,700 மெட்ரிக் டன் கழிவுகள் அகற்றப்பட்டன.

ஜூலை 19–ஆம் தேதியில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை (ஜூலை23) வரை 407 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தீவிர தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில், 1,122 மெட்ரிக் டன் குப்பைகள் மற்றும் 3,357 மெட்ரிக் டன் கட்டடக் கழிவுகள் என மொத்தம் 4,479 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன என்றனர்.




அம்பத்தூர் மண்டலத்தின் கண்டிகை தெருவில் தீவிர தூய்மைப் பணித் திட்டத்துக்கு முன் மலைபோல் காணப்படும் குப்பைகள். (வலது) பணி முடிந்து தூய்மையாகக் காணப்படும் அப்பகுதி.

# டாம்கோ திட்டங்களில் பயன் பெற அழைப்பு

**சென்னை, ஜூலை 25:** டாம்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் சிறுபான்மையின மக்கள் கடனுதவி பெறலாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் ஜெ.விஜயா ராணி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) மூலம் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள தமிழகத்தில் வாழும் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர், பார்சியர்கள் மற்றும் ஜெயின் பிரிவைச் சார்ந்த சிறுபான்மையின மக்கள் சுய தொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் தொகை வழங்கப்படுகிறது.

மேலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளநிலை, முதுநிலை தொழில்கல்வி, தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மை மாணவ, மாணவிகளுக்கும் குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் கல்விக் கடன் வழங்கப்படுகிறது.

இவ்வாறு, டாம்கோ மூலம் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களான தனிநபர் கடன், சுய உதவிக் கடன் மற்றும் கல்விக் கடன் ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்க மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், சிங்காரவேலர் மாளிகை, சென்னை 1 , சென்னை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகள், சைதாப்பேட்டை நகர கூட்டுறவு வங்கி, ஜார்ஜ் டவுன் கூட்டுறவு நகர வங்கி, வெள்ளாள கூட்டுறவு நகர வங்கி, புரசைவாக்கம் நகர கூட்டுறவு வங்கி மற்றும் தியாகராய நகர் கூட்டுறவு வங்கி ஆகிய வங்கிகளை அணுகி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை https://chennai.nic.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்யலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# ரூ.9.2 கோடியில் அதிநவீன தெருநாய் இனப்பெருக்கக் கட்டுப்பாட்டு மையங்கள்

## மாநகராட்சி திட்டம்

**சென்னை, ஜூலை 25:** சென்னை லாயிட்ஸ் சாலை, கண்ணம்மாபேட்டை உள்ளிட்ட 3 இடங்களில் ரூ. 9.2 கோடி மதிப்பில் அதிநவீன உபகரணங்கள் கொண்ட தெருநாய் இனப்பெருக்க கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

சென்னையில் உள்ள தெருநாய்கள் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், அவற்றால் ரேபிஸ் நோய் பரவாமல் தடுக்கவும் மாநகராட்சி கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக 15 மண்டலங்களில் தலா ஒரு நாய் பிடிக்கும் வாகனங்கள் மூலம் நாள்தோறும் தெருநாய்கள் பிடிக்கப்படுகின்றன.

அவை மாநகராட்சியின் 3 நாய் இனப்பெருக்க கட்டுப்பாடு மையங்கள் மற்றும் 2 தொண்டு நிறுவனங்களின் நாய் இனப்பெருக்க கட்டுப்பாடு மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு கருத்தடை செய்யப்பட்டு, பின்னர் அவை பிடிக்கப்பட்ட பகுதியிலேயே விடப்படுகின்றன.

சென்னை மாநகருக்கு உள்பட்ட பகுதியில் மட்டும் சுமார் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட தெரு நாய்கள் இருப்பதால், அவற்றுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய கண்ணம்மாபேட்டை, லாயிட்ஸ் சாலை மற்றும் பேசின் பிரிட்ஜ் சாலை ஆகிய மூன்று இடங்களில் மாநகராட்சியின் தெருநாய் இனப்பெருக்க கட்டுப்பாடு மையங்கள் இயங்கி வருகின்றன.

தற்போது, இந்த மூன்று மையங்களையும் அதிநவீன வசதி கொண்ட மையங்களாக மாற்ற மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

**ரூ. 9.2 கோடி செலவில் நவீன மையம்:** இதுகுறித்து மாநகராட்சி கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள் கூறுகையில், லாயிட்ஸ் சாலையில் இயங்கி வரும் தெரு நாய் இனப்பெருக்க கட்டுப்பாடு மையம் சிதிலமடைந்துள்ளதால் அதை இடித்துவிட்டு முதல்தளத்துடன் கூடிய புதிய மையம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

பேசின் பிரிட்ஜ் சாலை மற்றும் கண்ணம்மாபேட்டை பகுதியில் உள்ள கூடுதலாக முதல் தளத்துடன் கூடிய தெருநாய் இனப்பெருக்க கட்டுப்பாடு மையம் கட்டப்பட உள்ளது. அதிநவீன உபகரணங்களுடன் மொத்தம் ரூ. 9.2 கோடி செலவில் கட்டப்பட உள்ள இந்த மையங்கள் மூலம் நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை விரைந்து செய்யப்படும் என்பதால் அதன் எண்ணிக்கையும் கட்டுக்குள் வைக்க முடியும். இப்பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது என்றனர்.

**அஸ்தி வழங்க ஏற்பாடு:** சென்னை மாநகராட்சிப் பகுதியில் விபத்து மற்றும் நோய் வாய்ப்பட்டு இறக்கும் தெரு நாய், வளர்ப்பு நாய் மற்றும் பூனைகளை புதைப்பதற்காக கண்ணம்மாபேட்டை சுடுகாட்டில் அதற்கென தனி இடம் உள்ளது. இந்நிலையில், இவ்வாறு உயிரிழக்கும் நாய், பூனைகளை எரியூட்டும் மையம் கண்ணம்மாபேட்டையில் அமைக்கப்பட உள்ளது.

மேலும், இங்கு எரியூட்டப்படும் வளர்ப்பு பிராணிகளின் அஸ்தியையும் அதன் உரிமையாளர்கள் விரும்பினால் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாநகராட்சி கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.


SBI | பாரத ஸ்டேட் பாங்கு
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மையம்
எண் 556 ஜீவன் ஆனந்த் கட்டிடம், தரை தளம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை -600018.

E-ஏல விற்பனை அறிவிப்பு

| | | | |
|---|---|---|---|
| 1) கடன்தாரர் பெயர் | திரு.A.சிவ குமார் | | |
| கணக்கு எண் | 36267851258 | பதிவு எண்: TN 07 CH 8971. | |
| தயாரிப்பு & மாடல் | மாருதி ரிட்ஸ் (07/2016) | | |
| நிர்ணய விலை | ரூ.1,06,100/- +18% ஜிஎஸ்டி | EMD தொகை: ரூ.10,610/- | |
| 2) கடன்தாரர் பெயர் | திரு.R.S.ஆனந்தன், | | |
| கணக்கு எண் | 34803150779 | பதிவு எண்: TN 14 B 8649 | |
| தயாரிப்பு & மாடல் | டாடா இண்டிகா eV2 LX BS IV (2014) | | |
| நிர்ணய விலை | ரூ.45,000/- +18% ஜிஎஸ்டி | EMD தொகை: ரூ.4,500/- | |
| 3) கடன்தாரர் பெயர் | [illegible] | | |
| கணக்கு எண் | 32919706947 | பதிவு எண்: TN 18 Q 2997 | |
| தயாரிப்பு & மாடல் | டொயோட்டா எட்டியோஸ் | | |
| நிர்ணய விலை | ரூ.1,16,500/- +18% ஜிஎஸ்டி | EMD தொகை: ரூ.11,650/- | |
| 4) கடன்தாரர் பெயர் | [illegible] | | |
| கணக்கு எண் | 33008511504 | பதிவு எண்: TN 18 Q 6207 | |
| தயாரிப்பு & மாடல் | டாட்டா இண்டிகா V2 LS BS III (04/2013) | | |
| நிர்ணய விலை | ரூ.30,000/- +18% ஜிஎஸ்டி | EMD தொகை: ரூ.3,000/- | |
| 5) கடன்தாரர் பெயர் | [illegible] | | |
| கணக்கு எண் | 30897187925 | பதிவு எண்: TN 20 BV 4178 | |
| தயாரிப்பு & மாடல் | பிரீமியர் ரோடு மாஸ்டர் (10/2009) | | |
| நிர்ணய விலை | ரூ.11,000/- +18% ஜிஎஸ்டி | EMD தொகை: ரூ.1,100/- | |

விற்பனை குறித்த விவரங்கள்

| | |
|---|---|
| E-ஏலத்தின் தேதி மற்றும் நேரம் | 06/08/2021 [illegible] |
| பார்வையிடும் தேதி | 02/08/2021 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை |
| EMD செலுத்தும் முறை | NEFT / RTGS [illegible] A/C No. 37608158933 IFSC Code: SBIN0021011 |
| EMD தொகையுடன் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி தேதி | 05/08/2021 மாலை 4.00 வரை |
| தொகை உயர்த்துதல் | ரூ.5000/- |

மேலும் விவரங்களுக்கு ... SMEC தேனாம்பேட்டை, எண் 556, ... அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை -600018. தொலைபேசி எண் 044-24344448 / 9597730380 / 9790069867 மற்றும் ... M/s e-Procurement Technologies Limited ... 8939000594/ 9722778828 ...

தேதி : 26.07.2021
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்
பாரத ஸ்டேட் பாங்கு
SMEC தேனாம்பேட்டை, சென்னை-18

வெள்ளிதோறும் தினமணியுடன்... வெள்ளி மணி



விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிட்.
VISTAAR FINANCE
பதிவு அலுவலகம்: மனை எண் 59 & 60–23, 22ஆவது குறுக்கு, 29ஆவது மெயின் BTM 2 ஆவது கட்டம், பெங்களூரு - 560076. www.vistaarfinance.com

பிற்சேர்க்கை IV
[பார்க்க விதி 8(1)]
சுவாதீன அறிவிப்பு
(அசையாச் சொத்துக்கானது)

விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அலுவலரானவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் மேற்படி சட்டத்தின் பிரிவு 13(2)-இன்படியான கோரிக்கை அறிவிப்பினைக் கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள வட்டியுடன் கூடிய தொகையை அவ்வறிவிப்புக் கிடைத்த 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

| வ. எண் | கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / கூட்டு விண்ணப்பதாரர்கள் & ஒப்புதலாளர் பெயர் | கடன் கணக்கு | கோரிக்கை அறிவிப்பு நாள் | சுவாதீன அறிவிப்பு நாள் | கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1 | திரு. மாணிக்கம் & திருமதி உஷா M | 0211SBML00496 | 22.04.2021 | 24.07.2021 | ரூ.40,58,767.88/- (ரூபாய் நாற்பது இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து எழுநூற்று அறுபத்தேழு மற்றும் பைசா எண்பத்தெட்டு மட்டும்) – 12.04.2021 நாள்படி |
| | அசையாச் சொத்து விவரம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய அசையாச் சொத்து. அடுக்கக எண் S-1, இரண்டாவது தளம், அடித்தளப் பரப்பு 715 சதுர அடி மற்றும் 235 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு உட்பட 1520 சதுர அடிக் கொண்ட நிலத்தில் அடங்கியது. இத்துடன் 4 அடிப் பொது வழி சேர்த்து. மனை எண்கள் 10A & 9 பாகம், கிருஷ்ணன் தெரு, கோவிந்தன் சாலை, மேற்கு மாம்பலம், சென்னை – 600 033, சர்வே எண் 196, நகர சர்வே எண் 14/2, பிளாக் எண் 62. அமைவிடம் - கோடம்பாக்கம் கிராமம், மாம்பலம் - கிண்டி வட்டம், சென்னை மாவட்டம். அளவு: வடக்குப் பக்கம் - 41 அடி, தெற்குப் பக்கம் - 39 அடி, கிழக்குப் பக்கம் - 38 அடி, மேற்குப் பக்கம் - 38 அடி. இது மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அசோக் நகர் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள்: வடக்கு: மனை எண் 11, தெற்கு: மனை எண் 9, கிழக்கு: மனை எண் 10B, மேற்கு: மனை எண் 3. | | | | |
| 2 | திரு. திவாகர் N, திருமதி சுகன்யா D, திருமதி சசிகலா R & திரு.பாலாஜி N | 0098SBML01809 | 22.04.2021 | 24.07.2021 | ரூ.35,05,649.99/- (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து ஐந்தாயிரத்து அறுநூற்று நாற்பத்தொன்பது மற்றும் பைசா தொண்ணூற்று ஒன்பது மட்டும்) – 12.04.2021 நாள்படி |
| | அசையாச் சொத்தின் விவரம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய அசையாச் சொத்து, அடுக்கக எண் S3, இரண்டாவது தளம், அடித்தளப் பரப்பு 686 சதுர அடி (பொதுப் பகுதி சேர்த்து). இத்துடன் 6.2% பிரிபடாப் பங்காகிய 4410 சதுர அடி நிலம் கொண்ட மனை எண் 5. அமைவிடம் - நடேச நகர் 2ஆவது குறுக்குத் தெரு, சென்னை – 600092. சொத்து வரித் தீர்வைப்படி 5(S-3), 2ஆவது குறுக்குத் தெரு, நடேசன் நகர், விருகம்பாக்கம், சென்னை – 600092. சர்வே எண் 75, செஞ்சேரி கிராமம். எல்லைகள்: வடக்கு: மனை எண் 4, தெற்கு: மனை எண் 6, கிழக்கு: சாலை, மேற்கு: மனை எண் 12. | | | | |
| 3 | திரு.செல்வம்.M, திரு. முனுசாமி.R, திரு. அருள்.A, திருமதி தமிழ்மொழி.M, திருமதி பாவ்யா S & திரு. மாறன்.M., திருமதி வளர்மதி.N | 0211SBML00508 | 22.04.2021 | 24.07.2021 | ரூ.35,91,394.69/- (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு மற்றும் பைசா அறுபத்தொன்பது மட்டும்) – 12.04.2021. நாள்படி |
| | அசையாச் சொத்தின் விவரம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம், பரப்பளவு 246 சதுர மீட்டர் (2426 சதுர அடி) மற்றும் 1307 சதுர அடித் தரைத்தளமும் 2000 சதுர அடி முதல் தளமும் கொண்ட கட்டடம், அதன் RCC தளம், மின்சார இணைப்பு ஆகியவை, கதவு எண் 39/19, பஜனை கோயில் தெரு, காவல்சேரி, வயலாநல்லூர் வழி, பட்டாபிராம், சென்னை – 600072. சொத்தின் அமைவிடம் - வயலாநல்லூர் B காவல்சேரி கிராமம், பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். கிராம நத்தம் சர்வே எண் 347 பாகம், பட்டாப்படி சர்வே எண் 92, பட்டாப்படி புதிய சர்வே எண் 541/7. இது பூந்தமல்லி சார்பதிவு மாவட்டத்துக்கும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. எல்லைகள்: வடக்கு: 25 அடி - காலி நிலம், தெற்கு: 24.6 அடி - பெருமாள் கோயில் தெரு, கிழக்கு: 98 அடி - அருள் மற்றும் ரவி ஆகியோருக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டடம், மேற்கு: 98 அடி - கணேசன் வகையறாவுக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டடம். | | | | |

இத்துடன் தொகை திரும்பச் செலுத்தப்படும் மற்றும் / அல்லது பெறப்படும் நாள் வரையிலான மேல் வட்டியும் இடைநிகழ் செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள் முதலானவையும் பொருந்தும். ஆனால் மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் நிலுவைத் தொகையினைத் திருப்பிச் செலுத்தத் தவறியபடியால் மேற்குறிப்பிட்ட கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 9-இன் கீழுள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட நாட்களில் மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை / கடனீட்டுச் சொத்துக்களை அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

அதனால் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரர் இதன் மூலம் அழைக்கப்படுகிறார்.

எனவே மேற்குறிப்பிட்ட கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிட்-க்கு முதல் உரிமையின் பேரில் கட்டணம் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

நாள்: 24.07.2021
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்
விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்

## ஆன்மிக சிந்தனை

உன் நாவை இனிமையாகப் பேச பயன்படுத்து. பொய் சொல்லாதே. விமர்சிக்காதே. கடவுளின் நாமம் உன் நாவில் நடனம் ஆடட்டும். நாவு ஒரு நர்த்தகியைப் (நடனப் பெண்) போல. அது நடனமாடிக்கொண்டே இருக்கிறது. நர்த்தகியை எப்படிக் கட்டுப்படுத்துவது? நர்த்தகீ என்பதன் எழுத்துகளை எதிர்வரிசைப்படுத்தினால் அது கீர்த்தனா (இறைவன் புகழைப் பாடுதல்) என்றாகும். எனவே, தொடர்ந்து இறைவனின் புகழை உங்கள் நாவினால் பாடுங்கள். அப்போதுதான் அது புனிதமாகப் பயன்படும்.

–ஸ்ரீசத்திய சாய் பாபா

கர்த்தர் சொன்னார், 'இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே' என்றார்.

–லூக்கா 7:47

ஆசையையும் தேவையையும் குறைத்துக்கொண்ட மனிதனே சுதந்திர மனிதன்!

–நபிகள் நாயகம்(ஸல்)

## இன்றும் நாளையும்

### திங்கள்கிழமை
(26–07–2021)
பிலவ ஆண்டு, ஆடி – 10
பிறை: தேய்பிறை.

| | |
|---|---|
| திதி | : துவிதியை காலை 6.23 வரை பிறகு திருதியை மறுநாள் விடியற்காலை 5.18 வரை பிறகு சதுர்த்தி. |
| நட்சத்திரம் | : அவிட்டம் நண்பகல் 01.20 வரை பிறகு சதயம். |
| யோகம் | : சித்த யோகம். |
| ராகுகாலம் | : காலை 7.30 – 9.00 மணி. |
| எமகண்டம் | : காலை 10.30 – 12.00 மணி. |
| சூலம் | : கிழக்கு. |
| நல்ல நேரம் | : காலை 6 – 7 மணி. மாலை 3 – 4 மணி. |

**இன்றைய விசேஷம்:** சேலம் செவ்வாய்ப்பேட்டை ஸ்ரீ மாரியம்மன் உற்சவாரம்பம். சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் ஊஞ்சல் சேவை. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலில் மூலவருக்குத் திருமஞ்சன சேவை. வடமதுரை ஸ்ரீ சௌந்தரராஜர் வஸந்த உற்சவம், முத்துப் பல்லக்கில் பவனி. கீழ்த் திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப்பெருமாள்சந்நிதியில்ஸ்ரீகருடாழ்வாருக்குத் திருமஞ்சன சேவை.

| | |
|---|---|
| மேஷம் | உற்சாகம் |
| ரிஷபம் | மேன்மை |
| மிதுனம் | வரவு |
| கடகம் | ஆர்வம் |
| சிம்மம் | வெற்றி |
| கன்னி | பக்தி |
| துலாம் | பரிசு |
| விருச்சிகம் | பாசம் |
| தனுசு | பெருமை |
| மகரம் | ஆதாயம் |
| கும்பம் | வெற்றி |
| மீனம் | உறுதி |

### செவ்வாய்க்கிழமை
(27–07–2021)
பிலவ ஆண்டு, ஆடி – 11
பிறை: தேய்பிறை.

| | |
|---|---|
| திதி | : சதுர்த்தி மறுநாள் விடியற்காலை 05.36 வரை பிறகு பஞ்சமி. |
| நட்சத்திரம் | : சதயம் நண்பகல் 01.39 வரை பிறகு பூரட்டாதி. |
| யோகம் | : மரண யோகம். |
| ராகுகாலம் | : பிற்பகல் 3.00 – 4.30 மணி. |
| எமகண்டம் | : காலை 9.00 – 10.30 மணி. |
| சூலம் | : வடக்கு. |
| நல்ல நேரம் | : காலை 8 – 9 மணி. மாலை 5 – 6 மணி. |

**இன்றைய விசேஷம்:** சங்கடஹர சதுர்த்தி. வாஸ்து நாள் (காலை மணி 07.44 முதல் 08.20 வரை வாஸ்து செய்ய நன்று). சுவாமிமலை ஸ்ரீ முருகப் பெருமான் பேராயிரம் கொண்ட தங்கப் பூமாலை சூடியருளல். திருவலஞ்சுழி ஸ்ரீ சுவேத விநாயகர், திருநாரையூர் ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார், பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் திருத்தலங்களில் ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம்.

| | |
|---|---|
| மேஷம் | வாழ்வு |
| ரிஷபம் | மாற்றம் |
| மிதுனம் | பக்தி |
| கடகம் | தெளிவு |
| சிம்மம் | மேன்மை |
| கன்னி | பண்பு |
| துலாம் | பாசம் |
| விருச்சிகம் | லாபம் |
| தனுசு | பரிசு |
| மகரம் | உறுதி |
| கும்பம் | துணிவு |
| மீனம் | இன்பம் |

## தொலைக்காட்சிகளில் இன்றைய சினிமா



**கே டிவி**
காலை 10
படம் : **கஜேந்திரா**
நடிப்பு : விஜயகாந்த், லயா
பிற்பகல் 1
படம் : **மௌன ராகம்**
நடிப்பு : கார்த்திக், ரேவதி
இரவு 7
படம் : **முதல்வன்**
நடிப்பு : அர்ஜுன், மனிஷா கொய்ராலா

**ஜெயா மூவி**
காலை 10
படம் : **மண் வாசனை**
நடிப்பு : பாண்டியன், ரேவதி
மாலை 4
படம் : **ப்ரியம்**
நடிப்பு : அருண் விஜய், ராசி
இரவு 7
படம் : **தாய் மாமன்**
நடிப்பு : சத்யராஜ், மீனா

**ராஜ் டிஜிட்டல் ப்ளஸ்**
காலை 9.30
படம் : **ஆத்மா**
நடிப்பு : ராம்கி, கௌதமி
பிற்பகல் 12.30
படம் : **ராணுவம்**
நடிப்பு : மோகன்லால், ப்ரியா ராமன்
இரவு 7.30
படம் : **நினைவெல்லாம் நித்யா**
நடிப்பு : கார்த்திக், நிழல்கள் ரவி

**ராஜ் டிவி**
காலை 9
படம் : **அடிமை சங்கிலி**
நடிப்பு : அர்ஜுன், ரம்பா
இரவு 9
படம் : **வரவு நல்ல உறவு**
நடிப்பு : விசு, சீதா

**ஜெயா**
பிற்பகல் 2
படம் : **முதல் மரியாதை**
நடிப்பு : சிவாஜி, ராதா
இரவு 9
படம் : **அட்டகாசம்**
நடிப்பு : அஜித், பூஜா

**ஜீ திரை**
காலை 6.30
படம் : **என் தங்கை கல்யாணி**
நடிப்பு : டி.ராஜேந்தர், ஸ்ரீவித்யா
பிற்பகல் 1
படம் : **சூது கவ்வும்**
நடிப்பு : விஜய் சேதுபதி, சஞ்சிதா ஷெட்டி
மாலை 4
படம் : **வெள்ளைக்காரதுரை**
நடிப்பு : விக்ரம் பிரபு, ஸ்ரீதிவ்யா

**ஆன்மிக நிகழ்ச்சிகள்**

**தூர்தர்ஷன்**
காலை 9 : ராமாயணம் தொடர்
**சன் டிவி**
காலை 6 : ஆலய வழிபாடு
காலை 6.30 : ஆன்மிக கதைகள்
**வேந்தர் டிவி**
காலை 6 : உள்ளம் உருகுதய்யா
**விஜய் சூப்பர்**
காலை 6 : ராதா கிருஷ்ணா தொடர்
**ஜெயா டிவி**
காலை 6 : அருள் நேரம்
காலை 8 : ஆலய அற்புதங்கள்
**ராஜ் டிஜிட்டல் ப்ளஸ்**
காலை 6.30 : ஆலய தரிசனம்
**பொதிகை டிவி**
காலை 6 : ஆலய தரிசனம்

# சாலைக் குறியீடுகள் உற்பத்தி தொழிற்சாலையில் அமைச்சர் ஆய்வு

**ஸ்ரீபெரும்புதூர், ஜூலை 25:** ஸ்ரீபெரும்புதூரை அடுத்த ஒரகடத்தில் உள்ள சாலைகளில் அமைக்கப்படும் அடையாளக் குறியீடுகளை உற்பத்தி செய்யும் தனியார் தொழிற்சாலையில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரை அடுத்த ஒரகடம் பகுதியில் உள்ள சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் நெடுஞ்சாலைகளில் அமைக்கப்படும் அடையாள குறியீடுகள் உற்பத்தி செய்யும் எஸ்.பி.ஏ. எனும் தனியார் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

இத்தொழிற்சாலையில், நெடுஞ்சாலைகளில் அமைக்கப்படும் சோலார் ஒளிர்வு சாதனங்கள், ஒளி உமிழ்வான்கள், எச்சரிக்கை பலகைகள், அறிவிப்புப் பலகைகள், வேக அளவு குறித்த அறிவிப்புப் பலகைகள், சிக்னல்கள் உள்ளிட்ட சாலைகளில் பயன்படுத்தப்படும் அடையாள குறியீடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த தொழிற்சாலையை அமைச்சர் எ.வ.வேலு ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டு, ஆய்வு செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது:



சாலை அடையாளக் குறியீடுகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் ஆய்வு நடத்திய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு.

தமிழகத்தில் சாலை விபத்துகளைக் குறைக்கும் வகையில், நெடுஞ்சாலைத் துறை சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என அண்மையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்.

வாகன ஓட்டிகளுக்கு எளிதாகப் புரியும் வகையில், நெடுஞ்சாலைகளில் அடையாளக் குறியீடுகளை அமைக்க வேண்டும் என்ற விதி நெடுஞ்சாலைத் துறையில் உள்ளது. அதில் சில விதிகள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தின் அனைத்துச் சாலைகளிலும் இந்த அடையாளக் குறியீடுகளை விபத்துகளைத் தடுக்கும் வகையில், சாலைகளில் அமைக்க வேண்டும் என துறைசார்ந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

சாலைகளில் அமைக்கப்படும் அடையாள குறியீடுகள் எங்கு எல்லாம் உற்பத்தி செய்யப்படுகிறது, எங்கு எல்லாம் தரமாக உற்பத்தி செய்யப்படுகிறது என அதிகாரிகளிடம் கேட்டதற்கு, இந்த தனியார் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் அடையாள குறியீடுகள் தரமாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன்பேரில், இந்த தொழிற்சாலையைப் பார்வையிட்டு ஆய்வு நடத்தினேன். தரமாகவும், முறையாகவும் இந்த அடையாள குறியீட்டு பலகைகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்கு தயாரிக்கப்படும் அடையாள குறியீட்டு பலகைகள் தான் சாலைகளில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. மனித உயிர்கள் மிகவும் விலைமதிப்பற்றவை. எனவே நீங்கள் உற்பத்தி செய்யும் அடையாள குறியீடுகளைமேலும்தரமானதாகதயாரிக்கவேண்டும் என தொழிற்சாலை நிர்வாகத்துக்கு அறிவுறுத்தியுள்ளேன். வரும் காலங்களில் அடையாள குறியீடுகள் சாலையில் அமைக்கப்படுகிறதா என்பதை நானே நேரிடையாக சென்று ஆய்வு செய்வேன் என்றார் அமைச்சர் எ.வ.வேலு.

## விழிப்புணர்வு...



சென்னை வானகரம் அப்பல்லோ மருத்துவமனையில் வலிப்பு நோய் குறித்த விழிப்புணர்வு புத்தகத்தை சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிடும் பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர். உடன் மதுரவாயல் எம்எல்ஏ காரம்பாக்கம் கணபதி, பூந்தமல்லி எம்எல்ஏ கிருஷ்ணசாமி, அப்பல்லோ மருத்துவமனை தலைமை செயல் அதிகாரி டாக்டர் ராகுல் மேனன் உள்ளிட்டோர்.

# 320 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா
## அமைச்சர் வழங்கினார்

**திருவள்ளூர், ஜூலை 25:** ஆவடி மாநகராட்சி பருத்திப்பட்டு பகுதியில் 320 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர் ஞாயிற்றுக்கிழமை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியது: உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின்கீழ் ஆவடி மாநகராட்சிக்குள்பட்ட பருத்திப்பட்டு பகுதியில் சுமார் ரூ.318 கோடி மதிப்பீட்டில் 320 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

கோயில்பதாகை, விளிஞ்சியம்பாக்கம், தண்டுரை, சேக்காடு, மிட்டனமல்லி, முத்தாபுதுபேட்டை, பாளேரிப்பட்டு ஆகிய பகுதிகளில் நகர நிலவரி திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்படவுள்ளது. இதற்கு முன்னர் திருமுல்லைவாயில் கிராம நத்தம் பட்டா 120 பேருக்கு ரூ.168 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டது என்றார்.

நிகழ்ச்சியில் நகர நிலவரி திட்ட தனி வட்டாட்சியர் வில்சன், வட்டாட்சியர் செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வங்கிக் கணக்கு முடக்கம் குறுஞ்செய்தியில் 'லிங்க்'கை ஆராயாதீர்கள்
## சென்னை காவல்துறை வேண்டுகோள்

https://t.me/Tamil_epaper2

**சென்னை, ஜூலை 25:** வங்கிக் கணக்கு முடக்கம் என்று குறிப்பிட்டு வரும் குறுஞ்செய்தியில் உள்ள 'லிங்க்'கிற்குள் செல்ல வேண்டாம் என சென்னை காவல்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு: பொதுமக்களுக்கு வங்கிகளில் இருந்து வருவது போல, ஒரு குறுஞ்செய்தி வருகிறது. அதில், "Dear Bank User Your – Bank account has been blocked. Please update your KYC / PAN Card / Aadhaar Card Details. Click here to Login your Net Banking update your KYC/ PAN number / Aadhaar Card Details http://6328633 cafe2.ngrok.io/bank' * என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதை உண்மையென்று நம்பி ஆராயாமல் அதிலுள்ள 'லிங்'கிற்குள் சென்று விடுகின்றனர்.

உள்ளே சென்றதில் இருந்து பத்து நிமிஷத்துக்குள் இணைய வழி பணப் பரிவர்த்தனை மூலமாக பொருள்களை வாங்குவது, பற்று அட்டை (டெபிட் கார்டு) மூலம் பணம் எடுப்பது ஆகியவை நடைபெறுகின்றன. இதனால் பலர் பாதிக்கப்பட்டு புகார் அளித்து வருகின்றனர்.

எனவே, பொதுமக்கள் விழிப்புடன் இருந்து வங்கியில் இருந்து வருவது போல், லிங்க் எதுவும் செல்லிடப்பேசி எண்ணுக்கு வந்தால், உள்ளே செல்வதை அறவே தவிர்க்கவும்.

இவ்வாறு, 'இதை உடனடியாகச் செய்யாவிடில் உங்களது கணக்கு முடக்கப்படும்' என்று வரும் செய்திகளை நம்ப வேண்டாம். சந்தேகம் வந்தால் உங்கள் வங்கிக்குச் சென்று விசாரிக்கவும்.

# நகைக் கடை மீது மோசடி வழக்கு: பெண் மருத்துவர் புகாரில் போலீஸார் நடவடிக்கை

**சென்னை, ஜூலை 25:** தரமில்லாத நகையை கொடுத்து ஏமாற்றிவிட்டதாக பெண் டாக்டர் கொடுத்த புகாரின்பேரில், சென்னையில் உள்ள ஒரு நகைக் கடை மீது நம்பிக்கை மோசடி வழக்கை போலீஸார் பதிவு செய்தனர்.

சென்னை ஐயப்பன் தாங்கலைச் சேர்ந்த சிவநேசன் மனைவி திரிவேணி. மருத்துவர். இவர் 2015–செப்டம்பர் 9–இல் தி.நகர் நகைக் கடையில் 3 சவரன் தங்க வளையல், 2016 டிசம்பர் 21–இல் 23.630 கிராமில் நகை வாங்கினார். இது 2019–இல் துண்டாக உடைந்ததில் நகையின் உள்ளே வெள்ளி லேயர் இருந்தது. கடை மேலாளரிடம் கேட்டபோது வேறு நகை மாற்றிக் கொடுத்தனர்.

திரிவேணி வாங்கிய மற்றொரு நகை கருமை நிறமாகி இருந்தது. இதன் உள்ளே பித்தளை மற்றும் தாமிரம் சேர்க்கப்பட்டிருந்தது.

நம்பிக்கை மோசடி, ஏமாற்றுதல் ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழ் மாம்பலம் போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

# கார் கவிழ்ந்து பெண் பொறியாளர் பலி: நடிகை, இருவர் பலத்த காயம்

**செங்கல்பட்டு, ஜூலை 25:** மாமல்லபுரம் அருகே கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பெண் பொறியாளர் உயிரிழந்தார். மேலும் காரில் இருந்த பிக்பாஸ் நடிகை யாஷிகா ஆனந்த் உள்ளிட்ட 3 பேர் பலத்த காயம் அடைந்தனர்.



நடிகை யாஷிகா ஆனந்த்

சென்னையில் இருந்து ஒரு காரில் 2 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் புதுச்சேரி சென்றுவிட்டு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கிழக்கு கடற்கரை சாலை வழியாக சென்னை திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது மாமல்லபுரம் சூளேரிக்காடு அருகில் கட்டுப்பாட்டை இழந்த கார் நிலை தடுமாறி சாலைப் பகுப்பான் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில், தலையில் பலத்த காயமடைந்த தெலங்கானா மாநிலம், ஹைதராபாதைச் சேர்ந்த வள்ளிசெட்டி பவனி (28), சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அமெரிக்காவில் மென்பொருள் பொறியாளராகப் பணியாற்றிய இவர், கடந்த 4 நாள்களுக்கு முன்பு தான் சென்னை வந்துள்ளார். காரில் இவருடன் பயணம் செய்த சின்னத்திரை மற்றும் பிக்பாஸ் நடிகையான யாஷிகா ஆனந்த் (21) காயமடைந்தார்.

அவர் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலும், காரில் பயணம் செய்த 2 ஆண்கள் லேசான காயத்துடன் சென்னையில் உள்ள வெவ்வேறு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து குறித்து, நடிகை யாஷிகா ஆனந்த் மீது அதிவேகமாக கார் ஓட்டி உயிர் இழப்பை ஏற்படுத்தியதாக 3 பிரிவுகளின் கீழ் மாமல்லபுரம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# கரோனாவால் உயிரிழந்த மருத்துவர் சடலம் கீழ்ப்பாக்கம் கல்லறையில் மறு அடக்கம்

**சென்னை, ஜூலை 25:** சென்னையில் கடந்த ஆண்டு கரோனாவால் உயிரிழந்த மருத்துவர் சைமன் சடலம் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, வேலங்காடு சுடுகாட்டில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டு கீழ்ப்பாக்கம் கல்லறையில் ஞாயிற்றுக்கிழமை மறுஅடக்கம் செய்யப்பட்டது.

சென்னை அமைந்தகரை பகுதியைச் சேர்ந்த மருத்துவர் சைமன், கீழ்ப்பாக்கத்தில் மருத்துவமனை நடத்திவந்தார். கரோனாவால்பாதிக்கப்பட்ட சைமன் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் உயிரிழந்தார். அவரது உடலை கீழ்ப்பாக்கத்தில் உள்ள கல்லறையில் அடக்கம் செய்ய கொண்டு சென்றபோது அங்கு டி.பி. சத்திரம் பகுதியைச் சார்ந்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

பின்னர், அண்ணா நகரில் உள்ள வேலங்காடு சுடுகாட்டில் சுகாதாரத் துறை வழிகாட்டுதலின்படி, அடக்கம் செய்ய சென்றபோது அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், காவல் மற்றும் மாநகராட்சி ஊழியர்கள் மீது கற்களை வீசி தாக்குதலில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக 20–க்கும் மேற்பட்டோரை காவல் துறையினர் கைதுசெய்தனர். அதைத் தொடர்ந்து, பலத்த போலீஸ் பாதுகாப்புடன் சைமன் உடல் வேலங்காடு சுடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது.

ஆனால், சைமனின் உடலை கிறிஸ்தவ முறைப்படி கீழ்ப்பாக்கம் கல்லறையில் அடக்கம் செய்ய வேண்டும் என சைமனின் மனைவி ஆனந்தி சென்னை மாநகராட்சியிடம் மனு அளித்தார். இந்த மனுவை சென்னை மாநகராட்சி நிராகரித்த நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆனந்தி வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் சைமன் சடலத்தை தோண்டி எடுத்து கீழ்ப்பாக்கம் கல்லறையில் மறுஅடக்கம் செய்ய உத்தரவிட்டது. இதை எதிர்த்து சென்னை மாநகராட்சி சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், மேல்முறையீட்டு மனுவை சென்னை மாநகராட்சி சில நாள்களுக்கு முன்பு திரும்ப பெற்றது. இதையடுத்து, உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை அதிகாரிகள் முன்னிலையில் சைமன் சடலம் வேலங்காடு சுடுகாட்டில் இருந்து ஞாயிற்றுக்கிழமை தோண்டி எடுக்கப்பட்டது.

பின்னர், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டு கீழ்ப்பாக்கம் கல்லறைத்தோட்டத்தில் அவரது மனைவி ஆனந்தி, அவரது மகன்கள் ஆண்டன், அசோக்குமார் ஆகியோர் முன்னிலையில் கிறிஸ்தவ முறைப்படி சடங்குகள் நடத்தப்பட்டு மறுஅடக்கம் செய்யப்பட்டது.

# நாட்டு வெடிகுண்டு வீசி ஆட்டோ ஓட்டுநர் கொலை

**காஞ்சிபுரம், ஜூலை 25:** காஞ்சிபுரத்தில் ஆட்டோ ஓட்டுநரின் வீட்டில் நுழைந்த மர்ம நபர்கள் அவர் மீது வெடிகுண்டு வீசியும், அரிவாளால் வெட்டியும் கொலை செய்தனர்.

காஞ்சிபுரம் நகர் பல்லவமேடு பகுதியில் வசித்தவர் ஆட்டோ ஓட்டுநர் செந்தில் (42). இவர் சனிக்கிழமை இரவு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு கும்பல் வீட்டின் பின்புறமாக குதித்து நாட்டு வெடிகுண்டை வீசியது.

பின்னர், வீட்டுக்குள் புகுந்து செந்திலை அரிவாளால் வெட்டிக் கொலை செய்தது. இதைத் தடுக்க முயன்ற வீட்டிலிருந்த செந்திலின் மனைவி சசிகலா (38), தங்கை கோடீஸ்வரி (40) மற்றும் வீட்டிலிருந்த விக்னேஸ்வரன் (23) ஆகிய 3 பேரையும் அரிவாளால் தாக்கி விட்டு அந்தக் கும்பல் தப்பியது. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த காஞ்சிபுரம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் எம். சுதாகர் விசாரணை நடத்தினார். கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கொலைக்கு பழிக்குப் பழியாக இக்கொலை நடந்திருக்கலாம் என்ற கோணத்தில் சிவகாஞ்சி போலீஸார் வழக்குப் பதிந்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்றைய, நாளைய மின்தடை

**சென்னை, ஜூலை 25:** சென்னையின் பின்வரும் இடங்களில் பராமரிப்புப் பணிகள் காரணமாக திங்கள் (ஜூலை 26), செவ்வாய்க்கிழமை (ஜூலை 27) ஆகிய நாள்களில், காலை 9 முதல் பிற்பகல் 2 மணி வரை மின்தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

**திங்கள்கிழமை மின்தடை செய்யப்படும் இடங்கள்:**

**அடையாறு பகுதி:** பெசன்ட் நகர் ருக்மணி தெரு, லட்சுமிபுரம், எம்.ஜி சாலை, சாஸ்திரி நகர், வெங்கடேஸ்வரா நகர், கக்கன் காலனி, காமராஜர் சாலை மற்றும் மேற்காணும் இடங்களின் சுற்றியுள்ள பகுதிகள்.

**மணலி பகுதி:** சடையன்குப்பம், பர்மா நகர், இருளர் காலனி.

**செம்பியம் பகுதி:** சிம்சன் குரு கம்பெனி, பெரியார் நகர், மூலக்கடை, டீச்சர்ஸ் காலனி, காந்தி நகர், டி.எச். சாலை, அருள் நகர், வெங்கடேஸ்வரா காலனி, சுப்ரமணியம் தோட்டம், பின்னி நகர், பேங்க் காலனி, ராய்நகர், குமரன் நகர், வாசு நகர், தணிகாசலம் 80 அடி சாலை, சாமிராமலிங்கம் காலனி ஏ.பி.சி பிளாக் மற்றும் மேற்காணும் இடங்களின் சுற்றியுள்ள பகுதிகள்.

**கிண்டி பகுதி:** ராஜ்பவன், கிண்டி பகுதி, நங்கநல்லூர், மடிப்பாக்கம், மூவரசம்பேட்டை, முகலிவாக்கம், ராமாபுரம், செயிண்ட் தாமஸ் மௌன்ட் பகுதி, ஆலந்தூர், ஆதம்பாக்கம், டி.ஜி. நகர், வானவம்பேடு, புழுதிவாக்கம் பகுதி மற்றும் மேற்காணும் இடங்களின் சுற்றியுள்ள பகுதிகள்.

**கே.கே நகர் பகுதி:** கர்ணன் தெரு, குருதேவ் தெரு, ஜே.ஜே நகர், பாரதி நகர், ஆண்டவர் தெரு, பெரியார் நகர், சரஸ்வதி நகர், ஜெயராம் நகர், தசரதபுரம் மற்றும் மேற்காணும் இடங்களின் சுற்றியுள்ள பகுதிகள்.

**திருவேற்காடு பகுதி:** பொன்னியம்மன் நகர், ராஜன்குப்பம், விஜி என் மகாலட்சுமி நகர், மெட்ரோ சிட்டி, அக்ரஹாரம்.

**செவ்வாய்க்கிழமை மின்தடை செய்யப்படும் இடங்கள்:**

**தாம்பரம் பகுதி:** வேங்கைவாசல் பிரதான சாலை, வேம்புலியம்மன் கோயில் தெரு, வேளச்சேரி பிரதான சாலை, ஆனந்தா நகர், ரங்கநாதபுரம், சீனிவாசா தெரு, மாம்பாக்கம் பிரதான சாலை, ராஜேஷ் நகர் மற்றும் மேற்காணும் இடங்களின் சுற்றியுள்ள பகுதிகள்.

**கே கே நகர் பகுதி:** காந்தி நகர், இளங்கோ நகர், இந்திரா நகர், ராஜீவ் காந்தி தெரு, எம்ஜிஆர் தெரு, சாய் நகர் அனக்ஸ், பாஸ்கர் காலனி, அன்னை தெரு, கங்கை அம்மன் கோயில் தெரு, சக்தி நகர், கம்பர் தெரு, பாரதி தெரு மற்றும் மேற்காணும் இடங்களின் சுற்றியுள்ள பகுதிகள்.

**சிட்டலப்பாக்கம் பகுதி:** ராமகிருஷ்ணாபுரம், வேளச்சேரி பிரதான சாலை, தனலட்சுமி நகர், சர்மா நகர், கலைவாணர் பார்க் மற்றும் மேற்காணும் இடங்களைச் சுற்றியுள்ள பகுதிகள்.

# லாட்டரியை மீண்டும் கொண்டு வரும் திட்டம் இல்லை

## அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் விளக்கம்

**சென்னை, ஜூலை 25:** தமிழகத்தில் லாட்டரி சீட்டு திட்டத்தை மீண்டும் கொண்டு வரும் சிந்தனையே அரசுக்கு இல்லை என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

லாட்டரி சீட்டை மீண்டும் திமுக அரசு கொண்டு வர முயற்சிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். உண்மைக்குப் புறம்பான கருத்துகளைக் கொண்ட அந்த அறிக்கையை வெளியிட்டிருக்கும் அவருக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.



முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் நான்காண்டு கால ஆட்சியில் மாநிலத்தின் நிதி நிலைமை எத்தகைய சரிவினைச் சந்தித்துள்ளது என்பதை 15- ஆவது நிதிக் குழுவும், மத்திய ரிசர்வ் வங்கியும் ஏற்கெனவே ஆதாரபூர்வமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

2015 சென்னை வெள்ளம் குறித்த சி.ஏ.ஜி. அறிக்கை, 2017-18 மற்றும் 2018-19 மாநில நிதி குறித்த சி.ஏ.ஜி.யின் தணிக்கை அறிக்கை ஆகியவற்றை உரிய காலத்தில் சட்டப் பேரவைக்குக் கூட காட்டாமல் மூடி மறைத்து வைத்திருந்தனர். திமுக ஆட்சி அமைந்தவுடன் இந்தத் தணிக்கை அறிக்கைகள் மக்கள் மன்றத்தில் வைக்கப்பட்டு, சென்ற அதிமுக ஆட்சியின் நிர்வாகத் தோல்விகள் பொது வெளிக்கு வந்துள்ளன.

அவை குறித்து இனி வரப்போகும் வெள்ளை அறிக்கையில் மேலும் வெளிப்பட உள்ளன. நிதித்துறையின் கோப்புகள் பலவற்றை முந்தைய ஆட்சியாளர்கள் கையெழுத்துப் போடாமல் மூட்டை கட்டி வைத்துவிட்டுச் சென்றார்கள் என்பதை நான் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் நேரில் கண்டேன்.

உயிர் நீத்த காவல்துறையினருக்குக் கடந்த ஆண்டு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் அறிவிக்கப்பட்ட முதல்வர் தலைமையிலான பேரிடர் ஆணைய நிதி வழங்கும் கோப்புகளைக் கூட மே 2021 வரை கையெழுத்திடாமல் விட்டுச் சென்றவர்கள் அதிமுக ஆட்சியாளர்கள்.

மு.க.ஸ்டாலின் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகுதான் அந்தக் கோப்புகள் கூட கையெழுத்திடப்பட்டு உயிர் நீத்தோரின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. கரோனா இரண்டாவது அலையைத் திறமையாகக் கையாண்டதுடன் சிறப்பான நிர்வாகத்தையும் அளித்து வருவதற்காக இன்று அனைவராலும் பாராட்டப்படும் முதல்வராக மு.க.ஸ்டாலின் விளங்கி வருகிறார்.

அவர் மீது லாட்டரி பற்றி ஒரு கற்பனையைத் தனக்குத் தானே உருவாக்கிக் கொண்டு எடப்பாடி பழனிசாமி இப்படி களங்கம் கற்பிப்பது கண்டனத்திற்குரியது.

மாநில அரசு ஆலோசனைகளிலோ, ஆய்வுக் கூட்டங்களிலோ ஒருமுறை கூட லாட்டரி பற்றிய பேச்சே இதுவரை எழவில்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய அதிமுக ஆட்சியில் நெருக்கடி மிகுந்த நிதிநிலைமையை விட்டுச் சென்றிருந்தாலும் - சிதிலமடைந்த நிதி நிலைமையைச் சரி செய்யும் கடும் நெருக்கடி மிகுந்த சூழலை இந்த அரசுக்கு ஏற்படுத்தி விட்டுச் சென்றிருந்தாலும் - மாநில நிதி ஆதாரத்தைப் பெருக்கும் வழிகளில் லாட்டரி பற்றிய சிந்தனையே இந்த அரசுக்கு இல்லை.

# பாமக நிறுவனர் ராமதாஸ் பிறந்தநாள்: பிரதமர், முதல்வர் வாழ்த்து



**சென்னை, ஜூலை 25:** பாமக நிறுவனர் ராமதாஸ் பிறந்தநாளை முன்னிட்டு, அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

பாமக நிறுவனர் ராமதாஸின் 83-ஆவது பிறந்தநாளையொட்டி, ஞாயிற்றுக்கிழமை காலை அவரை பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். ராமதாஸின் உடல் நலம் குறித்து விசாரித்த பிரதமர், தில்லிக்கு வரும்படியும் அழைப்பு விடுத்தார். இதைத் தொடர்ந்து, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தமிழிசை செளந்தரராஜன் ஆகியோரும் ராமதாஸுக்கு தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்தனர்.

**முதல்வர் வாழ்த்து:** ராமதாஸ் பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சுட்டுரைப் பதிவில், பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸுக்கு இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துகள்! இட ஒதுக்கீடு உள்ளிட்ட அரசியல் உரிமைகளுக்காகப் போராடியும் வாதாடியும் வரும் அவர் நீண்ட காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறேன் எனக் கூறியிருந்தார். ராமதாஸை தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

**எடப்பாடி கே.பழனிசாமி:** ராமதாஸுக்கு தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி, எல்லா நலமும், வளமும் பெற்று தொடர்ந்து மக்களுக்கான அரசியல் தொண்டாற்றிட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்.

அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், சட்டப்பேரவை கொறடா எஸ்.பி.வேலுமணி, புதுவை சட்டப்பேரவைத் தலைவர் ஏம்பலம் செல்வம், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, முன்னாள் அமைச்சர் சி. விஜயபாஸ்கர், தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை உள்ளிட்ட பலரும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் ராமதாஸ் நன்றி தெரிவித்தார் என பாமக தலைவர் ஜி.கே.மணி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கை: இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

**சென்னை, ஜூலை 25:** அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர விரும்புவோர், திங்கள்கிழமை (ஜூலை 26) முதல் விண்ணப்பிக்கலாம் என கல்லூரிக் கல்வி இயக்குநர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: தமிழகத்தில் உள்ள 143 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள இளநிலை பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான (2021-22) விண்ணப்பங்களை www.tngasa.org, www.tngasa.in ஆகிய இணையதள முகவரிகளில் பதிவு செய்யலாம்.

இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணவர்கள், கல்லூரி சேர்க்கை உதவி மையங்கள் (Admission Facilitation Centre - AFC) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இம்மையங்களின் பட்டியல் ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட இணையதள முகவரிகளில் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து AFC மையங்களிலும் கரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**விண்ணப்பக் கட்டணம்:** ஒரு கல்லூரிக்கு விண்ணப்பக் கட்டணம் ரூ.48 மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.2 செலுத்த வேண்டும்.

எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை. பதிவுக் கட்டணம் மட்டும் ரூ.2 செலுத்த வேண்டும்.

மாணவர்கள் சேர்க்கை வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை www.tngasa.org, www.tngasa.in ஆகிய இணையதளங்களில் அறிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப் பதிவு திங்கள்கிழமை (ஜூலை 26) தொடங்கி, ஆக.10-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

மேலும் விவரங்களுக்கு 044 - 2826 0098, 2827 1911 ஆகிய எண்களை அணுகலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யானைகள் வழித்தடம், வாழ்விடத்தை கண்டறிய சர்வதேச நிபுணர்களுடன் இணைந்து ஆய்வு

## தமிழக அரசு தகவல்

**சென்னை, ஜூலை 25:** யானைகள் வழித்தடம் மற்றும் அவற்றின் வாழ்விடத்தை கண்டறிய சர்வதேச நிபுணர்களுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ள இருப்பதாக தமிழக அரசு உயர்நீதிமன்றத்தில் தகவல் தெரிவித்துள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் யானைகள் வழித்தடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி விலங்குகள் நல ஆர்வலரான முரளிதரன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசுத்தரப்பில் நீலகிரி பகுதியில் யானைகளின் வழித்தடம் மற்றும் அவற்றின் வாழ்விடத்தை கண்டறியவும், ஆக்கிரமிப்புகளை அகற்றி பழைய நிலைக்கே கொண்டு வரவும் சர்வதேச அளவிலான நிபுணர்கள் மற்றும் உலக வனவிலங்கு நிதியம் ஆகியவற்றுடன் இணைந்து ஒருங்கிணைந்த ஆய்வை மேற்கொள்ள இருப்பதாகவும், அந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க அவகாசம் வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், விசாரணையை வரும் செப்டம்பர் 2-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் வருமானத்துக்கு அதிகமாக ரூ.2.68 கோடி சொத்து சேர்ப்பு

## முதல் தகவல் அறிக்கையில் தகவல்

**கரூர், ஜூலை 25:** முன்னாள் அதிமுக அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர், வருமானத்துக்கு அதிகமாக ரூ.2.68 கோடி சொத்து சேர்த்ததாக கரூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 22-ஆம் தேதி முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் வீடுகள், நிறுவனங்களில் நடத்தப்பட்ட சோதனையைத் தொடர்ந்து, முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்ட விவரங்கள் குறித்து, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல்துறையினர் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருப்பது:

கரூர் மாவட்ட அதிமுக செயலர் எம்.ஆர். விஜயபாஸ்கர் 2016 முதல் 2021 வரை அதிமுக ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த காலத்தில், வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக எழுந்த புகாரையடுத்து, ஜூலை 21 ஆம் தேதி அவர் மீதும், அவரது மனைவி விஜயலட்சுமி, சகோதரர் சேகர் ஆகியோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல்துறையினரால் கரூரிலுள்ள முன்னாள் அமைச்சரின் வீடுகள், தொழில் நிறுவனங்கள், உதவியாளர் வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது.

இச்சோதனையில், கடந்த 2016 சட்டப்பேரவைத் தேர்தலின் போது மே 23-ஆம் தேதி விஜயபாஸ்கர் தாக்கல் செய்த சொத்து விவரம் அறியப்பட்டது. அதில் அவரது சொத்து மதிப்பு ரூ.2,51,91,378 ஆக இருந்தது.

2016 முதல் 2021வரை போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர், 2021 பேரவைத் தேர்தலைச் சந்தித்தபோது 2021, மார்ச் 18-ஆம் தேதி அவரது சொத்து மதிப்பு தாக்கல் செய்யப்பட்ட போது அதன் மதிப்பு ரூ.8,62,35,648 ஆகும்.

2016 முதல் 2021 வரையிலான 5 ஆண்டுகளில் ரெயின்போ புளூமெட்டல்ஸ், ரெயின்போ டையர்ஸ் நிறுவனங்களால் 8 வகையான சொத்துகள் வாங்கப்பட்டுள்ளன. இதில் ரெயின்போ டையர்ஸ் சார்பில் ரூ.2,90,81,500 மதிப்பிலான 6 சொத்துகளும், ரெயின்போ புளூமெட்டல்ஸ் சார்பில் 4,48,24,000 ரூபாய் மதிப்பிலான 2 சொத்துகளும் வாங்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், அவரது மனைவி விஜயலட்சுமி, அவரது சகோதரர் சேகர் பெயரில் வாங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மொத்த வரவு-செலவு, வங்கிக் கணக்கு, காப்பீட்டுப் பத்திரங்கள் என அனைத்து வரவு செலவுகளும் போக, கணக்கில் வராமல் ரூ.2,28,38,487 மதிப்புக்கு வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தது சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, 2016 முதல் 2021 வரையிலான 5 ஆண்டுகளில் 55 சதவிகித அளவுக்கு சொத்துகள் அதிகம் சேர்த்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூத்த தமிழறிஞர் இரா.இளங்குமரனார் காலமானார்



**திருப்பரங்குன்றம், ஜூலை 25:** தமிழறிஞர் புலவர் இரா. இளங்குமரனார் (94), உடல் நலக் குறைவு காரணமாக மதுரை திருநகரில் உள்ள அவரின் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

திருநெல்வேலிமாவட்டம், வாழவந்தாள்புரம் கிராமத்தில் 1927 ஜனவரி 30-ஆம் தேதி பிறந்த இளங்குமரனார், திருநகரில் உள்ள அரசுப் பள்ளியில் 1946 ஏப்ரல் 8-ஆம் தேதி தமிழ் ஆசிரியராக தனது தமிழ்ப் பணியைத் தொடங்கினார்.

சென்னை பல்கலைக்கழகத்தில் 1951-ஆம் ஆண்டு புலவர் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்னர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், இதழாசிரியர் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டார்.

மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் 1958-இல் 'குண்டலகேசி' எனும் நூலை வெளியிட்டார். தொடர்ந்து, இவரின் 'திருக்குறள் கட்டுரைத் தொகுப்பு' எனும் நூலை 1963-இல் முன்னாள் பிரதமர் நேரு வெளியிட்டார். 'சங்க இலக்கிய வரிசையில் புறநானூறு' எனும் நூலை 2003-இல் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வெளியிட்டார். தொடர்ந்து, எங்கும் பொழியும் இன்பத்தமிழ், திருக்குறள் தமிழ் மரபு என்பன உள்ளிட்ட 500-க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றினார்.

மேலும் இவர், திருச்சியை அடுத்த அல்லூர் பகுதியில் திருவள்ளுவர் தவசாலை எனும் தமிழ் ஆராய்ச்சிக் கூடத்தை நடத்தி வந்தார். தமிழகமெங்கும் பல்வேறு கல்லூரிகள் மற்றும் தமிழ் மொழி குறித்த கருத்தரங்குகளில் திருக்குறள் குறித்து சிறப்புரையாற்றியுள்ளார்.

இவர் தமிழ்வழி திருமணங்களையும் அதிகளவில் நடத்தி வைத்துள்ளார். இவரது தமிழ் சேவையைப் பாராட்டி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் தமிழ் செம்மல் விருதும், பாரதிதாசன் பல்கலைக்கழகம் முதுமுனைவர் பட்டமும் வழங்கியுள்ளன. திரு.வி.க. விருது வழங்கி தமிழக அரசு கெளரவித்துள்ளது.

இவருக்கு, ஓய்வுபெற்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலர் இளங்கோ மற்றும் பாரதி ஆகிய இரு மகன்களும், கலைமணி மற்றும் ஓய்வுபெற்ற இந்தியன் வங்கி மேலாளரான திலகவதி ஆகிய இரு மகள்களும் உள்ளனர்.

இளங்குமரனாரின் இறுதிச்சடங்கு திங்கள்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திருநகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகிறது.

தொடர்புக்கு - 94431 30603.

# செவிலியர் வீட்டில் 8 குப்பி கோவிஷீல்ட் மருந்து பறிமுதல்

https://t.me/Tamil_epaper2

**திண்டுக்கல், ஜூலை 25:** வேடசந்தூர் அருகே செவிலியர் வீட்டில் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட சோதனையின் போது 8 குப்பி கோவிஷீல்ட் மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் அடுத்துள்ள கொன்னம்பட்டியைச் சேர்ந்த பெருமாள் மனைவி தனலட்சுமி (58). கரூர் கஸ்தூரிபாய் தாய்சேய் நல மையத்தில் அரசு மகப்பேறு உதவியாளர். கரோனா தொற்று பாதிப்பு அதிகரித்ததை அடுத்து, கஸ்தூரிபாய் தாய்சேய் நல மையத்தில் பொதுமக்களுக்கு இலவசமாக தடுப்பூசி செலுத்தும் பணியில் கடந்த சில மாதங்களாக தனலட்சுமி ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், அந்த மையத்திலிருந்து கோவிஷீல்ட் மற்றும் கோவேக்ஸின் தடுப்பூசி மருந்து குப்பிகளை, தனலட்சுமி தனது வீட்டிற்கு எடுத்து வந்துள்ளார். தனது வீட்டில் வைத்து, உறவினர்களுக்கும், அக்கம் பக்கத்தினருக்கும் கட்டணம் வசூலித்துக் கொண்டு தனலட்சுமி தடுப்பூசி செலுத்தி வந்துள்ளார்.

இதுகுறித்து எரியோடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மகேஸ்வரிக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில், மருத்துவர்கள் சுரேன், அருண் ஆகியோர் அடங்கிய சுகாதாரக் குழுவினருடன் தனலட்சுமியின் வீட்டிற்கு ஞாயிற்றுக்கிழமை சென்று சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, கோவிஷீல்ட் தடுப்பூசிகளை செலுத்துவதற்காக தனலட்சுமி தயார் நிலையில் இருந்துள்ளார்.



செவிலியர் தனலட்சுமியிடம் (இடமிருந்து 2ஆவது) ஞாயிற்றுக்கிழமை விசாரணை மேற்கொண்ட சுகாதாரத்துறை அதிகாரிகள்.

அங்கு 8 குப்பிகளில் கோவிஷீல்ட் மருந்து இருப்பது கண்டறியப்பட்டது. ஒரு குப்பியிலுள்ள மருந்தினை பயன்படுத்தி 10 முதல் 12 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. 8 குப்பிகளையும் கைப்பற்றிய சுகாதாரத்துறையினர், தனலட்சுமியிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டனர்.

**பொதுமக்கள் புகாரால் சிக்கிய தனலட்சுமி:** ஆரம்ப சுகாதார நிலையங்களில் கோவிஷீல்ட் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வந்த பொதுமக்கள் மூலம், தனலட்சுமி தடுப்பூசி செலுத்தும் விவரம் தெரிய வந்துள்ளது. அதன்பேரில், சோதனை நடத்த சென்ற சுகாதாரக் குழுவினரிடம் தனலட்சுமி எளிதாக சிக்கிக் கொண்டார். விசாரணைக்கு பின்பு அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பழனி சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கரோனா தொற்றுப் பாதிப்பு 1.3 சதவீதமாக குறைந்தது

**சென்னை, ஜூலை 25:** தமிழகத்தில் கரோனா தொற்று பாதிப்பு விகிதம் 1.3 சதவீதமாக குறைந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை மொத்தம் 1.44 லட்சம் பரிசோதனைகள் மேற்கொண்டதில் 1,808 பேருக்கு மட்டுமே பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதிதாக தொற்றுக்குள்ளானோரில் அதிகபட்சமாக கோவையில் 169 பேருக்கும், ஈரோட்டில் 130 பேருக்கும், சென்னையில் 126 பேருக்கும் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் இதுவரை கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 லட்சத்து 48,497-ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே, நோய்த் தொற்றிலிருந்து ஞாயிற்றுக்கிழமை 2,447 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து மாநிலத்தில் இதுவரை கரோனாவிலிருந்து விடுபட்டோரின் எண்ணிக்கை 24.91 லட்சத்தைக் கடந்துள்ளது. மக்கள் நல்வாழ்வுத் துறை தகவல்படி மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் தற்போது மருத்துவக் கண்காணிப்பில் 23,364 பேர் உள்ளனர். மற்றொருபுறம், தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 22 பேர் பலியானதை அடுத்து மாநிலம் முழுவதும் இதுவரை நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 33,911-ஆக அதிகரித்துள்ளது.

# தொழிலாளர் மேலாண்மை படிப்புகள்: விண்ணப்பிக்க ஆக.24 கடைசி

**சென்னை, ஜூலை 25:** தொழிலாளர் மேலாண்மை படிப்புகளில் சேர விரும்புவோர், ஆக.24-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

இது தொடர்பாக தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) மற்றும் பிஜி.டி.எல்.ஏ (தொழிலாளர் நிர்வாகத்தில் முதுநிலை மாலை நேரப் பட்டயப்படிப்பு), தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் (வார இறுதி) பட்டயப் படிப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. விருப்பமுள்ள பிளஸ் 2 முடித்த மாணவர்கள் பட்டப்படிப்புக்கும், ஏதேனும் ஒரு பட்டம் பெற்ற மாணவர்கள் முதுநிலை பட்ட மற்றும் பட்டயப் படிப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பவர்கள் மதிப்பெண் அடிப்படையில் அரசு விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

விண்ணப்பங்களைப் பெற tilschennai@tn.gov.in என்ற மின்னஞ்சலுக்கு, தங்கள் பெயர், தொலைபேசி எண், முகவரி மற்றும் மின்னஞ்சல் விவரங்களை அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன், விண்ணப்பக் கட்டணம் ரூ. 200, எஸ்சி, எஸ்டி பிரிவினர் (சாதிச்சான்றிதழ் நகல் தாக்கல் செய்ய வேண்டும்) ரூ.100-க்கான வங்கி வரைவோலையை The Director, Tamilnadu Institute of Labour Studies, Chennai என்ற பெயரில் எடுத்து பதிவுத்தபால், விரைவு அஞ்சல், கூரியர் ஆகியவற்றில் ஏதாவது ஒரு வழியில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் ஆக.24 ஆகும்.

மேலும் விவரங்களுக்கு, ஒருங்கிணைப்பாளர் (சேர்க்கை) முனைவர் இரா. ரமேஷ்குமார், உதவிப்பேராசிரியர் (98841 59410) தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், மின்வாரிய சாலை, மங்களபுரம் (அரசு ஐ.டி.ஐ. பின்புறம்), அம்பத்தூர், சென்னை 600 098 என்ற முகவரியை நேரிலோ, 044 2956 7885, 2956 7886 ஆகிய தொலைபேசி எண்களையோ, tilschennai@tn.gov.in என்ற இணையதளத்தையோ அணுகலாம்.

U.547, பெருமாநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்
ஏல அறிவிப்பு
அசையா சொத்து ஏல விளம்பரம்

LVB | DBS
லக்ஷ்மி விலாஸ் வங்கி
(இப்பொழுது DBS வங்கி இந்தியா லிமிடெட்)
ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் மீட்பு
கோரிக்கை அறிவிப்பு

தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

திங்கள்கிழமை 26-7-2021
பிலவ ஆடி 10 ஹிஜ்ரி 1442 துல்ஹஜ்ஜு 15

# தீர்ப்புக்கு அப்பால்...

கூட்டாட்சித் தத்துவத்துக்கு வலு சேர்ப்பதாகவும், மத்திய அரசில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் 'கூட்டுறவு' துறைக்குப் பின்னடைவு ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது சமீபத்தில் உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கும் ஒரு தீர்ப்பு. நீதிபதி ஆர்.எப். நாரிமன் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு, பெரும்பான்மை அடிப்படையில் வழங்கியிருக்கும் அந்தத் தீர்ப்பு, 'கூட்டுறவு' சங்கங்கள் தொடர்பானது. 'கூட்டுறவு' என்பது மாநிலப் பட்டியலில் இருப்பதால் அதில் தலையிடுவதற்கு மத்திய அரசுக்கு சில வரம்புகள் இருப்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது அந்தத் தீர்ப்பு.

இந்தியாவில் பொருளாதாரத்திலும், விவசாயத்திலும் வளர்ச்சி அடைந்த பல மாநிலங்களில், கூட்டுறவு சங்கங்கள் மிகப் பெரிய பங்கு வகிக்கின்றன. குஜராத்தின் 'ஆனந்த் பால் கூட்டுறவு சங்கம்' (அமுல்) அடைந்திருக்கும் வெற்றி அபரிமிதமானது. பால் உற்பத்தி சங்கங்கள், கூட்டுறவு பண்டக சாலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் என்று மிகப் பரவலான கட்டமைப்பை உள்ளடக்கியதாக இருக்கிறது கூட்டுறவுத் துறை.

மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், 97-ஆவது அரசியல் சாசனத் திருத்த மசோதா 2012 பிப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. பெரும்பாலான மாநில சட்டப்பேரவைகளின் அங்கீகாரத்தையும் பெற்றது அந்த திருத்தச் சட்டம். நாடு தழுவிய அளவிலுள்ள கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை முறைப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டம், அரசியல் சாசன விதிமுறையின்படி மூன்றில் இரண்டு பங்கு சட்டப்பேரவைகளின் அங்கீகாரத்தைப் பெறவில்லை. அதன் அடிப்படையில்தான் இப்போது உச்ச நீதிமன்றம் அந்த சட்டத் திருத்தத்தை நிராகரித்திருக்கிறது.

மூன்று நீதிபதிகள் அமர்வில் இரண்டு நீதிபதிகள், மூன்றில் இரண்டு பங்கு சட்டப்பேரவைகளின் அங்கீகாரம் பெறாததால் சட்டத் திருத்தத்தை மட்டும் நிராகரித்திருக்கிறார்கள். மூன்றாவது நீதிபதியான கே.எம். ஜோசப், ஒட்டுமொத்த சட்டத்தையுமே அரசியல் சாசனத்திலிருந்து அகற்ற வேண்டுமென்றும், அது மாநிலங்களின் உரிமையில் தலையிடுவதாக இருக்கிறது என்றும் தெரிவித்திருக்கும் கருத்து பதிவாகியிருக்கிறதே தவிர, பெரும்பான்மை ஆதரவில்லாததால் அது அங்கீகரிக்கப்படவில்லை.

மன்மோகன் சிங் அரசு கொண்டுவந்த இந்தச் சட்டம் குஜராத் உயர்நீதிமன்றத்தால் ஏற்கெனவே கேள்விக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மத்திய அரசு மேல் முறையீடு செய்ததைத் தொடர்ந்து, இப்போது நீதிபதி நாரிமன் தலைமையிலானஅமர்வு தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

மத்திய அரசு மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்களின் ஒப்புதலுடன் மீண்டும் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றலாம். இல்லையேல், இப்போது இருக்கும் அதிகாரத்தின் அடிப்படையில் தொடரலாம். இப்போதைய நிலையில், இரண்டாவது யோசனைக்கான வாய்ப்புதான் காணப்படுகிறது.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகளில் கூட்டுறவு சங்கங்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடு, நிர்வாகிகளுக்கான தேர்தல், முறைகேடுகள் உள்ளிட்டவை விமர்சனங்களுக்கு உள்ளாவது என்பது புதிதொன்றுமல்ல.

கூட்டுறவு வங்கிகளில் நடைபெறும் மோசடிகளையும், கூட்டுறவு சங்கங்களின் மூலம் நிர்வாகிகள் பொதுப்பணத்தை தங்களுக்கு வேண்டியவர்களுக்கு கடனாக வழங்குவதும் தடுக்கப்பட வேண்டும் என்கிற குறிக்கோளுடன்தான் 2012-இல் 97-ஆவது சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால், கூட்டுறவு என்பது மாநிலப் பட்டியலைச் சேர்ந்தது என்பதால், அதிலுள்ள '9பி' பிரிவை உச்சநீதிமன்றம் ரத்து செய்திருக்கிறது. கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழுவின் எண்ணிக்கை, உறுப்பினர்களுக்கு எதிரான குற்ற நடவடிக்கைகள், ஊழியர்களை வேலையிலிருந்து அகற்றுவதற்கான விதிமுறைகள், கணக்குத் தணிக்கை உள்ளிட்டவை ரத்து செய்யப்பட்ட '9பி' பிரிவில் அடங்கும்.

சட்டத் திருத்தத்தின் மூலம் கூட்டுறவு சங்கங்கள் அரசியல் சாசனத்தின் '19(1)(சி)' பிரிவில் இணைக்கப்பட்டது. அதன் மூலம், கூட்டுறவு சங்கங்களை அமைத்துக் கொள்வது என்பது அடிப்படை உரிமையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதேபோல தன்னிச்சையான செயல்பாடு, தேர்தெடுப்பில் ஜனநாயக உரிமை, தொழில்முறை மேலாண்மை உள்ளிட்டவற்றை மேம்படுத்த மாநிலங்கள் கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிக்க வழிகோலும் '43பி' பிரிவு சேர்க்கப்பட்டது. இவை இரண்டும் உச்சநீதிமன்ற வழக்கில் கேள்வி எழுப்பப்படவில்லை என்பதால், தீர்ப்புக்குப் பிறகும் தொடரும்.

கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டுடன் தொடர்புடைய '9பி' பிரிவை மட்டும்தான் உச்சநீதிமன்றம் முழுமையாக ரத்து செய்திருக்கிறது. இப்போது உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏறத்தாழ ஏற்றுக்கொண்டிருக்கிறது என்றாலும், '9பி' பிரிவை முற்றிலுமாக ரத்து செய்யவில்லை.

கூட்டுறவு சங்கங்கள் மாநிலப் பட்டியலில் சேர்ந்தவை என்பதால் மத்திய அரசு தலையிடக் கூடாது என்கிற உயர்நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம், ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவு சங்கங்கள், ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மத்திய அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டவை என்று நீதிபதி நாரிமன் தலைமையிலான அமர்வின் தீர்ப்பு தெளிவுபடுத்தியிருக்கிறது.

கூட்டுறவு சங்கங்கள் அரசியல்வாதிகளின் பிடியில் சிக்கியிருப்பதும், அவற்றில் முறைகேடுகள் மலிந்திருப்பதும் உலகறிந்த உண்மை. மாநிலப் பட்டியலோ, மத்தியப் பட்டியலோ கடுமையான தணிக்கைக்கும் கண்காணிப்புக்கும் அவை உள்ளடுத்தப்பட வேண்டும் என்பதில் சந்தேகமே இல்லை!

**நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்.**
*நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் (செயலுக்கு உரியவனாக) ஆளப்படுவான்.*
**திருக்குறள் (எண்: 511) அதிகாரம்: தெரிந்து வினையாடல்**

# எல்ஐசி: வீழ்த்தப்படும் நெடுமரம் !

எல்ஐசி நிறுவனத்தின் 'பொதுப்பங்கு வெளியீடு' (ஐபிஓ) அறிவிப்பு மூலம் அந்நிறுவனத்தைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. ஆனால், மத்திய அரசு மிகவும் கவனமாக, மிகப்பெரிய நிறுவனமான எல்ஐசி-யில் அரசுக்கு உள்ள பங்குகளை சிறிதளவு விலக்கிக்கொள்ளும் 'பங்கு விலக்கல்' நடவடிக்கைதான் இது என்று கூறியுள்ளது.

'பொதுப் பங்கு வெளியீடு' அல்லது 'பங்கு விலக்கல்' என்ற பெயரில் எல்ஐசி-யைப் பகுதியளவில் தனியார்மயமாக்கும் நடவடிக்கைக்கு இப்போது என்ன அவசியம் ஏற்பட்டுள்ளது? இந்தியாவில் 29 கோடி மக்களுக்கு ஆயுள் காப்பீடு அளித்து சமூகநீதியில் பணிக்கும் நிறுவனமாக எல்ஐசி உள்ளது. அப்படி இருக்கும்போது அதைத் தனியார்மயமாக்குவது ஏன்?

எல்ஐசி பொதுப் பங்கு வெளியீடு மூலம் ரூ.90,000 கோடி முதல் ரூ.1 லட்சம் கோடி வரை கிடைக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் எல்ஐசி-யின் பங்கு மதிப்பை கணக்கிடுவது மிகவும் கடினம். எல்ஐசி உருவாக்கப்பட்ட காரணம், அதன் வளர்ச்சி, சாதனைகளைப் பார்க்கும்போது இப்படிப்பட்ட ஒரு பிரமாண்டமான ஏகபோக பொதுத் துறை காப்பீட்டு நிறுவனத்தை விற்க அரசு முயலுவது நகைப்புக்குரியதே.

இந்தியாவின் முதல் ஆயுள் காப்பீட்டு நிறுவனமான ஓரியண்டல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம் பிரிட்டனில் இருந்து 1818-ஆம் ஆண்டு கொல்கத்தாவில் தொடங்கப்பட்டது. 1834-ஆம் ஆண்டு இந்த நிறுவனம் வீழ்ந்தது என்றாலும், அதுவரை ஐரோப்பிய சமூகத்துக்கு மட்டுமே சேவைகளைச் செய்து வந்தது.

இதுபோன்று தொடங்கப்பட்ட பல வெளிநாட்டு காப்பீட்டு நிறுவனங்கள் இந்தியர்களுக்கு ஆயுள் காப்பீடு அளிக்க முன்வரவில்லை. பாபு மட்டி லால் சீல் போன்ற நபர்களின் முயற்சியால் பிரிட்டனைச் சேர்ந்த நிறுவனங்கள் இந்தியர்களுக்குக் காப்பீடு அளிக்க முன்வந்தன. எனினும், இந்தியர்களுக்குக் காப்பீடு வழங்க கூடுதலாக காப்பீட்டு பிரீமியம் வசூலிக்கப்பட்டு வந்தது.

தேசியமயமாக்கப்படுவதற்கு முன்பு 25 காப்பீட்டு நிறுவனங்கள் கலைக்கப்படும் நிலைக்குச் சென்றன. 80 நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் நிலைமை குறித்த அறிக்கையை அளிக்கவில்லை. 245 ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களும், 108 பொதுக் காப்பீட்டு நிறுவனங்களும் காப்பீட்டுதாரர்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டன.

ஜவாஹர்லால் நேரு ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட விவியன் போஸ் கமிஷன், காப்பீட்டு நிறுவனங்களில் நடைபெறும் முறைகேடுகள், பெருநிறுவனங்கள் முறைகேடான வகையில் காப்பீட்டுத் தொகையைப் பெறுவது, பெரிய நிறுவனங்கள் தங்கள் சகோதர நிறுவனங்கள் மூலம் தனியாக காப்பீட்டு நிறுவனங்களை நடத்தி வருவது போன்ற முறைகேடுகளைக் கண்டறிந்தது.

இதையடுத்து, காப்பீடு செய்யும் மக்களின் நலன்களைக் காப்பதற்காக 1956-இல் எல்ஐசி நிறுவனம் தொடங்கப்பட்டது. 154 இந்திய, 16 வெளிநாட்டுக் காப்பீட்டு நிறுவனங்கள், 75 வருங்கால வைப்பு நிதி அமைப்புகளை இணைத்து எல்ஐசி உருவாக்கப்பட்டது. இதற்காக அப்போது அரசு 5 கோடி ரூபாய் முதலீடு செய்தது.



பி.எஸ்.எம். ராவ்

பின்னர் எல்ஐசி-யின் முதலீடு ரூ.100 கோடியாக உயர்த்தப்பட்டது. இந்தத் தொகையை எல்ஐசி உள்நாட்டிலேயே உருவாக்கிக் கொண்டதால், அது அரசாங்கத்துக்குக் கூடுதல் செலவாக அமையவில்லை.

காப்பீடுதாரர்களுக்கு மத்திய அரசு உத்தரவாதம் அளிக்கும் எல்ஐசி சட்டத்தின் 37-ஆவது பிரிவைப் போன்ற ஒரு பாதுகாப்பை அரசு அளித்தால் மட்டுமே, எல்ஐசி-யின் தற்போதைய ரூ.25,000 கோடி மூலதன அதிகரிப்பு பயன்தரும்.

1999-ஆம் ஆண்டு அரசின் ஏகபோக நிறுவனங்களுக்கு எதிராகப் போட்டி நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டன. மேலும், பொதுத் துறை நிறுவனங்களில் அரசின் ஆதரவு குறைக்கப்பட்டது என்றாலும் எல்ஐசி-யின் வளர்ச்சி தொடர்ந்து தனித்துவமாக இருந்தது.

**எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் ரூ.2.10 லட்சம் கோடி வீட்டுக்கடன் வழங்கியுள்ளது. எல்ஐசி பரஸ்பர நிதி நிறுவனம் ரூ.3,01,184 கோடி பரஸ்பர நிதி விற்பனை செய்துள்ளது. எல்ஐசி ஓய்வூதிய நிதி நிறுவனம் ரூ.1,21,027.68 கோடி நிதியை நிர்வகித்து வருகிறது.**

மும்பையை தலைமையிடமாகக் கொண்ட எல்ஐசி-க்கு 8 மண்டல அலுவலகங்கள் மற்றும் 113 பிராந்திய அலுவலகங்கள், 2,048 கிளைகள், 1,526 சிறிய அலுவலகங்கள், 1,178 துணை அலுவலகங்கள் உள்ளன. இதுதவிர பிரிட்டன், ஃபிஜி, மோரீஷஸ் போன்ற வெளிநாடுகளிலும் எல்ஐசி கிளைகள் உள்ளன.

பஹ்ரைன், நேபாளம், இலங்கை, கென்யா, சவூதி அரேபியா, வங்கதேசம் ஆகிய நாடுகளில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் எல்ஐசி செயல்பட்டு வருகிறது. சிங்கப்பூரில் எல்ஐசி-க்குத் துணை நிறுவனமும் உள்ளது. இதன் மூலம் அந்த நிறுவனம் எந்த அளவுக்கு வேரூன்றி பரவியுள்ளது என்பதை அறிய முடிகிறது.

2019-20 நிலவரப்படி எல்ஐசி-யின் ஆயுள் நிதி ரூ. 31,14,496.05 கோடியாக உள்ளது. இது அந்த நிறுவனத்தின் இருப்புநிலை அறிக்கையில் உள்ள தொகையான ரூ.31 லட்சம் கோடியைவிட அதிகமாகும். பாரத ஸ்டேட் வங்கிக்கு அடுத்தபடியாக (ரூ.39.51 லட்சம் கோடி சொத்துகள்), இந்தியாவில் இரண்டாவது பெரிய நிதி சேவை நிறுவனமாக எல்ஐசி உள்ளது.

அந்த நிறுவனம் காப்பீடுதாரர்களுக்கு உறுதியளித்துள்ள நிதி ரூ.56,86,035.01 கோடியாகும். எல்ஐசியில் 1,14,498 ஊழியர்களும், 10,80,809 செயல்பாட்டில் உள்ள முகவர்களும் பணியில் உள்ளனர். மொத்த முகவர்கள் எண்ணிக்கை 12,08,826 ஆகும் (2019-20 நிலவரப்படி).

இதன் மூலம் 13.23 லட்சம் பேர் நேரடியாகப் பணியில் உள்ளது தெளிவாகிறது. முதலாண்டு பிரீமியம் செலுத்தப்படுவதன் அடிப்படையில் காப்பீட்டுச் சந்தையில் எல்ஐசி-யின் பங்கு 68.74 சதவீதமாகும். புதிய பாலிசிக்கள் விற்பனை செய்வதில் எல்ஐசி-யின் பங்கு 75.90 சதவீதமாக உள்ளது (2019-20 நிலவரப்படி).

எல்ஐசி-யில் கிடைக்கும் வருவாயில் 5 சதவீதத்தை அரசு எடுத்துக் கொள்கிறது. 95 சதவீதம் காப்பீட்டு பாலிசி வைத்திருப்போருக்கே திருப்பி அளிக்கப்படுகிறது. இது எல்ஐசி-யில் மட்டுமே உள்ள சிறப்பு அம்சமாகும்.

இது தவிர எல்ஐசி மூலம் அரசுக்கு வரி வருவாய் அதிகஅளவில் கிடைத்து வருகிறது. 2019-20 நிதியாண்டில் ரூ.10,225.24 கோடி வரி (சேவை வரி உள்பட) எல்ஐசி மூலம் அரசுக்குக் கிடைத்துள்ளது.

நிறுவப்பட்ட காலத்தில் இருந்தே காப்பீடுதாரர்களுக்கு மிகச்சிறந்த சேவையை அளித்து வரும் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனமாக எல்ஐசி திகழ்கிறது. 1993-ஆம் ஆண்டு ஆர்.என் மல்ஹோத்ரா கமிஷன் அளித்த அறிக்கையின்படி 97 சதவீத வாடிக்கையாளர்கள் எல்ஐசி-யின் சேவை மிகச்சிறப்பாக இருப்பதாகக் கூறியுள்ளனர்.

இது தவிர நாட்டின் மிகப்பெரிய முதலீட்டாளராகவும் எல்ஐசி உள்ளது. 2020 மார்ச் 31-ஆம் தேதி வரை ரூ.30,69,941.67 கோடியை எல்ஐசி முதலீடு செய்துள்ளது. இது வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் எஃப்ஐஐ முதலீடுகளைவிட அதிகமாகும்.

அரசுக்கு நிதிரீதியாக ஆதரவு அளிக்கும் நிறுவனமாகவும் எல்ஐசி உள்ளது. 2019-20 காலகட்டத்தில் மத்திய அரசின் ரூ. 1,78,717.61 கோடி கடன் பத்திரங்களை வாங்கியுள்ளது. இது தவிர பல்வேறு மாநில அரசுகளின் ரூ.1,28,483.62 கோடி மதிப்பிலான கடன் பத்திரங்களிலும் முதலீடு செய்துள்ளது.

இவை தவிர மின்சாரம், வீட்டு வசதித் துறை, குடிநீர் விநியோகத் திட்டங்கள், சாலை, பாலங்கள் அமைப்பது, ரயில்வே திட்டங்களிலும் ரூ.52,297.79 கோடியை எல்ஐசி முதலீடு செய்துள்ளது. இவ்வாறாக மத்திய, மாநில அரசுகளின் கடன் பத்திரங்கள், பல்வேறு நிறுவனப் பங்குகள், பல்வேறு சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடு என ரூ.24,01,456.50 கோடியை எல்ஐசி முதலீடு செய்துள்ளது.

இதற்கு மேல் எல்ஐசி-க்கு சொந்தமாக நிலம், கட்டடங்களும் உள்ளன. அந்த நிறுவனத்தின் புத்தக மதிப்புப்படி ரூ.1,750 கோடிக்கு மேல் நிலம், கட்டடங்கள் எல்ஐசி-யிடம் உள்ளன. இவற்றின் சந்தை மதிப்பு இதைவிட பல மடங்கு அதிகமாக இருக்கும்.

ஆயுள் காப்பீட்டுத் துறையுடன் நின்றுவிடாமல் வேறு சில துறைகளிலும் எல்ஐசி தடம் பதித்துள்ளது. எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் நிறுவனம் ரூ.2.10 லட்சம் கோடி வீட்டுக்கடன் வழங்கியுள்ளது. எல்ஐசி பரஸ்பர நிதி நிறுவனம் ரூ.3,01,184 கோடி பரஸ்பர நிதி விற்பனை செய்துள்ளது. எல்ஐசி ஓய்வூதிய நிதி நிறுவனம் ரூ. 1,21,027.68 கோடி நிதியை நிர்வகித்து வருகிறது.

கடந்த ஜனவரி 2019-ஆம் ஆண்டு ஐடிபிஐ வங்கியின் 51 சதவீதப் பங்குகளை எல்ஐசி வாங்கியது. இதன்மூலம் அந்த வங்கியின் ரூ. 2,22,424 கோடி டெபாசிட்டை நிர்வகிப்பதில் எல்ஐசி பங்கேற்றுள்ளது. அரசு பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்ய விரும்பியபோதெல்லாம் எல்ஐசி-யிடமே அதனை விற்பனை செய்து கொண்டது.

உதாரணமாக, 2012-இல் ஓஎன்ஜிசி பங்கு விலக்கல் நடவடிக்கையின்போது ரூ.6,000 கோடி மதிப்பிலான பங்குகளை எல்ஐசி வாங்கியது. என்எம்டிசி நிறுவனத்தில் ரூ. 9,928 கோடி, என்டிபிசி நிறுவனத்தில் ரூ. 8,480 கோடி பங்குகளை எல்ஐசி வாங்கியது. இதுதவிர செயில் நிறுவனத்தின் 71 சதவீத பங்குகளை எல்ஐசி-யிடமே அரசு விற்பனை செய்தது.

மேலும் பெல் நிறுவனத்திடம் இருந்து ரூ.2,685 கோடிக்கும், கோல் இந்தியாவிடம் இருந்து ரூ.7,000 கோடிக்கும், இண்டியன் ஆயில் நிறுவனத்திடம் இருந்து ரூ.8,000 கோடிக்கும், ஜிஐசி நிறுவனத்திடம் இருந்து ரூ.8,000 கோடிக்கும், நியூ இண்டியா அஸ்யூரன்ஸ் நிறுவனத்திடம் இருந்து ரூ.6,500 கோடிக்கும், ஹெச்ஏஎல் நிறுவனத்திடம் இருந்து ரூ.2,900 கோடிக்கும் எல்ஐசி பங்குகளை வாங்கியுள்ளது. ஐடிபிஐ நிறுவனத்தின் 51 சதவீத பங்குகள் என பல கோடி ரூபாய் மதிப்பிலான பங்குகளை அரசுக்காக எல்ஐசி வாங்கி வைத்துள்ளது.

இப்படிப்பட்ட ஒரு நிறுவனத்தை தனியார்மயமாக்குவது அல்லது அரசு கூறுவது போல பங்கு விலக்கல் நடவடிக்கையில் ஈடுபடுவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. பொதுமக்கள், எல்ஐசி பணியாளர்களின் சம்மதம் இல்லாமல் எல்ஐசி-யை தனியார்மயமாக்க அரசுக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதே உண்மை.

கட்டுரையாளர்:
**பொருளாதார நிபுணர்.**

https://t.me/Tamil_epaper2

# கால வரையறை தேவை

**அ. அரவிந்தன்**

கடந்த சில ஆண்டுகளாக மத்தியிலும் மாநிலத்திலும் பல்வேறு துறைகளுக்கான தலைவர் பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பதால், அரசின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் தொய்வு ஏற்படுகிறது. நாட்டின் பிரதான உயர் பதவிகள் பல மாதங்களாக நிரப்பப்படாமலேயே இருக்கின்றன. ஊழியர்களுக்கு பணி உயர்வு அளிப்பதிலும், தலைமை பொறுப்பை நிரப்புவதிலும் தாமதம் நிலவினால், அது தொடர்புடைய துறையின் செயல்பாட்டை மட்டுமன்றி, பணி உயர்வுக்காகக் காத்திருக்கும் ஊழியர்களின் மன உறுதியையும் சீர்குலைத்துவிடும்.

தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவராக பதவி வகித்த எச்.எல். தத்து, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஓய்வு பெற்ற போதிலும், அப்பதவி கடந்த ஜூன் மாதம் வரை நிரப்பப்படாமலேயே இருந்தது. அதன் பின்னரே, உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அருண்குமார் மிஷ்ரா அப்பொறுப்பில் அமர்த்தப்பட்டார்.

இதேபோல், சிபிஐ இயக்குநராகப் பதவி வகித்த ரிஷிகுமார் சுக்லா, கடந்த பிப்ரவரியில் ஓய்வு பெற்றாலும், அதற்குப் பின்னர் மூன்று மாதங்கள் கழித்தே அந்தப் பதவியில் சுபோத்குமார் ஜெய்ஸ்வால் நியமனம் செய்யப்பட்டார். இது மட்டுமின்றி, அண்மையில், தமிழகம், கேரளம் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களுக்கு பரபரப்பாக தேர்தல் நடைபெற்ற சமயத்தில், 65 வயதை பூர்த்தி செய்த காரணத்தால் அப்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் சுனில் அரோரா ஏப்ரல் 12-ஆம் தேதி ஓய்வுபெற நேர்ந்தது.

இதனால், தேர்தல் ஆணையத்தில் இருந்த இரண்டு உறுப்பினர்களில், பணிமூப்பு அடிப்படையில் சுஷில் சந்திரா அடுத்த தலைமை தேர்தல் ஆணையராகப் பதவிக்கு வந்தார். அனுப் சந்திர பாண்டே தேர்தல் ஆணையராக மத்திய அரசால் கடந்த மாதம் 9-ஆம் தேதி நியமிக்கப்பட்டார். இதில் சிக்கல் என்னவென்றால், முக்கியமான பிரச்னைகளில் இருவருக்கும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை என்றால், தீர்வு காண்பது கடினமாகிவிடும்.

இதனிடையே, சிபிஐ இயக்குநர் பதவியை போல், தேர்தல் ஆணையரையும் உயர்நிலைக் குழு கூடி ஆலோசனை நடத்தி, நியமிக்க வேண்டும் எனக்கோரி ஜனநாயக சீர்திருத்த சங்கம் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த பொதுநல வழக்கு நிலுவையில் இருக்கிறது. தேர்தல் ஆணையர் உயர்நிலைக் குழுவால் தான் நியமிக்கப்பட வேண்டும் என்ற சட்ட கமிஷனின் 255-ஆவது பரிந்துரையை மேற்கோள்காட்டி அந்த வழக்கு தொடரப்பட்டது.

பிரதமர் தலைமையிலான அந்த உயர்நிலைக் குழுவில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் என இரு உறுப்பினர்கள் இடம்பெற்ற போதிலும், தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்கும் முறையில் எதிர்க்கட்சித் தலைவரின் பங்கு குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும். காரணம், பிரதமர் தேர்ந்தெடுக்கும் நபரை, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி வழிமொழியும்பட்சத்தில், எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சேபணை தெரிவித்தால், அது ஏற்றுக்கொள்ளப்படாது.

ஆகையால், தேர்தல் ஆணையத்தை தேர்ந்தெடுக்கும் இந்த உயர்நிலைக் குழுவில், குறைந்தபட்சம், அனுபவம் வாய்ந்த இரண்டு உறுப்பினர்களையாவது சேர்த்து, அந்தக் குழுவுக்கு மேலும் வலுவூட்டலாம். அந்த உறுப்பினர்கள் ஓய்வுபெற்ற ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளாகவோ அல்லது மாநில முதல்வர்களாகவோ இருக்கலாம்.

கடந்த ஆண்டு நவம்பரில் ரிஷிகேஷ் சேனாபதியின் ஓய்வுக்குப் பின்னர், நாட்டில் கல்விக் கொள்கையை வகுப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் கல்வி ஆராய்ச்சி - பயிற்சிக்கான தேசிய கவுன்சில் தலையற்று போனது. இதுமட்டுமின்றி, நாட்டில் உள்ள 40-க்கும் மேற்பட்ட மத்திய பல்கலைக்கழகங்களில், பாதிக்கு மேலான பல்கலைக்கழகங்களில் நிரந்தர துணைவேந்தர் கிடையாது.

கடந்த 2019-ஆம் ஆண்டில் போதைப் பொருள் கட்டுப்பாட்டு முகமை (என்சிபி) தலைமைப் பொறுப்பை கூடுதலாக ராகேஷ் அஸ்தானா ஏற்றுக் கொண்டார். அவர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் எல்லைப் பாதுகாப்புப் படையின் இயக்குநர் ஜெனரலாக (டி.ஜி) நியமிக்கப்பட்ட பின்னரும், போதைப்பொருள் கட்டுப்பாட்டு முகமை தலைமைப் பொறுப்பை கூடுதலாக வகிக்க நேரிடுகிறது. என்சிபி இயக்குநர் ஜெனரல் பணியிடத்துக்கு வேறு யாரும் இதுவரை நியமிக்கப்படாததே இதற்குக் காரணம்.

இதேபோல், மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் இயக்குநர் ஜெனரலான குல்தீப் சிங், இப்போது தேசிய புலனாய்வு முகமைக்கும் (என்ஐஏ) கூடுதல் பொறுப்பாக தலைமை வகிக்கிறார். என்ஐஏ தலைவராக இருந்த ஒய்சி மோடி கடந்த மே 31-ஆம் தேதி ஓய்வு பெற்றதால், இந்தப் பொறுப்பை குல்தீப் சிங் கூடுதலாக கவனிக்க நேரிடுகிறது.

இதேபோல், இன்றைக்கு மேக்கேதாட்டு அணை விவகாரம் அதன் உச்சகட்டத்தை எட்டியிருக்கின்ற நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு இதுவரை நிரந்தரத் தலைவர் நியமிக்கப்படவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வறு முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான பணியிடங்கள் பல்வேறு அமைச்சகங்களிலும், ஆணையத்திலும் நிரப்பப்படாமலே இருக்கின்றன. ஆனாலும், ஏனோ இதில் மத்திய - மாநில அரசுகள் கவனம் செலுத்தாமல் இருக்கின்றன. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பதவிகள், நீண்ட காலம் நிரப்பப்படாமல் இருந்தால், அது அந்த அமைப்பையே முடமாக்கிவிடும் என்பதை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் உணர வேண்டும்.

ஆளும் அரசால் அதன் அமைச்சரவையையும், கட்சி நிர்வாகிகளையும் துரிதமாக தேர்ந்தெடுக்க முடிகிறது. அப்படியிருக்க, தேச முக்கியத்துவம் வாய்ந்த பணியிடங்களை நீண்ட நாள்களாக நிரப்பாமல், கிடப்பில் போடுவானேன்? முக்கியமான பதவிகளை நிரப்பாமல் காலந்தாழ்த்துவது தேசத்துக்கு நல்லதல்ல. உயரிய பதவிகளை, அப்பதவிகள் காலியாகப் போகும் ஒரு மாதத்துக்கு முன்பாகவே, அடுத்ததாக நியமிக்கப் படவிருக்கும் நபர்களின் பெயர்களை அறிவிக்கும் வகையில், காலவரையறை வகுக்கப் பட வேண்டும்.

## அன்புள்ள ஆசிரியருக்கு...

edit.dinamani@gmail.com

### குறிக்கோள்

அண்மைக்காலமாக நாடாளுமன்றத்தில் விவாதங்களே நடைபெறாத நிலையே உள்ளது. எதிர்க்கட்சிகள் ஆளுங்கட்சி எதிர்ப்பு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன ('விவாதம்தான் முக்கியம்!' தலையங்கம் 19-7-2021). அவை கூடியதும் மசோதா தாக்கலும் அதனைத் தொடர்ந்து மசோதா குறித்த விரிவான விவாதமும் நடைபெறவேண்டும். ஆனால், அதற்கு முன்னரே பிரச்னைகளை விவாதிக்கவேண்டு எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபடுகின்றன. இதையை சாதகமாக்கி ஆளுங்கட்சியும் விவாதமின்றி மசோதாக்களை நிறைவேற்றுகிறது. அவை நிகழ்ச்சியில் முழுமையாகப் பங்கேற்றால் மட்டுமே ஊறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**தி.ரெ. ராசேந்திரன்,** *திருநாகேஸ்வரம்.*

### புதையல்

மகாகவி பாரதியார் மறைந்த நூற்றாண்டு நினைவைப் போற்றும் தருணத்தில் அவருடைய இறுதிக் கவிதையின் நூற்றாண்டு இது என்கிற செய்தி புதையலாய் கிடைத்துள்ளது ('பாரதியின் இறுதிக்கவிதை நூற்றாண்டு!' பேரா. ய. மணிகண்டன் 19-7-2021). அமெரிக்காவின் பெண் கவிஞர் மாட் ரால்ஸ்டன் ஷர்மன், மகாத்மா காந்தியடிகள் குறித்து எழுதிய கவிதை பாரதியாரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள அவர் அதனைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார் என்கிற செய்தி இதுவரை எவரும் அறியாதது. 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று கூறிய பாரதியார் அதற்குத் தானே ஒரு முன்னுதாரணமாகவும் இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஏ.பி. மதிவாணன்,** சென்னை.

### சிறப்பு

கரோனா தீநுண்மிப் பரவலால் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக உலகமே அச்சத்தில் உறைந்திருக்கிறது. மருத்துவ உலகும் கூட, என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து, பின்னர் ஆய்வுகளை மேற்கொண்டு, தற்போதைக்கு தடுப்பூசி ஒன்றுதான் இதற்குத் தீர்வு என்பதைக் கண்டறிந்துள்ளது ('பிந்தைய பாதிப்புகளை வெல்வோம்' 19-7-2021). இந்த நிலையில் எளிதில் கிடைக்கக்கூடிய மூலிகைப் பொருள்களைக் கொண்டே தீநுண்மி பாதிப்புக்குப் பிந்தைய சிகிச்சை முறைகளை சொல்லியிருப்பது சிறப்பு.

**கோ. ராஜேஷ் கோபால்,** *அரவங்காடு.*

## வரலாற்று நிகழ்வு

அனல் தெறிக்கும் கவிதைகளால் தேசியக்கனல் மூட்டி இந்திய விடுதலைக்கு வித்திட்ட மகாகவி பாரதியார், திலகர்வழி தீவிரவாதத்தில் பிடிப்புற்றிருந்தாலும், மகாத்மா காந்தியின் அற வழிப் போராட்டங்களால் இந்திய விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தார் ('பாரதியின் இறுதிக் கவிதை நூற்றாண்டு!' ய. மணிகண்டன் 19-7-2021). மாட் ரால்ஸ்டன் ஷர்மன் எனும் அமெரிக்கப் பெண் கவிஞர் 'இந்தியாவின் அழைப்பு' என்னும் தலைப்பில் தேசப்பிதா காந்தியடிகள் குறித்து எழுதிய வினா-விடை வடிவிலான கவிதையை பாரதியார் மொழிபெயர்த்து 'சுதேசமித்திரன்' நாளேட்டில் வெளியிட்டது வரலாற்று நிகழ்வாகும். காந்தியடிகளின் அழைப்பை இந்தியத் தாயின் அழைப்பாகவே பாடியுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த இறுதிக் கவிதையை பாரதியார் நினைவு நூற்றாண்டில் போற்றிப் பயன்கொள்வோம்.

**புலவர் அ. சிவராம சேது,** *திருமுதுகுன்றம்.*

### இன்றியமையாதது

ஒருபுறம் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டே மறுபுறத்தில் எல்லை தாண்டிஆக்கிரமிப்பு செய்வதை சீனா எப்பொழுதுமே வழக்கமாகக் கொடுள்ளது ('நல்லுறவும் எல்லையும்!' தலையங்கம் 20-7-2021). மேலும், தெற்காசியப் பகுதியில் தான் ஒரு வல்லரசு என்பதை நிறுவுவதற்காக ஜப்பான், தைவான், நேபாளம் மற்றும் இந்தியாவுடன் அடிக்கடி எல்லையில் படைக்குவிப்பு செய்வதிலும், அத்துமீறலிலும் சீனா ஈடுபட்டு வருகிறது. இத்தகைய சூழலில், சீனாவின் எல்லைப் பகுதியில் உள்ள அண்டை நாடுகள் தங்களுக்குள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். சீனாவின் போக்கு குறித்து உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண வேண்டும்.

**வளவ. துரையன்,** *கடலூர்.*

### கண்கூடு

கர்நாடக மாநிலம் மேக்கேதாட்டில் அணைக்கட்டுவதற்கு அம்மாநில அரசு முயன்று வருவதை மத்திய அரசு உடனே தடுத்து நிறுத்த வேண்டும். காவிரி நீரால் பயனடையும் மாநிலங்களின் அனுமதி பெறாமல் அணை கட்டக்கூடாது என்று ஏற்கெனவே உச்சநீதிமன்றம் கூறியிருக்கும் நிலையில் கர்நாடக அரசின் இந்த தன்னிச்சையான செயல்பாடு கண்டிக்கத்தக்கது ('மேக்கேதாட்டு அணை: தமிழகத்துக்கு துரோகம்!' முனைவர் வைகைச்செல்வன் 20-7-2021). ஆண்டுக்கு ஆண்டு கர்நாடகத்தின் நீர்ப்பாசனப் பரப்பு அதிகரித்துக்கொண்டே போவதும், தமிழகத்தின் நீர்ப்பாசனப் பரப்பு சுருங்கிக்கொண்டே போவதும் கண்கூடு. ஒரு மாநிலத்தில் உருவாகும் நதிநீர் அம்மாநிலத்துக்கு மட்டும் உரிமையுடையதல்ல.

**ஆ. மரகதம்,** *செங்கம்.*

# தமிழகத்தில் 3 ஆண்டுகளில் 2,408 புதிய தொழில் நிறுவனங்களுக்கு அங்கீகாரம்

## வைகோ கேள்விக்கு மத்திய அமைச்சர் பதில்

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஜூலை 25:** தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 2,408 புதிய தொழில் நிறுவனங்களுக்கு தொழில் மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை (டிபிஐஐடி) அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மத்திய வர்த்தகம், தொழில் துறை அமைச்சர் சோம் பிரகாஷ் மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.

புதிய தொழில் முனைவோர் (Startup) திட்டத்தின் குறிக்கோள்கள், கடந்த 3 ஆண்டுகளில் இந்தத் திட்டத்துக்கு வழங்கப்பட்ட நிதியுதவிகள், தமிழகத்தில் புதிய தொழில்முனைவோர் குறித்த விவரங்கள் குறித்து மதிமுக பொதுச் செயலர் வைகோ மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு மத்திய வர்த்தகம், தொழில் துறை சோம் பிரகாஷ் எழுத்துபூர்வமாக அளித்துள்ள பதில்:

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 2,408 புதிய தொழில் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த மூன்றாண்டுகளில் 26,327 பேருக்கு இந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

புதிய தொழில் முனைவோர் திட்டம் 2016-ஆம் ஆண்டு குடியரசு தினத்தையொட்டி தொடங்கப்பட்டது. புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பது, முதன்முறையாகத் தொழில் முயற்சிகளைத் தொடங்குவோருக்கு உதவிகளை அளிப்பது, இதன்மூலம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி நாட்டின் சீரான பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.

இதற்காக தொழில் மேம்பாடு, உள்நாட்டு வர்த்தகத் துறையில் ரூ.10,000 கோடி 2016-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதில், தொழில்முனைவோருக்கு வணிக வளர்ச்சிக்கு வலுவான சூழலை கட்டமைக்கவும், பங்குமுதல் திரட்டுவதற்கும் உதவி செய்யப்படுகிறது.

டிபிஐஐடியால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிதியம் புதிய நிறுவனங்களில் நேரடியாக முதலீடு செய்யாது.

ஆனால், செபியில் பதிவு பெற்ற மாற்று முதலீட்டு நிதியங்கள் மூலம் நிதியுதவி அளிக்கும். இந்த நிதி புதிய தொழில்முனைவோர் நிறுவனங்களில் பங்குகளாக முதலீடு செய்யப்படும். இதுவரை புதிய தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 5,811 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# 2024 மக்களவைத் தேர்தலுக்காக பிராந்திய கட்சிகள் கூட்டணி

## சுக்பீர் சிங் பாதல் அழைப்பு

**புது தில்லி, ஜூலை 25:** 'வரும் 2024-இல் நடைபெறும் மக்களவைத் தேர்தலில் பாஜகவை எதிர்கொள்வதற்கு பிராந்திய கட்சிகள் ஓரணியில் திரள வேண்டும்' என்று சிரோமணி அகாலி தளம் கட்சியின் தலைவர் சுக்பீர் சிங் பாதல் கோரிக்கை விடுத்துள்ளார்.



பிடிஐ செய்தியாளருக்கு அவர் ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது:

சிரோமணி அகாலி தளம் கட்சி, விவசாயிகள் கட்சி. அதனால், என்ன நடந்தாலும், எவ்வளவு விலை கொடுத்தாவது பஞ்சாபில் வேளாண் சட்டங்களை அமல்படுத்த அனுமதிக்க மாட்டோம்.

பாஜகவுடன் சிரோமணி அகாலி தளம் நீண்ட காலம் கொண்டிருந்த கூட்டணி முடிவுக்கு வந்துவிட்டது. பகுஜன் சமாஜ் கட்சியுடன் அகாலி தளம் கூட்டணி வைத்துள்ளது. இந்தக் கூட்டணி நிரந்தரமானதாக இருக்கும்.

பிராந்திய கட்சிகள் ஓரணியில் திரள வேண்டிய தேவை எழுந்துள்ளது. பிராந்திய கட்சிகள் தனிப்பட்ட முறையில் தங்களுக்குள் நல்ல தொடர்பில் உள்ளன. அந்த கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இதுதான் சிரோமணி அகாலி தளம் கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கையாக உள்ளது.

வரும் 2024-இல் நடைபெறும் மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, அனைத்து பிராந்திய கட்சிகளும் ஓரணியாகத் திரள வேண்டும். பிராந்திய கட்சிகள் வலுவான சக்தியாக உருவெடுக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன். முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸ், நாடு தழுவிய கட்சியாக இல்லை என்பதால், பாஜகவுக்கு எதிரான இரண்டாவது மிகப்பெரிய கூட்டணியாக இது இருக்கும்.

பஞ்சாபில் அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டப் பேரவைத் தேர்தலில் அகாலி தளம் வெற்றி பெற்று ஆட்சியமைத்தால், வேளாண் சட்டங்களுக்கு எதிரான போராட்டங்களில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கப்படும்.

உயிரிழந்த விவசாயிகளின் குழந்தைகளுக்கு இலவச கல்வி, போராட்டத்தில் இளைஞர்களை இந்த பெற்றோருக்கு ஓய்வூதியம் ஆகியவை வழங்கப்படும்.

பெகாஸஸ் உளவு விவகாரத்தில், எதிர்க்கட்சி எம்.பி. தலைமையில் நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றார் சுக்பீர் சிங் பாதல்.

மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பஞ்சாப், உத்தர பிரதேச மாநில விவசாயிகள், போராடி வருகின்றனர். விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் விதமாக, பாஜகவுடனான கூட்டணியை அகாலி தளம் கட்சி முறித்துக் கொண்டது. சுக்பீர் சிங் பாதலின் மனைவி ஹர்சிம்ரத் கௌர் பாதல், தனது மத்திய அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார்.




# தில்லியில் ஓ.பி.எஸ்.– எடப்பாடி கே. பழனிசாமி





**சென்னை, ஜூலை 25:** பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்க அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் தில்லி புறப்பட்டுச் சென்றனர்.

2021-ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் பாஜக, பாமக உள்ளிட்ட கட்சிகள் தேர்தலை சந்தித்தன. இந்தக் கூட்டணி மொத்தம் 75 இடங்களைக் கைப்பற்றிய நிலையில் தமிழக சட்டப் பேரவையில் அதிமுக 66 இடங்களைக் கைப்பற்றி எதிர்க்கட்சியாக உள்ளது.

அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், சென்னையில் இருந்து விமானம் மூலம் ஞாயிற்றுக்கிழமை காலை தில்லி புறப்பட்டுச் சென்றார்.

இதைத் தொடர்ந்து, அதிமுக இணை ஒருங்கிணைப்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமியும் கோவையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு விமானம் மூலம் தில்லி புறப்பட்டுச் சென்றார்.

பிரதமர் அலுவலகத்தில், பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச இருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சந்திப்பில், மேக்கேதாட்டு அணை, சசிகலா ஆடியோ விவகாரம், அமைச்சரவையில் அதிமுகவுக்கு இடம் உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து விவாதிக்கக் கூடும் எனத் தெரிகிறது. தேர்தலுக்குப் பிறகு அதிமுகவின் இரு தலைவர்களும் முதன் முறையாக பிரதமரைச் சந்திக்கச் செல்வதால், இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

# 4 நாள் பயணமாக ஜம்மு–காஷ்மீர் சென்றார் குடியரசுத் தலைவர்

**புது தில்லி/ ஸ்ரீநகர், ஜூலை 25:** குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் 4 நாள் பயணமாக ஜம்மு-காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்களுக்கு சென்றுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை காலை தில்லியில் இருந்து விமானம் மூலம் புறப்பட்ட அவர் பகல் 11.15 மணியளவில் ஸ்ரீநகர் விமான நிலையத்தை வந்தடைந்தார். ஜம்மு-காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, மூத்த அதிகாரிகள் உள்ளிட்டோர் குடியரசுத் தலைவருக்கு வரவேற்பு அளித்தனர்.

28-ஆம் தேதி வரை சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் ராம்நாத் கோவிந்த், திங்கள்கிழமை (ஜூலை 26) லடாக்கின் திராஸ் பகுதிக்குச் சென்று, கார்கில் போர் வெற்றி தினத்தையொட்டி அங்குள்ள நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த இருக்கிறார். முன்னதாக, 2019-ஆம் ஆண்டு கார்கில் வெற்றி தினத்தையொட்டி திராஸில் குடியரசுத் தலைவர் அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி, மோசமான வானிலை காரணமாக ரத்தானது.



ஸ்ரீநகர் விமான நிலையத்தில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை ஞாயிற்றுக்கிழமை வரவேற்ற ஜம்மு–காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா.

ஜம்மு-காஷ்மீர் பல்கலைக் கழகத்தில் செவ்வாய்க்கிழமை (ஜூலை 27) நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் ராம்நாத் கோவிந்த் பங்கேற்று பேசுகிறார்.

குடியரசுத் தலைவரின் பயணத்தை முன்னிட்டு இரு யூனியன் பிரதேசங்களிலும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவர் தங்கும் ஆளுநர் மாளிகை பகுதியை ராணுவத்தினரும், போலீஸாரும் தங்கள் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்துள்ளனர். பல்வேறு இடங்களில் போக்குவரத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சமீப காலத்தில் ஜம்மு-காஷ்மீரில் ஆளில்லா விமானங்கள் மூலம் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால், அங்கு உச்சபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கரோனா நிவாரணத் தொகையை வரும் 31-க்குள் பெற்றுக் கொள்ள அறிவுறுத்தல்

**சென்னை, ஜூலை 25:** குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் கடைகளில் வழங்கப்பட்டு வரும் கரோனா நிவாரணத் தொகை மற்றும் பொருள்களை இதுவரை பெறாதவர்கள் வரும் 31-ஆம் தேதிக்குள் அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு நிவாரணத் தொகை பெற மாவட்ட வழங்கல் அலுவலரிடம் அனுமதி பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

கரோனா பெருந்தொற்று காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் கடந்த மே 15-ஆம் தேதியிலிருந்து முதல் தவணையாக ரூ.2 ஆயிரமும், ஜூன் 15-ஆம் தேதியிலிருந்து இரண்டாம் தவணையாக ரூ.2 ஆயிரமும் என மொத்தம் ரூ.4 ஆயிரம் உதவித்தொகை, அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்குத் தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

### 3 லட்சம் விண்ணப்பதாரர்கள்

https://t.me/Tamil_epaper2

கடந்த மே 10-ஆம் தேதி முதல் புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்த 3 லட்சம் மனுதாரர்களுக்குக் குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இக்குடும்ப அட்டைதாரர்கள் அடுத்த மாதம் 1-ஆம் தேதி முதல் ரேசன் பொருட்களைத் தொடர்ந்து பெற வழிவகை செய்யத் தேவையான தொழில்நுட்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எனவே, புதிய குடும்ப அட்டைதாரர்கள் ஆகஸ்ட் முதல் வாரத்திலிருந்து நியாயவிலைக் கடைகளில் பொருட்களைத் தங்குதடையின்றிப் பெற்றுக்கொள்ளலாம். அட்டைதாரர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்து, தனி மனித இடைவெளியினைப் பின்பற்றி பொருள்களை வாங்க வேண்டும்.

மேலும், அவர்களுக்கு பொது முடக்கத்தின் போது தேவைப்படும் மளிகைப் பொருள்களை வழங்கிடும் நோக்கில் 14 மளிகைப் பொருள்கள் அடங்கிய தொகுப்புகளும் கடந்த ஜூன் 15-ஆம் தேதி முதல் நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்கப்படுகின்றன.

ஏறத்தாழ 99 சதவீதத்துக்கும் மேலான குடும்ப அட்டைதாரர்கள் நிவாரணத்தொகை மற்றும் மளிகைப் பொருள்கள் தொகுப்பினைப் பெற்றுள்ளனர். இதுவரை அவற்றை பெறாதவர்கள் வரும் 31-ஆம் தேதிக்குள் நியாய விலைக் கடைகளில் நிவாரணத் தொகையையும், மளிகைப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒருவேளை கரோனா பாதிப்பு அல்லது பிற முக்கியக் காரணங்களால் 31-ஆம் தேதிக்குள் அவற்றை வாங்க இயலாவிடில், மாவட்ட வழங்கல் அலுவலரிடம் நியாய விலைக் கடை மூலமாகத் தகவல் தெரிவித்து அனுமதிபெற்று அதன்பின் பயனாளிகளுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் காதி பொருள்கள் விற்பனை அதிகரிப்பு



**புது தில்லி, ஜூலை 25:** காதி பொருள்களை மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து ஊக்குவித்து வருவதன் காரணமாக, கடந்த 2004-ஆம் ஆண்டுமுதல் நாடு முழுவதும் காதி பொருள்களின் விற்பனை பெருவாரியாக அதிகரித்துள்ளதாக காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் தலைவர் வினய் குமார் சக்சேனா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது:

2016, அக்டோபர் முதல் தில்லியின் கௌனாட் பிளேஸில் உள்ள காதி விற்பனை வளாகத்தில் 11 வெவ்வேறு தருணங்களில் ஒரு நாளின் விற்பனை ரூ. 1 கோடியைக் கடந்திருக்கிறது. ஜூலை 25-இல் வானொலியில் ஒலிபரப்பான பிரதமரின் மனதின் குரல் நிகழ்ச்சியில் காதியின் இந்த செயல் திறன் பற்றி குறிப்பிடப்பட்டது.

கரோனா பெருந்தொற்று காலத்தில், பொருளாதார வீழ்ச்சியின்போதும் 2020 அக்டோபர்-நவம்பர் மாதங்களில் காதியின் ஒருநாள் விற்பனை நான்கு முறை ரூ. 1 கோடியைக் கடந்து சாதனை படைத்தது. இதற்கு முன்னதாக கடந்த 2018-ஆம் ஆண்டிலும் இதேபோல நான்கு முறை ஒரு நாளின் விற்பனை ரூ. 1 கோடியைக் கடந்தது. கடந்த 2019-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் தேதி கௌனாட் பிளேஸில் ஒரு நாளில் பதிவான ரூ. 1.27 கோடி விற்பனைதான் இன்று வரையிலான அளவில் மிக அதிகமானதாகும்.

2016, அக்டோபர் 22 அன்று, முதல்முறையாக இந்த விற்பனை வளாகத்தில் ஒரு நாளின் விற்பனை ரூ. 1.16 கோடியை எட்டியது. இதற்கு முன்பாக கடந்த 2014, அக்டோபர் 4-ஆம் தேதி பிரதமரின் மனதின் குரல் நிகழ்ச்சிக்கு அடுத்த நாளில் காதியின் ஒருநாள் விற்பனை ரூ. 66.81 லட்சமாகப் பதிவானது.

வானொலி நிகழ்ச்சியின் முதல் நாளன்று நாட்டு மக்கள் அனைவரும் குறைந்தபட்சம் ஒரு காதி பொருளையாவது வாங்குமாறும், அதன்மூலம் ஏழை கைவினைஞர்கள் தீபாவளியன்று தங்கள் வீடுகளில் விளக்கு ஏற்றுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

பிரதமரின் தொடர் ஆதரவால் காதியின் விற்பனை அதிகரித்திருப்பதாகவும், குறிப்பாக இளைஞர்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்திருப்பதாகவும் வினய் குமார் தெரிவித்துள்ளார்.

# ரூ.100 கோடி மோசடி வழக்கில் தனியார் நிறுவன முக்கிய நிர்வாகி மும்பையில் கைது

**புது தில்லி, ஜூலை 25:** சுமார் ரூ.100 கோடி மோசடி தொடர்புடைய வழக்கில் மும்பையில் தனியார் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரை தில்லி காவல் துறையின் பொருளாதாரக் குற்றப் பிரிவினர் கைது செய்தனர்.

இதுகுறித்து தில்லி காவல் துறையினர் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்ததாவது: 'என்ஸோ இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ்' நிறுவனத்தின் இயக்குநர் ஆஷிஸ் பெக்வானி என்பவர் 2018-ஆம் ஆண்டில் தில்லி காவல் துறையின் பொருளாதாரக் குற்றப் பிரிவில் ஒரு புகார் அளித்திருந்தார். அதில், '2010-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஐஎல் அண்ட் எஃப்எஸ் டிரான்ஸ்போர்ட்டேஷன் நெட்வொர்க் நிறுவனத்தின் இயக்குநர்கள் என்னை தொடர்பு கொண்டனர். தாங்கள் ஆரம்பித்துள்ள நிறுவனத்தில் முதலீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். அவர்கள் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் எனது நிறுவனம் ஐஎல் அண்ட் எஃப்எஸ் ரயில் நிறுவனத்தில் ரூ.170 கோடியை முதலீடு செய்தது.

இந்த நிறுவனம் குர்கான் ரேபிட் மெட்ரோ திட்டத்துக்காக ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் 15 சதவீத பங்குகளைப் பெறுவதற்காக முதலீடு செய்தோம். இந்த நிலையில், சம்பந்தப்பட்ட நிறுவனம் லாபகரமாக செயல்படாததும், நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருவதும் தெரியவந்தது. மேலும், ரூ. 21.88 கோடி மதிப்பிலான போலி ஒப்பந்த உத்தரவுகள் 'சில்வர் பாயின்ட் இன்ஃப்ராடெக்' என்ற பெயருடைய நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டன. ஆனால், அந்த நிறுவனத்தால் எந்தப் பணியும் செயல்படுத்தப்படவில்லை. மேலும், அந்த நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இன்வாய்ஸ்கள் போலியாகவும் மோசடியாகவும் இருந்தன. தனது செலவினத்தை அதிகரிப்பதற்காக ஐஎல் அண்ட் எஃப்எஸ் ரயில் நிறுவனம் இதுபோன்று செய்திருப்பதும் தெரியவந்தது.

மேலும், ஐஎல் அண்ட் எஃப்எஸ் ரயில் நிறுவனத்தின் இயக்குநர்களும் அதன் இதர அதிகாரிகளும் நிறுவனத்துக்கு இழப்பு ஏற்படுத்தும் வகையில் ரூ.70 கோடியை நிறுவனத்திலிருந்து கையாடல் செய்தனர் என்று அந்தப் புகாரில் அவர் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது. அதில் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எந்தவித பணியையும் செயல்படுத்தாமல் பல்வேறு நிறுவனங்களுக்கு பணத்தை வழங்கி இருந்தது தெரியவந்தது. மேலும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கிய ஒப்பந்தங்கள் குறித்த பெயர்கள், முகவரிகளும் அளிக்கப்படவில்லை என்பது தெரியவந்தது.

மேலும், சம்பந்தப்பட்ட தொகையானது பல்வேறு செயல்படாத நிறுவனங்கள் மூலம் திருப்பிவிடப்பட்டது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து இந்த விவகாரத்தில் தொடர்புடைய ஐஎல் அண்ட் எஃப் எஸ் ரயில் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரும் ஐஎல் அண்ட் எஃப்எஸ் டிரன்ஸ்போர்ட்டேஷன் நெட்வொர்க் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருமான ராம்சந்த் கருணாகரன் இந்தப் பண மோசடியில் முக்கியமாகச் செயல்பட்டிருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து, அவர் ஜூலை 20-ஆம் தேதி மும்பையில் தில்லி காவல் துறையின் பொருளாதாரக் குற்றப் பிரிவு போலீஸாரால் கைது செய்யப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். மேல் விசாரணைக்காக அவர் போலீஸ் காவலில் எடுக்கப்பட்டு உள்ளார் என்று போலீஸார் தெரிவித்தனர்.

# உலக பாரம்பரிய சின்ன பட்டியலில் தெலங்கானா ராமப்பா கோயில்



**புது தில்லி, ஜூலை 25:** தெலங்கானா மாநிலம், வரங்கல்லில் உள்ள ராமப்பா கோயிலை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளதாக மத்திய கலாசார துறை அமைச்சகம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி வெளியிட்டுள்ள சுட்டுரைப் பதிவில், 'தெலங்கானா, வரங்கல் பாலம்பேட்டில் உள்ள ராமப்பா கோயிலை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அங்கீகரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டுதல், ஆதரவுக்காக அவருக்கு நாட்டின் சார்பில், குறிப்பாக தெலங்கானா மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தனது சுட்டுரையில், 'அருமை! அனைவருக்கும் குறிப்பாக தெலங்கானா மக்களுக்கு வாழ்த்துகள். உயர்ந்த காகதிய வம்சத்தின் சிறப்பான கைவினைத் திறனை ராமப்பா கோயில் காண்பிக்கிறது.

இந்த கம்பீரமான கோயில் வளாகத்தைப் பார்வையிடவும் மகத்தான முதல் அனுபவத்தைப் பெறவும் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்' எனப் பதிவிட்டுள்ளார்.

கணபதி தேவா என்ற காகதிய வம்ச மன்னரின் ஆட்சிக்காலத்தில் 13-ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட பிரசித்தி பெற்ற இக்கோயிலின் மூலவர் ராமலிங்கேசுவரர். எனினும், இந்த அற்புதமான கோயிலை வடிவமைத்த கட்டடக் கலைஞரான ராமப்பாவின் பெயரால் அறியப்படுவது குறிப்பிடத்தக்கது. 2019-ஆம் ஆண்டுக்கான யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னம் பட்டியலில் இடம்பெறுவதற்காக மத்திய அரசால் இக்கோயில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

காகதிய வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் இப்போதைய தெலங்கானா, ஆந்திரத்தை உள்ளடக்கிய பெரும்பாலான பகுதிகளையும், கிழக்கு கர்நாடகம், தெற்கு ஒடிஸாவின் சில பகுதிகளையும் 12 முதல் 14-ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்து வந்தனர்.

## அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் சுற்றுப்பயணம்: ஆப்கன், பாக். விவகாரங்கள் விவாதிக்கப்பட வாய்ப்பு

**புது தில்லி, ஜூலை 25:** அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கனின் இந்தியச் சுற்றுப்பயணத்தின்போது, ஆப்கானிஸ்தான் விவகாரம், பயங்கரவாதத்தைத் தொடர்ந்து ஆதரித்து வரும் பாகிஸ்தான் விவகாரம் உள்ளிட்டவை விவாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் ஜூலை 27, 28 ஆகிய தேதிகளில் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையிலான அரசில் அவர் அமைச்சராகப் பதவியேற்ற பிறகு இந்தியாவுக்கு வருகை தருவது இதுவே முதல் முறையாகும்.


இந்தப் பயணத்தின்போது பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்டோரை அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

நாற்கரக் கூட்டமைப்பை (க்வாட்) வலுப்படுத்துவது, ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலைநாட்டுவது, பயங்கரவாத அமைப்புகளுக்குத் தொடர்ந்து நிதியுதவி அளித்து வரும் பாகிஸ்தானின் நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்தும் பேச்சுவார்த்தையின்போது விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்தியாவுக்கு கரோனா தடுப்பூசியை வழங்க அமெரிக்கா ஏற்கெனவே உறுதியளித்துள்ளது. அதன் விநியோகம் குறித்தும் முக்கிய அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலீடு, சுகாதாரம், கல்வி, புத்தாக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்தும் பேச்சுவார்த்தையின்போது விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

இந்தியாவில் ஜனநாயகக் கொள்கைகள் மதிப்பிழந்து வருவதாகவும், பல்வேறு விவகாரங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாகவும் பலர் குற்றச்சாட்டு தெரிவித்து வருகின்றனர். இந்த விவகாரங்களையும் தனது சுற்றுப் பயணத்தின்போது அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் எழுப்புவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குடியரசுத் தலைவராக 4 ஆண்டுகளை நிறைவு செய்தார் ராம்நாத் கோவிந்த்



**புது தில்லி, ஜூலை 25:** குடியரசுத் தலைவராக ராம்நாத் கோவிந்த் ஞாயிற்றுக்கிழமையுடன் 4 ஆண்டுகளை நிறைவு செய்தார். கடந்த 4 ஆண்டுகளில் மத்திய, மாநில அரசுகளின் 63 மசோதாக்களுக்கு அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

ராம்நாத் கோவிந்த்(76) கடந்த 2017-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25-ஆம் தேதி, நாட்டின் 14-ஆவது குடியரசுத் தலைவராக பொறுப்பேற்றார்.

அவர் ஞாயிற்றுக்கிழமையுடன் 4 ஆண்டுகள் பதவிக்காலத்தை நிறைவு செய்துள்ளார் என்று குடியரசுத் தலைவர் அலுவலகம் தனது சுட்டுரைப் பதிவில் தெரிவித்துள்ளது. அத்துடன் கடந்த 4 ஆண்டுகளில் அவர் ஆற்றியுள்ள பணிகளை, அந்த அலுவலகம் மின்னூலாக வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

ஒவ்வொருவரு குடிமகனுக்கும் குடியரசுத் தலைவராக இருக்கும் ராம்நாத் கோவிந்த் கடந்த 4 ஆண்டுகளில் 13 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்களுக்கு பயணித்துள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின் காவலன் என்ற வகையில், மத்திய அமைச்சர்கள், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

கடந்த 4 ஆண்டுகளில், மத்திய அரசின் 43 மசோதாக்கள், மாநில அரசுகளின் 20 மசோதாக்கள் என மொத்தம் 63 மசோதாக்களுக்கு அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

தில்லியில் பணியாற்றும் கரோனா முன்கள ஊழியர்களுக்கு அழைப்பு விடுத்து, அவர்களுடன் குடியரசுத் தலைவர் மாளிகையில் சுதந்திர தின விழாவை ராம்நாத் கோவிந்த் கொண்டாடினார்.

முப்படைகளின் தலைவராக இருக்கும் அவர், தில்லியில் உள்ள தேசிய போர் நினைவு சின்னத்துக்குச் சென்று, போர்களில் உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தி உள்ளார்.

கர்நாடக மாநிலம், குடகு மாவட்டத்தில் உள்ள மடிகேரியில் ஜெனரல் திம்மையா நினைவு அருங்காட்சியகத்தையும் ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.

புதிய தேசிய கல்விக் கொள்கை தொடர்பாக, மாநில ஆளுநர்கள் பங்கேற்ற கருத்தரங்கில் பங்கேற்றுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள முகல் கார்டனுக்கு கடந்த பிப்ரவரி-மார்ச் மாதங்களில் மட்டும் 34,293 பேர் வந்திருக்கிறார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவில் கரோனா பாதிப்பு

ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி நிலவரம்

24 மணி நேரத்தில் புதிய பாதிப்பு
**39,742**

மொத்த பாதிப்பு எண்ணிக்கை
**3,13,71,901**

மொத்த உயிரிழப்பு
**4,20,551**

கடந்த 24 மணி நேரத்தில் பதிவு செய்யப்பட்ட உயிரிழப்பு
**535**

| அதிக உயிரிழப்புகள் | |
|---|---|
| மகாராஷ்டிரம் | 224 |
| கேரளம் | 98 |
| கர்நாடகம் | 29 |

தேசிய அளவில் இறப்பு விகிதம்
**1.34%**



இதுவரை குணமடைந்தோர்
**3,05,43,138**

சிகிச்சையில் இருப்போர்
**4,08,212**



ஜூலை 24-ஆம் தேதி வரை கரோனா பரிசோதனைகள்
**45,62,89,567**

## கரோனா தாக்கம்: 50% வரை வருவாய் இழந்த தனியார் பள்ளிகள்

### 55% ஆசிரியர்களின் ஊதியம் குறைப்பு

**புது தில்லி, ஜூலை 25:** கரோனா தாக்கம், பெற்றோரின் வருவாய் இழப்பு உள்ளிட்ட காரணங்களால் நாடு முழுவதும் உள்ள முக்கிய தனியார் பள்ளிகள் 20 முதல் 50 சதவீத வருவாயை இழந்திருப்பதும், அதன் காரணமாக ஆசிரியர்களுக்கு ஊதிய குறைப்பு நடவடிக்கையை எடுத்திருப்பதும் புதிய ஆய்வறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் பள்ளிக் கல்வியின் தரம் குறித்து ஆய்வு செய்து வரும் சென்ட்ரல் ஸ்குயர் அறக்கட்டளை (சிஎஸ்எஃப்) சார்பில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதும் 20 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பெற்றோர், பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் என 1,110-க்கும் அதிகமானோரிடம் சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில், நடப்பு கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை வெகுவாக குறைந்திருப்பதாக 55 சதவீத பள்ளிகள் கருத்து தெரிவித்துள்ளன. மேலும், கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழான 25% மாணவர் சேர்க்கைக்கு அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய கல்விக் கட்டணத் தொகை தாமதமாவதாக நான்கில் மூன்று பங்கு பள்ளிகள் புகார் தெரிவித்துள்ளன.

மேலும், கரோனா பொது முடக்கத்தால் வருவாய் இழப்பு ஏற்பட்டு பெரும்பாலான பெற்றோர் கல்விக் கட்டணத்தை செலுத்த முடியாத நிலை உருவாகியிருப்பதால், 20% முதல் 50% வருவாயை இழந்துள்ளதாக பல பள்ளிகள் புகார் தெரிவித்துள்ளன.

கரோனா பாதிப்பின்போது, வங்கிகளிலிருந்து கடன்பெற 77% பள்ளிகள் விரும்பவில்லை. 3 சதவீத பள்ளிகள் மட்டுமே அதற்கான முயற்சியை மேற்கொண்டு கடனையும் பெற்றுள்ளன. 5% பள்ளிகள் கடன் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றனர். பெரும்பாலான பள்ளிகள் பொதுத் துறை வங்கிகளிலேயே கடன் பெற்றிருக்கின்றன. ஒருசில பள்ளிகள் மட்டும் வங்கிசாராத நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்றுள்ளன.

பொது முடக்க காலத்தில் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 55% ஆசிரியர்கள் ஊதிய குறைப்பு நடவடிக்கையை சந்தித்துள்ளனர். குறிப்பாக அதிக கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் பொதுமுடக்க காலத்தில் 37% ஆசிரியர்களுக்கு ஊதியம் நிறுத்திவைப்பு நடவடிக்கையை மேற்கொண்ட நிலையில், குறைந்த கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் அதன் 65% ஆசிரியர்களுக்கு ஊதியம் நிறுத்திவைப்பு நடவடிக்கையை எடுத்துள்ளன. இந்த ஆசிரியர்களில் 54% பேர் வேறு வருவாயா ஆதாரம் இன்றி பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். 30% பேர் தனியார் பயிற்சி வகுப்புகள் மூலம் துணை வருவாயை ஈட்டி அன்றாட செலவுகளை சமாளித்துள்ளனர்.

பெற்றோரைப்பொருத்தவரை,கல்விக் கட்டணத்தை முன்பு போலவே பள்ளிகள் வசூலிப்பதாக 70% பெற்றோர் புகார் தெரிவித்திருப்பதோடு, 50% பெற்றோர் மட்டுமே கல்வி கட்டணத்தை முறையாக செலுத்தியிருப்பதாக தெரிவித்துள்ளனர். மேலும், பொது முடக்க காலத்தில் தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான செலவினம் அதிகரித்திருப்பதாக 20% பெற்றோரும், கல்விக்கான செலவுகள் அதிகரித்திருப்பதாக 15 சதவீத பெற்றோரும் தெரிவித்துள்ளனர். 78% பெற்றோர், அவர்களுடைய குழந்தைகளின் கல்வியை தற்போதுள்ள பள்ளியிலேயே தொடரும் நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளனர் என்று ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரோனா பரவல் காரணமாக தேசிய அளவிலான பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டதால் கடந்த ஆண்டு மார்ச் முதல் நாடு முழுவதும் உள்ள பள்ளிகள் மூடப்பட்டன. கடந்த ஆண்டு அக்டோபரில் பல மாநிலங்கள் பள்ளிகளை பகுதியாக திறந்தபோதும், கரோனா இரண்டாம் அலை காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் மீண்டும் அனைத்துப் பள்ளிகளும் மூடப்பட்டன. தற்போது கரோனா பாதிப்பு குறையத் தொடங்கியிருப்பதைத் தொடர்ந்து, பள்ளிகளை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கையை பல மாநிலங்கள் மேற்கொண்டு வருகின்றன.

### பெகாஸஸ் விவகாரம்

## நீதிமன்ற கண்காணிப்புடன் விசாரணை கோரி மார்க்சிஸ்ட் எம்.பி. உச்சநீதிமன்றத்தில் மனு

**புது தில்லி, ஜூலை 25:** எதிர்க்கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோர் பெகாஸஸ் மென்பொருள் வாயிலாக உளவறியப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டை நீதிமன்றக் கண்காணிப்பின் கீழ் விசாரிக்க உத்தரவிடக் கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை எம்.பி. உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இஸ்ரேலைச் சேர்ந்த என்எஸ்ஓ நிறுவனம் பெகாஸஸ் உளவு மென்பொருளை உருவாக்கியது. மற்றவர்களின் செல்லிடப்பேசியில் ஊடுருவி உளவு பார்க்கும் வகையில் அந்த மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்த மென்பொருளைப் பயன்படுத்தி காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, மத்திய அமைச்சர்கள் இருவர், உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி, சமூக ஆர்வலர்கள், 40-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் என சுமார் 300 பேர் உளவு பார்க்கப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. பெகாஸஸ் மென்பொருளைத் தயாரித்த என்எஸ்ஓ நிறுவனமும் இந்தப் புகாரை மறுத்துள்ளது.

இந்நிலையில், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை எம்.பி. ஜான் பிரிட்டாஸ் உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார். அதில், 'நாட்டில் பலர் மென்பொருள் வாயிலாக உளவு பார்க்கப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு மக்களின் கருத்து தெரிவிக்கும் உரிமையை பாதிக்கும் வகையில் உள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு மிகவும் முக்கியத்துவம்வாய்ந்ததாகஇருந்தபோதும், அதை மத்திய அரசு மறுத்து வருகிறதே தவிர அது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு இதுவரை உத்தரவிடவில்லை.

இந்த விவகாரத்தில் 2 விஷயங்கள் தெளிவாகின்றன. ஒன்று மத்திய அரசே உளவு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்க வேண்டும். இல்லையெனில், வெளிநாட்டு அமைப்புகள் சில உளவு பார்த்திருக்க வேண்டும். மத்திய அரசே உளவறிந்திருந்தால், அது சட்டவிதிகளுக்கு எதிரானது. ஒருவேளை வெளிநாட்டு அமைப்புகள் உளவு பார்த்திருந்தால் அது பாதுகாப்புக் குறைபாடு. எனவே, பெகாஸஸ் உளவு விவகாரம் குறித்து நீதிமன்றத்தின் கண்காணிப்பில் விசாரணை நடத்துவதற்கு உத்தரவிட வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரதமர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்



**புது தில்லி, ஜூலை 25:** பெகாஸஸ் உளவு விவகாரம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்; அரசு உளவு பார்த்தது உண்மையா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ப.சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலின் பெகாஸஸ் உளவு மென்பொருள் மூலம் ராகுல் காந்தி, மத்திய அமைச்சர்கள் இருவர், உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி, சமூக ஆர்வலர்கள், 40-க்கும் பத்திரிகையாளர்கள் என 300 செல்லிடப்பேசி எண்களை இந்திய அரசு உளவு பார்த்ததாக சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இந்த குற்றச்சாட்டை மத்திய அரசு மறுத்து வருகிறது. ஆனால், இந்த விவகாரத்தை முன்வைத்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், இரு அவைகளும் தொடர்ந்து முடங்கியுள்ளன. இந்த விவகாரம் தேசிய அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளின் தலைவர்களும் உளவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளதால், சர்வதேச அளவிலும் அதிகம் பேசப்படும் விஷயமாகியுள்ளது.

https://t.me/Tamil_epaper2

இந்நிலையில் இது தொடர்பாக பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் ப.சிதம்பரம் மேலும் கூறியதாவது:

கடந்த 2019-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் முழுவதுமே உளவு வேலைகளால் பாஜகவுக்கு சாதகமாக அமைந்தது என்று கூற முடியாது. ஆனால், இதுபோன்ற உளவு வேலைகள் நிச்சயமாக பல இடங்களிலும் பாஜகவின் வெற்றிக்கு உதவி இருக்க வேண்டும். அவர்களின் தேர்தல் வெற்றியே இப்போது கரை படிந்துவிட்டது.

உளவு விவகாரத்தில் நாடாளுமன்ற நிலைக் குழு விசாரணைக்குப் பதிலாக, நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடத்துவது சிறப்பாக இருக்கும். ஏனெனில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவில் பாஜக உறுப்பினர்கள்தான் அதிகம் உள்ளனர். மேலும், நாடாளுமன்ற கூட்டுக் குழுதான் அமைப்புரீதியாக அதிக அதிகாரம் உள்ள குழுவாக உள்ளது. அதே நேரத்தில் நாடாளுமன்ற நிலைக் குழுவின் விசாரணையையும் குறைத்து மதிப்பிடவில்லை.

பெகாஸஸ் உளவு விவகாரம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். அரசு உளவு வேலையில் ஈடுபட்டது உண்மையா இல்லையா என்பதை அவர்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மிகவும் தந்திரமாக பதிலளித்துள்ளார். சட்டவிரோதமாக எந்த உளவு வேலைகளையும் அரசு செய்யவில்லை என்று கூறியுள்ளார். ஆனால், உளவு வேலையே நடக்கவில்லை என்று அவர் மறுக்கவில்லை. அப்படியேன்றால், சட்டப்பூர்வமான உளவு வேலை, சட்டப்பூர்மில்லாத உளவு வேலை எவை என்பதை அவர் வேறுபடுத்திக் கூற வேண்டும். பெகாஸஸ் உளவு மென்பொருள் பயன்படுத்தப்பட்டதா? அதை வாங்கியது யார்? மத்திய அரசு அதனை வாங்கியதா அல்லது வேறு விசாரணை அமைப்புகள் வாங்கியதா? அதற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

மேலும், உள்துறை அமைச்சர் அமித் ஷா கூட இந்த விவகாரத்தில் அரசு மீதான குற்றச்சாட்டை நேரடியாக மறுக்கவில்லை. உளவு வேலைகளில் ஈடுபடவில்லை என்று அவர் கூறவில்லை. பிரச்னையை திசை திருப்பும் வகையில்தான் பேசியுள்ளார். அவரது கண்காணிப்பில்தான் இதுபோன்ற உளவு வேலைகள் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என்றார் அவர்.

## உளவுக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது



**பனாஜி, ஜூலை 25:** பெகாஸஸ் உளவுக் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது; எதிர்க்கட்சிகளுக்கு பிரச்னை செய்வதற்கு எதுவும் கிடைக்காததால் இதுபற்றி பேசி வருகிறார்கள் என்று பாஜக தேசியத் தலைவர் ஜெ.பி. நட்டா கூறினார்.

அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள கோவா மாநிலத்தில் ஜெ.பி.நட்டா பயணம் மேற்கொண்டுள்ளார். சனிக்கிழமை பனாஜி நகருக்கு வந்த அவர், இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது, பெகாஸஸ் உளவுக் குற்றச்சாட்டு குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில்:

பெகாஸஸ் உளவுக் குற்றச்சாட்டில் அடிப்படை ஆதாரம் எதுவுமில்லை. காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் பிரச்னைகளாக எழுப்புவதற்கு எதுவுமில்லை. இதனால், இதுபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள்.

அனைத்து விவகாரங்கள் குறித்தும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க அரசு தயாராக இருக்கிறது. ஆனால், காங்கிரஸும் இதர எதிர்க்கட்சிகளும் விவாதிப்பதற்கு எதுவுமின்றி ஏமாற்றத்தில் உள்ளன. அந்தக் கட்சிகள், எதுவுமில்லாத விஷயங்களை வைத்து நாடாளுமன்ற அலுவல்களை முடக்க விரும்புகின்றன.

இருப்பினும், அவர்களின் முயற்சியையும் மீறி, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இதுவரை இல்லாத அளவில் ஆக்கபூர்வமாக அலுவல்கள் நடைபெற்றுள்ளன. இதை நாட்டு மக்களும் நன்கு அறிவர்.

கர்நாடகத்தில் முதல்வர் பி.எஸ்.எடியூரப்பா சிறப்பான முறையில் ஆட்சி செய்து வருகிறார். முதல்வர் பதவியில் இருந்து அவரை மாற்றும் திட்டமில்லை என்றார் ஜெ.பி.நட்டா.

**கோயிலில் வழிபாடு:** பனாஜி நகரில் உள்ள மங்குவேஷ் கோயிலில் ஜெ.பி.நட்டா தரிசனம் செய்தார். கோவா முதல்வர் பிரமோத் சாவந்த், மாநில பாஜக தலைவர் சதானந்த் ஷெட் தனாவடே, கலாசாரத் துறை அமைச்சர் கோவிந்த் கௌடே உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கரோனா தடுப்பூசி குறித்த வதந்திகளைப் போக்க வேண்டும்

### சமூக வானொலி நிலையங்களுக்கு மத்திய அரசு வலியுறுத்தல்

**புது தில்லி, ஜூலை 25:** கரோனா தடுப்பூசி குறித்து பரப்பப்படும் வதந்திகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சமூக வானொலி நிலையங்களுக்கு மத்திய சுகாதார அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் கரோனா தொற்றின் 2-ஆவது அலை பரவல் படிப்படியாகக் குறைந்து வருகிறது. கேரளம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட சில மாநிலங்களில் தொற்று பரவல் குறையவில்லை. அக்டோபர், நவம்பரில் கரோனா தொற்றின் 3-ஆவது அலை பரவ வாய்ப்பிருப்பதாக சுகாதார நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர்.

கரோனா தொற்றுக்கு எதிரான பேராயுதமாக தடுப்பூசி உள்ளது. நாட்டில் கடந்த ஜனவரி முதல் கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் கரோனா தடுப்பூசியை செலுத்திக் கொள்வதில் மக்களிடையே தயக்கம் காணப்பட்டது. ஆனால், தொற்றின் 2-ஆவது அலைபரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, மக்கள் தாமாக முன்வந்து தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.

எனினும், ஊரகப் பகுதிகளில் தற்போதும் கரோனா தடுப்பூசி குறித்த வதந்திகள் பரவியுள்ளன. அதனால், ஊரகப் பகுதிகளில் தடுப்பூசி செலுத்திக் கொள்வோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. இந்நிலையில், 16 மாநிலங்களைச் சேர்ந்த சமூக வானொலி நிலையங்களின் பிரதிநிதிகளுக்கான சிறப்பு கூட்டத்தை மத்திய சுகாதார அமைச்சகம் ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.

அக்கூட்டத்தில் பேசிய சுகாதாரத் துறை கூடுதல் செயலர் லவ் அகர்வால், "சமூக வானொலி நிலையங்கள் மக்களுக்காக ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி வருகின்றன. வானொலி நிலையங்களின் பங்களிப்பால் இளைஞர்களிடையே கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் ஆர்வம் அதிகரித்துள்ளது.

**பிராந்திய மொழிகளில் விழிப்புணர்வு:** கரோனா தடுப்பூசி குறித்து கிராமப் பகுதி மக்களிடையே வதந்திகள் பரவியுள்ளன. அவற்றைப் போக்கி தடுப்பூசி குறித்த விழிப்புணர்வை சமூக வானொலி நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் உள்ளிட்ட கரோனா பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பிராந்திய மொழிகளில் மக்களுக்குத் தொடர்ந்து நினைவூட்ட வேண்டும்.

கரோனா தொற்று பரவல் காரணமாக மக்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தைப் போக்குவதற்கான நடவடிக்கைகளையும் வானொலி நிலையங்கள் மேற்கொள்ளலாம். கரோனா தடுப்பூசி திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்றும் வகையில் சமூக வானொலி நிலையங்கள் செயல்பட வேண்டும்" என்றார்.

யுனிசெஃப் அமைப்புடன் இணைந்து இந்தக் கூட்டத்துக்கு மத்திய சுகாதார அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் பங்கேற்ற சமூக வானொலி நிலையங்களின் பிரதிநிதிகள், கரோனா தடுப்பூசி குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியதில் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

## கோழி இறைச்சி கழிவுகளில் இருந்து பயோடீசல்

### காப்புரிமை பெற்றார் கேரள கால்நடை மருத்துவர்

**வயநாடு, ஜூலை 25:** கோழி இறைச்சி கழிவுகளில் இருந்து பயோடீசலைத் தயாரித்த கேரள கால்நடை மருத்துவருக்கு அதற்கான காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.



பேராசிரியர் ஜான் ஆபிரகாம்

பெட்ரோல்,டீசல் ஆகிய வாகன எரிபொருள்கள் அதிக அளவில் சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்தி வருவதால், அவற்றுக்குரிய மாற்று எரிபொருள்கள் மீதான ஆராய்ச்சி அதிகரித்து வருகிறது. எத்தனால் பயன்பாடு, உயிரி எரிபொருள், இயற்கை எரிவாயு உள்ளிட்டவற்றின் ஆராய்ச்சிகள் இறுதிகட்டத்தை அடைந்துள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாத எரிபொருளைத் தயாரிக்கும் ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கேரளத்தின் வயநாடு பகுதியைச் சேர்ந்த கால்நடை மருத்துவரும் பேராசிரியருமான ஜான் ஆபிரகாம், கோழி இறைச்சி கழிவுகளில் இருந்து பயோடீசலைத் தயாரிக்கும் முறையைக் கண்டறிந்தார்.

கோழி இறைச்சியில் கொழுப்பு சத்து அதிகம் இருப்பதால், அதிலிருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெயைக் கொண்டு பயோடீசலை அவர் தயாரித்தார். அவர் தயாரித்த பயோடீசல் மூலமாக இயங்கிய வாகனங்கள் ஒரு லிட்டருக்கு 38 கி.மீ. வரை சென்றன. அதே வேளையில், அதன் விலை தற்போதைய டீசல் விலையுடன் ஒப்பிடுகையில் வெறும் 40 சதவீதமாக மட்டுமே உள்ளது.

டீசல் மூலமாக ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை விட பயோடீசல் மூலமாக ஏற்படும் மாசுபாடு பாதியளவு குறைந்து காணப்பட்டது. கோழி இறைச்சி கழிவுகள் மூலமாக பயோடீசல் தயாரிக்கும் நடைமுறைக்குக் காப்புரிமை கோரி ஜான் ஆபிரகாம் கடந்த 2014-ஆம் ஆண்டில் விண்ணப்பித்திருந்தார். சுமார் ஏழரை ஆண்டுகள் கழித்து, அதற்கான காப்புரிமையை இந்திய காப்புரிமை அலுவலகம் கடந்த 7-ஆம் தேதி அவருக்கு வழங்கியுள்ளது.

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் முனைவர் பட்டம் பெறுவதற்கான ஆராய்ச்சியாக இந்த பயோடீசல் தயாரிப்பு நடைமுறையை ஜான் ஆபிரகாம் உருவாக்கினார். தமிழக கால்நடை பல்கலைக்கழகம் சார்பில் காப்புரிமைக்கு விண்ணப்பிக்கப்பட்டதால், தற்போது காப்புரிமை பல்கலைக்கழகம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நிதியுதவியுடன் ஆலை:** ஆராய்ச்சிப் படிப்பை முடித்த பிறகு, வயநாட்டின் பூகோடே பகுதியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிக்குச் சேர்ந்த ஜான் ஆபிரகாம், அங்கு பயோடீசல் தயாரிக்கும் ஆலையை இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் அளித்த ரூ.18 லட்சம் நிதியுதவியுடன் அமைத்தார்.

அந்தக் கல்லூரியின் வாகனம் தற்போது வரை அங்கு தயாரிக்கப்படும் பயோடீசலைக் கொண்டே இயங்கி வருகிறது. பயோடீசலுக்கு காப்புரிமை கிடைத்துள்ளதால், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்துடன் இணைந்து அதை வணிக நோக்கில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளதாக ஜான் ஆபிரகாம் தெரிவித்துள்ளார்.

தற்போது பன்றி இறைச்சி கழிவுகளில் இருந்து பயோடீசலைத் தயாரிப்பது தொடர்பாக தனது மாணவர்களுடன் அவர் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்.

# கேரளத்தில் பலத்த மழை

**திருவனந்தபுரம், ஜூலை 25:** கேரளத்தின் பல்வேறு மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்தது. அங்கு திங்கள்கிழமையும் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கேரளத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மிதமான முதல் பலத்த மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் மஞ்சள் எச்சரிக்கை விடுத்திருந்தது. இவற்றில் பெரும்பாலான மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்தது.

ஆலப்புழை, கோட்டயம், இடுக்கி, எர்ணாகுளம், கண்ணூர், காசர்கோடு மாவட்டங்களில் திங்கள்கிழமையும் கனமழை பெய்யக்கூடும் என்று மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜூலை 25–29–ஆம் தேதி வரை மன்னார் வளைகுடா, வங்கக் கடல், தெற்கு அந்தமான், அரபிக் கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**ராஜஸ்தானிலும் பலத்த மழை:** ராஜஸ்தான் மாநிலம் பிரதாப்கர், ஜாலாவார், சித்தோர்கர், துங்கர்பூர் மற்றும் பன்ஸ்வாரா மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை லேசானது முதல் மிதமான மழை பெய்தது. அடுத்த 24 மணி நேரத்துக்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த முதல் மிக பலத்த மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# ஆறுகள், நீர்நிலைகளை காப்பது மாநில அரசின் அடிப்படை கடமை

## கேரள உயர்நீதிமன்றம்

**கொச்சி, ஜூலை 25:** ஆறுகள் மற்றும் நீர்நிலைகளைக் காப்பது மாநில அரசு மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படைக் கடமை என்று கேரள உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கேரள மாநிலம் கோட்டயத்தில் ஓடும் மீனச்சில் ஆற்றில் பக்கத்திலுள்ள நில உரிமையாளர்கள் செய்திருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஆற்று நீரை சுத்தப்படுத்த வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர், மும், நில அளவைத் துறை துணை இயக்குநர், மும் அந்தப் பகுதி தன்னார்வலர்களை உள்ளடக்கிய அமைப்பு சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அப்போது இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்தை அணுகுமாறும், ஆற்றை அளவீடு செய்வதற்கான செலவை மனுதாரரே ஏற்க வேண்டும் எனவும் நில அளவைத் துறை துணை இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

இதைக் கேட்ட அமைப்பினர், ஆற்றை அளவீடு செய்து எல்லையை நிர்ணயிக்க வேண்டியது அரசு துறையினுடைய அடிப்படை கடமை என்று வாதிட்டுள்ளனர். அதற்கு திட்ட நிதியிலிருந்து போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்து அலட்சியப்படுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக அந்த அமைப்பினர் சார்பில் கேரள உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.மணிகுமார், நீதிபதி ஷாஜி பி.சாலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

ஆறுகள் மற்றும் பிற நீர்நிலைகளை காப்பது அரசு மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை கடமையாகும். அந்த வகையில், மீனச்சில் ஆற்றில் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், ஆற்று நீரை சுத்தப்படுத்தவும் கேரள அரசும் கோட்டயம் மாவட்டத்துக்கு உட்பட்ட 3 நகராட்சி நிர்வாகங்களும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மீனச்சில் ஆற்றை 3 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்து, அதுதொடர்பான அறிக்கையை கோட்டயம் மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறி மனு மீதான விசாரணையை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

முன்னதாக, மனு விசாரணைக்கு வந்தபோது 'மனுதாரர் எழுப்பியிருக்கும் புகார் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்று அரசு தரப்பில் நீதிமன்றத்தில் பதிலளிக்கப்பட்டது.

# நிதிக்காக கையேந்த பிரதமரை சந்திக்க விரும்பும் மம்தா

## மேற்கு வங்க பாஜக தலைவர்

**கொல்கத்தா, ஜூலை 25:** மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி நிதிக்காக கையேந்தி யாசிக்க பிரதமர் மோடியை சந்திக்க விரும்புவதாக அந்த மாநில பாஜக தலைவர் திலீப் கோஷ் தெரிவித்தார்.

தில்லியில் பிரதமர் மோடியை மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி இந்த வாரம் சந்திக்கவுள்ளார். அதற்கான தேதி இதுவரை உறுதி செய்யப்படவில்லை. அவர் பிரதமரை சந்திக்கவுள்ளது குறித்து மேற்கு வங்க பாஜக தலைவர் திலீப் கோஷ் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது: மேற்கு வங்கத்துக்கு மத்திய அரசு அளித்த நிதியுதவிகளை மம்தா பானர்ஜி தவறாக பயன்படுத்தியுள்ளார். தற்போது மாநிலம் நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. மம்தா அரசு மிகப் பெரிய அளவில் செய்துள்ள ஊழல்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மாநிலத்தின் நிதி நிலை, திரிணமூல் காங்கிரஸில் அதிகரித்து வரும் உட்கட்சி பூசல் ஆகியவற்றால் மாநிலத்தில் தொடர்ந்து ஆட்சி நடத்த முடியாது என்பதை மம்தா உணர்ந்துள்ளார். தற்போது மாநிலத்தின் நிதி நிலை கிட்டத்தட்ட திவால் நிலையை எட்டியுள்ள சூழலில், நிதிக்காக கையேந்தி யாசிக்க பிரதமர் மோடியை மம்தா பானர்ஜி சந்திக்க விரும்புகிறார் என்று தெரிவித்தார்.

**விவேகமற்ற கருத்து:** திலீப் கோஷின் கருத்துகளுக்கு திரிணமூல் காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அந்தக் கட்சியின் மாநில செய்தித்தொடர்பாளர் குணால் கோஷ் கூறுகையில், "திலீப் கோஷ் தனது விவேகமற்ற கருத்துகளுக்காக நன்கு அறியப்பட்டவர். இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பில் பிரதமரை முதல்வர்கள் எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாம். இதை திலீப் கோஷ் அறிவாரா? கடந்த காலங்களைவிட திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியில் மேற்கு வங்கம் அதிக வருவாயை ஈட்டியுள்ளது" என்று தெரிவித்தார்.

# பயங்கரவாத அமைப்புகளுக்கு ட்ரோன்கள் மூலம் பொருள்களை வழங்க பாகிஸ்தான் முயற்சி

## ஜம்மு–காஷ்மீர் காவல் துறைத் தலைவர்

**ஸ்ரீநகர், ஜூலை 25:** பயங்கரவாத அமைப்புகளுக்கு ட்ரோன்கள் மூலம் பொருள்களை வழங்க பாகிஸ்தான் முயற்சி செய்வதாக ஜம்மு–காஷ்மீர் காவல் துறைத் தலைவர் தில்பாக் சிங் தெரிவித்தார்.

இந்திய–பாகிஸ்தான் எல்லையையொட்டிய பகுதியில் கடந்த 23ஆம் தேதி சக்திவாய்ந்த வெடிகுண்டு, ட்ரோன் மூலம் அனுப்பப்பட்டது. ஐந்து கிலோ எடை கொண்ட அந்த வெடிகுண்டை ஜெய்ஷ்–ஏ–முகமது அமைப்பு அனுப்பி வைத்ததாக உளவுத் தகவல்கள் தெரிவித்தன.

ஜம்மு பிராந்தியத்தில் உள்ள கூட்டம் நிறைந்த பகுதிகளில் வெடிக்கச் செய்து ஏராளமானோரைக் கொல்வதற்காக அந்த குண்டு அனுப்பப்பட்டது. எனினும் அந்த ட்ரோனை போலீஸார் சுட்டு வீழ்த்தினர்.

போர்நிறுத்த ஒப்பந்தம் அமலில் இருந்தபோதிலும் பயங்கரவாத அமைப்புகளுக்கு ட்ரோன்கள் மூலம் பொருள்களை வழங்க பாகிஸ்தான் முயற்சி செய்து வருகிறது. லஷ்கர்–ஏ–தொய்பா, ஜெய்ஷ்–ஏ–முகமது போன்ற பயங்கரவாத அமைப்புகளிடம் ஆயுதங்களும் வெடிபொருள்களும் தீர்ந்து வருகின்றன. அவர்களுக்கு உதவி செய்யும் நபர்களை போலீஸாரும் இதர பாதுகாப்பு அமைப்புகளும் கைது செய்வதன் மூலம் இது சாத்தியமாகியுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதலே பயங்கரவாதிகளுக்குத் தேவையான ஆயுதங்கள், வெடிபொருள்கள், பணம் ஆகியவற்றை வீசுவதற்கு பாகிஸ்தான் அரசைச் சேர்ந்தவர்களே ட்ரோன்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் சுட்டு வீழ்த்தப்பட்ட ட்ரோனின் சில பாகங்கள் சீனா, தைவானில் தயாரிக்கப்பட்டவை. பயங்கரவாத அமைப்புகளிடம் இருந்து எழும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு ட்ரோன்கள் புதிய பரிமாணத்தைச் சேர்த்துள்ளன. இதைச் சமாளிக்க கூடுதல் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

ஜம்மு–காஷ்மீருக்கு ட்ரோன்கள் அனுப்பி வைக்கப்பட்டபோது முதலில் வியப்பாக இருந்தது. எனினும் அந்த அச்சுறுத்தலை சமாளிக்கத் தேவையான வளங்களைத் திரட்ட நம்மால் முடிந்தது. ஆயுதங்கள், வெடிபொருள்கள், போதை மருந்துகள் போன்றவற்றை அனுப்பி வைக்க ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டபோது அதை முறியடிக்கத் தேவையான முயற்சிகளை நமது பாதுகாப்புப் படையினர், உளவு அமைப்பினர், போலீஸார் திறம்படச் செயல்பட்டனர் என்றார்.

# முதல்வராக நீடிப்பேனா? இல்லையா? இன்று தெரிந்துவிடும்

## கர்நாடக முதல்வர் எடியூரப்பா பரபரப்பு பேட்டி

**பெங்களூரு, ஜூலை 25:** கர்நாடக முதல்வராக நீடிப்பேனா? இல்லையா? திங்கள்கிழமை தெரிந்துவிடும் என்று முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார்.

பெலகாவியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்ட பிறகு, பெங்களூரில் செய்தியாளர்களிடம் முதல்வர் எடியூரப்பா கூறியது:

முதல்வர் பதவியில் நீடிக்க வேண்டுமா? இல்லையா என்பது குறித்து பாஜக தேசியத் தலைமையிடம் இருந்து எவ்வித தகவலும் ஞாயிற்றுக்கிழமை மாலை வரை வந்து சேரவில்லை. ஒருவேளை இரவு அல்லது திங்கள்கிழமை காலை தகவல் கிடைக்கலாம். அடுத்த 10–15 ஆண்டுகளுக்கு கட்சியின் வளர்ச்சிக்காக இரவு பகலாக உழைப்பேன். இதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் தேவையில்லை. ஏற்கெனவே திட்டமிட்டப்படி, திங்கள்கிழமை நடக்கவிருக்கும் அரசின் 2–ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் நான் எனது அரசின் சாதனைகளை கூறவிருக்கிறேன். அதன் பிறகு பிற விஷயங்கள் குறித்து தெரியவரும். கட்சி மேலிடத்திலிருந்து எவ்வித தகவலும் வராவிட்டால், அதன் பிறகு நான் முடிவெடுப்பேன்.

கார்வார் மாவட்டத்தில் திங்கள்கிழமை சுற்றுப்பயணம் மேற்கொண்டு வெள்ள பாதிப்புப் பகுதிகளை பார்வையிட திட்டமிட்டிருக்கிறேன். கடைசி நேரம் வரை செயல்பட வேண்டுமென்பதே என் விருப்பம். முதல்வர் பதவியை ராஜிநாமா செய்ய கட்சி மேலிடம் தெரிவித்தால், அதற்கு தயாராக இருப்பதாக 2 மாதங்களுக்கு முன்பே நான் கூறியிருந்தேன்.



கர்நாடக மாநிலம், பெலகாவி மாவட்டத்தில் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதியை ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்ட முதல்வர் எடியூரப்பா.

இப்போதும் அதை வலியுறுத்திக் கூறுகிறேன். முதல்வராக நீடிக்குமாறு கேட்டுக்கொண்டால், அதன்படி செயல்படுவேன். ராஜிநாமா செய்ய அறிவுறுத்தினால், உடனடியாக முதல்வர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு கட்சிப் பணிகளில் ஈடுபடுவேன்.

பாஜக தேசியத் தலைவராக இருக்கும் ஜெ.பி.நட்டா, நான் நல்லாட்சி நடத்துவதாக கூறியிருப்பதற்கு வேறு காரணம் எதுவும் இல்லை. பொறுத்திருப்போம். எவ்வித குழப்பமும் இல்லை. கட்சியின் தொண்டனாக ஜெ.பி.நட்டா கூறுவதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியது எனது கடமையாகும்.

மடாதிபதிகள் மாநாடு நடத்தி, எனக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது குறித்து நான் எதுவும் கூற விரும்பவில்லை.

நல்லாட்சி வழங்கினால் முதல்வர் பதவியில் இருந்து ஏன் மாற்ற வேண்டும் என்று கேட்கிறீர்கள். அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றார்.

# ஹிமாசல் நிலச்சரிவில் 9 பேர் பலி

**சிம்லா, ஜூலை 25:** ஹிமாசல பிரதேசத்தில் கின்னௌர் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். மேலும் 3 பேரது நிலை தெரியவில்லை. உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம், காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000 பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டதாவது:

சாங்லா–சித்குலா சாலையில் ஞாயிற்றுக்கிழமை பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இதில் அந்தப் பகுதி வழியாக சென்ற டெம்போ டிராவலர் வாகனம் சிக்கி நிலத்தில் புதைந்தது. இந்த சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்த போலீஸார் மற்றும் மீட்புக் குழுவினர் அப்பகுதிக்கு விரைந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். வாகனத்தில் மொத்தம் 11 பேர் பயணித்த நிலையில், அதில் 9 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் இருந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதே பகுதியில் நிகழ்ந்த மற்றொரு நிலச்சரிவில் ஒருவர் சிக்கினார். அவரை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரதமர் இரங்கல்:** இந்த நிலச்சரிவு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், 'நிலச்சரிவில் சிக்கி 9 பேர் உயிரிழந்த சம்பவம் மிகுந்த வேதனையளிக்கிறது. அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறியுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம், காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000 பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து இழப்பீடாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மகாராஷ்டிரத்தில் மழை, வெள்ளம்: 100 பேர் மாயம்

## பலி எண்ணிக்கை 149–ஆக அதிகரிப்பு

**மும்பை, ஜூலை 25:** மகாராஷ்டிரத்தில் பெய்து வரும் கனமழை மற்றும் வெள்ளத்தைத் தொடர்ந்து 100 பேர் காணவில்லை என்று மாநில அரசு தெரிவித்துள்ளது. வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் 50 பேர் காயமடைந்தனர்.

மாநிலத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கனமழை தொடர்பான சம்பவங்களில் 149 பேர் பலியாகினர்.

பலத்த மழை காரணமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளும் வெள்ளக்காடாக மாறியுள்ளன. மழை வெள்ள பாதிப்புக்கு இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர். 100 பேரைக் காணவில்லை. மழை வெள்ளச் சம்பவங்களில் 50 பேர் காயமடைந்தனர் என்று மாநில அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொங்கண் பிராந்தியத்தில் அமைந்துள்ள ரத்னகிரி மாவட்டத்தில் பெருவெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட சிப்லுன் பகுதியை மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார். அப்போது முதல்வரின் வாகனத்தை அப்பகுதிவாசிகள் தடுத்து நிறுத்தி மழை, வெள்ளத்தால் தாங்கள் சந்தித்து வரும் பிரச்னைகளை அவரிடம் எடுத்துக் கூறினர். குடியிருப்புவாசிகள், வர்த்தகர்கள், கடைக்காரர்கள் ஆகியோரிடம் பேசிய முதல்வர், அப்பகுதியில் இயல்பு நிலையை மீண்டும் ஏற்படுத்தத் தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கும் என்று உறுதியளித்தார்.




மகாராஷ்டிரம், கோலாப்பூர் பகுதியில் மழைவெள்ளத்தில் சிக்கியவர்களை ரப்பர் படகில் மீட்டு வந்த தேசிய பேரிடர் மீட்புப் படையினர். நாள்: ஞாயிற்றுக்கிழமை.

அவர் மேலும் கூறுகையில் 'வெள்ளச் சேதத்தை குறைப்பதற்கு நீண்டகால அடிப்படையில் மத்திய அரசின் உதவி தேவைப்படுகிறது. தற்போதைக்கு பாதுகாப்புப் படையில் இருந்து மீட்புக் குழுக்களை அனுப்பி மத்திய அரசு உதவியுள்ளது. மகாராஷ்டிரத்தின் மேற்குப் பகுதிகளில் திங்கள்கிழமை சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளேன். பாதிப்பின் அளவு குறித்து விரிவான முறையில் தகவல்கள் சேகரிக்கப்படும். அதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டோருக்கு அனைத்து உதவிகளும் அளிக்கப்படும். கரோனா தொற்று பரவல் காரணமாக பொருளாதாரம் மந்தகதியில் உள்ளது' என்றார்.

முதல்வரின் வாகனத்தை நிறுத்திப் பேசிய உள்ளூர்வாசிகள் சிலர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில், தங்களுக்கு உடனடி நிவாரணம்தான் தேவையே தவிர வாக்குறுதிகள் அல்ல என்று தெரிவித்தனர். 'வெள்ளம் குறித்து உள்ளூர் நிர்வாகம் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தால் எங்கள் உடைமைகளில் பாதியாவது காப்பாற்றியிருப்போம்' என்று சிலர் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், ராய்கட் மாவட்டத்தில் மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்ட தலியே கிராமத்தை மத்திய அமைச்சர் நாராயண் ராணே பார்வையிட்டார். அவர் கூறுகையில் 'மழையால் ஏற்பட்ட சேதம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு என்னிடம் பிரதமர் நரேந்திர மோடி கேட்டுள்ளார்.

உள்ளூர்வாசிகளின் கருத்துகளை அறிந்த பிறகு சேதமடைந்த வீடுகள், பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின்படி மீண்டும் கட்டித் தரப்படும்' என்றார். அவருடன் மகாராஷ்டிர முன்னாள் முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ், மாநில சட்ட மேலவை எதிர்க்கட்சித் தலைவர் பிரவீண் தாரேகர் ஆகியோரும் வந்திருந்தனர்.

கடந்த 24 மணிநேரத்தில் புணேவில் ஒருவர் பலியானதாகவும் தாணே மாவட்டத்தில் ஒருவர் காணாமல் போய்விட்டதாகவும் மகாராஷ்டிர அரசு தெரிவித்தது. தொடர் மழையால் கோலாப்பூர், சாங்லி, சதாரா, புணே மாவட்டங்களில் 875 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 1,35,313 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். ரத்னகிரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 2,000 பேர் 6 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, கனமழை காரணமாக சிப்லுன் பகுதியில் வசிஷ்டி நதியின் மீது அமைக்கப்பட்டுள்ள பாலம் சேதமடைந்தது.

# ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பேரவைத் தேர்தல்

**புது தில்லி / இஸ்லாமாபாத், ஜூலை 25:** பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் சட்டப் பேரவைக்கு ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடைபெற்றது.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற அந்தத் தேர்தலில் வாக்களிக்க 32 லட்சம் வாக்காளர்கள் பதிவு செய்திருந்தனர்.

ஆக்கிரமிப்பு காஷ்மீர் பேரவையில் 53 இடங்கள் இருந்தாலும், 45 எம்எல்ஏ–க்கள் மட்டுமே மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எஞ்சிய ஐந்து இடங்கள் பெண்களுக்கும் 3 இடங்கள் துறைசார் நிபுணர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான தெஹ்ரீக்–இ–இன்சாஃப் (பிடிஐ), முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃபின் முஸ்லீம் லீக் (நவாஸ்) (பிஎம்எல்–என்), பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) ஆகியவற்றுக்கிடையே கடுமையான மும்முனைப் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் நடைபெற்ற 45 தொகுதிகளிலும் பிடிஐ வேட்பாளர்களை நிறுத்தியது. வன்முறைப் போராட்டங்கள் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் பாகிஸ்தான் அரசால் தடை விதிக்கப்பட்டிருந்த தெஹ்ரீக்–ஏ–லப்பாயிக் பாகிஸ்தான் (டிஎல்பி) கட்சி, இந்தத் தேர்தலில் 40 இடங்களில் போட்டியிடுகிறது.

இந்தத் தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

வழக்கமாக, பாகிஸ்தானில் மத்தியில் ஆளும் கட்சிதான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பேரவைத் தேர்தலில் வெற்றி பெறும் என்று கூறப்படுகிறது.

# ஜம்மு–காஷ்மீரில் அடையாளம் தெரியாத பயங்கரவாதி சுட்டுக் கொலை

**ஸ்ரீநகர், ஜூலை 25:** ஜம்மு–காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் அடையாளம் தெரியாத பயங்கரவாதி ஒருவர் பாதுகாப்புப் படையினரால் ஞாயிற்றுக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதுகுறித்து காவல்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில் குல்காம் மாவட்டத்தின் முனந்த் பகதியில் பாதுகாப்புப் படையினர் ஞாயிற்றுக்கிழமை காலை சுற்றி வளைத்து தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர். அதில் ஒரு பயங்கரவாதி கொல்லப்பட்டார்.

பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் கூறினார்.

**குப்வாராவில் 3 வெடிகுண்டுகள் மீட்பு:** ஜம்மு–காஷ்மீரின் குப்வாரா மாவட்டம் டிரெகாம் பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தீவிர தேடுதல் நடவடிக்கையில், அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 வெடிகுண்டுகள் மீட்கப்பட்டன.

அவற்றை செயலிழக்கச் செய்யும் பணியில் வெடிகுண்டு நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று மாவட்ட காவல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பிரதமருடனான சந்திப்புக்குப் பிறகு எந்தவித முன்னேற்றமும் இல்லை

## ஃபரூக் அப்துல்லா

**ஸ்ரீநகர், ஜூலை 25:** ஜம்மு–காஷ்மீர் தலைவர்களுடனான பிரதமரின் சந்திப்பு நிகழ்ந்து ஒரு மாதம் ஆகிவிட்ட நிலையில், அதில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்று தேசிய மாநாடு கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா ஞாயிற்றுக்கிழமை கூறினார்.

ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேச அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 14 முக்கியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார். அதன்படி, தில்லியில் பிரதமரின் இல்லத்தில் கடந்த மாதம் 24–ஆம் தேதி பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில், ஜம்மு–காஷ்மீரின் முன்னாள் முதல்வர்கள் ஃபரூக் அப்துல்லா, ஒமர் அப்துல்லா, மெஹபூபா முஃப்தி, காங்கிரஸின் குலாம் நபி ஆசாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், ஜம்மு–காஷ்மீருக்கு உடனடியாக மாநில அந்தஸ்து வழங்க வேண்டும், வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை விடுவிக்க வேண்டும், குடியேற்ற விதிகளை உருவாக்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை ஜம்மு–காஷ்மீர் அரசியல் தலைவர்கள் முன்வைத்தனர்.

இந்தக் கூட்டம் நடந்து ஒரு மாதம் ஆகியுள்ள நிலையில், அதனால் எந்த முன்னேற்றம் நிகழவில்லை என்று ஃபரூக் அப்துல்லா விமர்சனம் செய்துள்ளார். இது குறித்து அவர் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் கூயிருப்பதாவது:

தில்லியில் பிரதமருடனான சந்திப்பின்போது, 'ஜம்மு–காஷ்மீருக்கும் தில்லிக்கும் இடையேயான இடைவெளியையும் மக்களின் இதயங்களுக்கு இடையேயான இடைவெளியையும் குறைக்க விரும்புகிறேன்' என்று பிரதமர் கூறினார். அது வரவேற்கத்தக்க விஷயம்.



மாநிலத்துக்கான சிறப்பு அந்தஸ்து திடீரென ரத்து, மாநிலம் இரண்டாக பிரிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் ஜம்மு–காஷ்மீர் மக்களின் இதயத்தை வெற்றி கொள்ளும் முயற்சியை, மாற்றத்தை நேரடியாக காண விரும்புகிறோம்.

ஆனால், பிரதமருடனான சந்திப்பு நிகழ்ந்து இப்போது ஒரு மாதம் ஆகிவிட்டபோதும், எந்தவித மாற்றமும் இது வரை ஏற்படவில்லை. இரு தரப்பிலும் அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஜவாஹர்லால் நேரு, நரசிம்ம ராவ், அடல் பிகாரி வாஜ்பாய் ஆகிய அடுத்தடுத்த பிரதமர்களும் இதேபோன்று வாக்குறுதிகளை அளித்தனர். ஆனால், அவநம்பிக்கையே தொடர்ந்தது.

பிரதமரின் அழைப்பின் பேரிலேயே தில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தேசிய மாநாடு கட்சி பங்கேற்றது. அந்த வகையில், மக்களின் இதயங்களை வெற்றி கொள்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கும் என்ற நம்பிக்கை இன்னும் உள்ளது. பேரவைத் தேர்தலுக்கு முன்பாக முழு மாநில அந்தஸ்தை ஜம்மு–காஷ்மீருக்கு மீண்டும் வழங்க வேண்டும். பேச்சுவார்த்தையின்போது அனைத்து முக்கிய கட்சிகளும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தன என்று அவர் கூறினார்.

தேர்தலுக்கு முன்பாக மாநில அந்தஸ்து வழங்கப்படவில்லை என்றாலும் தேசிய மாநாடு கட்சி தேர்தலில் போட்டியிடுமா என்ற கேள்விக்கு பதிலளித்த ஃபரூக் அப்துல்லா, 'தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு கட்சித் தலைவர்களுடன் இதுகுறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும்' என்றார்.

குப்கர் கூட்டணி குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், 'குப்கர் கூட்டணி தொடர்கிறது. கூட்டணியிலிருந்து எந்த கட்சியும் விலகவில்லை' என்றார்.

தேசிய அளவிலான எதிர்க்கட்சிகள் சொந்த கட்சி திட்டங்கள் மற்றும் நிலைப்பாடுகளை மறந்து ஒன்றிணைந்தால் மட்டுமே ஜனநாயகத்தை மீட்டெடுக்க முடியும். இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது.

ஆனால், காலம் கடந்து செல்வதால், அந்த முயற்சிகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஜம்மு–காஷ்மீரில் தொகுதி மறுவரைவு நடவடிக்கை நடைபெற்று வருகிறது. அது நிறைவடைந்ததும் தேர்தல் நடைபெறும் என்று பிரதமர் மோடி தெரிவித்திருந்தார். ஆனால் அதற்கு முன்பாக ஜம்மு–காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று அப்பகுதி கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றன.




# பி.வி.சிந்து, மேரி கோம் வெற்றி

## வெளியேறினார் சத்யன்



ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாம் சுற்றில் இந்திய நம்பர் ஒன்வீரர் சத்யன் ஞானசேகரன் 3–4 என்ற கேம் கணக்கில் ஹாங்காங் வீரர் ஹேங் லாமிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். உலக தரவரிசையில் 38–ஆவது இடத்தில் உள்ள சத்யன் எளிதாக வெல்வார் எனக் கருதப்பட்ட நிலையில், 95–ஆம் நிலை வீரர் லாமிடம், தோல்வியடைந்து வெளியேறினார். டேபிள் டென்னிஸ் பிரிவில் மனிகா பத்ரமா மட்டுமே நம்பிக்கை தருகிறார்.

## மணிஷ் கௌஷிக் தோல்வி



ஆடவர் 63 கிலோ பிரிவில் இந்திய வீரர் மணிஷ் கௌஷிக் 1–4 என்ற புள்ளிக் கணக்கில் இங்கிலாந்து வீரர் லுக் கார்மிக்கிடம் தோல்வியடைந்தார்.

கடைசி மூன்று நிமிஷங்களில் பிரிட்டன் வீரர் லுக் சரமாரியாக குத்துக்களை விட்டு வெற்றியை வசப்படுத்தினார். திங்கள்கிழமை ஆடவர் 75 கிலோ பிரிவில் இந்திய வீரர் ஆஷிஷ் குமார் சீனாவின் எரிபெய்க் டெஹெட்டாவை எதிர்கொள்கிறார்.

**டோக்கியோ, ஜூலை 25:** டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் மூன்றாவது நாளான ஞாயிற்றுக்கிழமை இந்திய பாட்மிண்டன் வீராங்கனையும் உலக சாம்பியனுமான பி.வி.சிந்து, குத்துச்சண்டை நட்சத்திரம் மேரி கோம், டேபிள் டென்னிஸ் மனிகா பத்ரா ஆகியோர் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றனர். எனினும் மற்ற விளையாட்டுகளில் பதக்கமோ, அல்லது குறிப்பிடத்தக்க வெற்றிகளோ இல்லாமல் இந்தியாவுக்கு ஏமாற்றமாக அமைத்தது.

சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் (ஐஓசி) சார்பில் 32–ஆவது ஒலிம்பிக் போட்டிகள் டோக்கியோவில் தொடங்கி நடைபெற்று வருகின்றன. வரும் ஆகஸ்ட் 8–ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியா சார்பில் 228 பேர் கொண்ட குழுவினர் பங்கேற்றுள்ளனர். இதில் பளு தூக்குதல் பிரிவில் மணிப்பூர் வீராங்கனை மீராபாய் சானு அபாரமாக செயல்பட்டு வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை பாட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவில் நடப்பு உலக சாம்பியன் பி.வி.சிந்து தொடக்க சுற்றில் 21–7, 21–10 என்ற கேம் கணக்கில் இஸ்ரேல் வீராங்கனை சேனியா போலிகர்போவாவை எளிதில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். முதல் கேமில் 3–4 என பின்தங்கிய சிந்து, பின்னர் சுதாரித்து ஆடி 11–5 என முன்னிலை பெற்றார். பின்னர் 13 புள்ளிகளை நேரடியாக பெற்று முதல் கேமை வென்றார்.

இரண்டாவது கேமில் 9–3 என சிந்து முன்னிலை பெற்றிருந்தாலும், சேனியா சிறிது நேரம் ஆதிக்கம் செலுத்த முயன்றார். எனினும் சிந்து தனது சிறப்பான ஆட்டத்தால் இரண்டாவது கேமையும் கைப்பற்றினார். கடந்த 2016 ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற சிந்து, டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்லும் இலக்குடன் களமிறங்கியுள்ளார்.

இதுதொடர்பாக சிந்து கூறியதாவது: முதல் ஆட்டம் எளிதானது என்றாலும், இதை நான் தீவிரமாகவே கருதி ஆடினேன். ஒவ்வொரு புள்ளியையும் பெற திட்டமிட்டு ஆட வேண்டும். தரவரிசையில் கீழ் நிலையில் உள்ள வீராங்கனை என்றாலும், அவரிடம் அனைத்து விதமான ஸ்ட்ரோக்குகளையும் பிரயோகித்து ஆடலாம். இது எனக்கு சிறந்த பயிற்சியாக இருந்தது என்றார். அடுத்த சுற்றில் ஹாங்காங் வீராங்கனை சியுங் கேன் யியை எதிர்கொள்கிறார் சிந்து. ஆடவர் பிரிவில் ஏற்கெனவே சாய் பிரணீத் நாக் அவுட் சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்து விட்டார். இரட்டையர் பிரிவில் சாத்விக்–ரங்கி ரெட்டி இணை சனிக்கிழமை உலக நம்பர் ஒன் இணையான சீன தைபேயின் யாங் லீ-சி லின் வாங்கை அதிர்ச்சி தோல்வியடையச் செய்தது.

### குத்துச்சண்டை: ப்ரி குவார்ட்டரில் மேரி கோம்

மகளிர் குத்துச்சண்டை 51 கிலோ எடைப்பிரிவில் முன்னாள் உலக சாம்பியன் இந்தியாவின் மேரி கோம் 4–1 என்ற புள்ளிக் கணக்கில் டொமினிக்கன் குடியரசின் இளம் வீராங்கனை மியுகுலினா ஹெர்ணாண்டஸ் கார்ஸியாவை வீழ்த்தி ப்ரி குவாட்டர் சுற்றுக்கு தகுதி பெற்றார். தன்னை விட 15 வயது குறைந்த கார்ஸியா சில நேரங்களில் கடும் சவாலை தந்த போதும், அனுபவத்தால், மேரி கோம் அவரை வீழ்த்தினார். அடுத்த சுற்றில் 3–ஆம் நிலை வீராங்கனை கொலம்பியாவின் இங்கிரிட் வலேன்சியாவை எதிர்கொள்கிறார் கோம். ஏற்கெனவே இரு முறை இங்கிரிட்டை வென்றுள்ளார் மேரி கோம்.

பின்னர் மேரி கோம் கூறியதாவது: கரோனோவால் சிறப்பான பயிற்சி பெறும் வாய்ப்பை இழந்தேன். அனைத்து வீரர்களும் வீட்டிலேயே பயிற்சி பெற்றனர். ஆனால் குத்துச்சண்டையில் பயிற்சி பெறுவதற்கு எதிராளி ஒருவர் தேவை.

வீட்டிலேயே சிறிய உடற்பயிற்சிக் கூடத்தை அமைத்தேன். ஒலிம்பிக், காமன்வெல்த், உலகக் கோப்பை என அனைத்து பதக்கங்களும் என் வசம் உள்ளது. அவற்றை எண்ணுவது கடினம், எனினும் ஒலிம்பிக் தங்கம் வெல்லவில்லை. அதைப் பெற கடுமையாக முயற்சிப்பேன் என்றார்.

### டேபிள் டென்னிஸ்: மனிகா பத்ரா அபாரம்

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் உலகின் 32–ஆம் நிலை வீராங்கனை உக்ரைனின் மார்கரிட்டா பெஸோட்ஸ்காவை 4–3 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி அபார வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றார்.

1 மணி நேரம் நீடித்த இந்த ஆட்டத்தில் முதலிரண்டு கேம்களை 4–11, 4–11 என மனிகா இழந்தார். எனினும் வீறு கொண்ட எழுந்த மனிகா அடுத்த 5 கேம்களை 11–7, 12–11, 8–11, 11–5, 11–7 என்ற கணக்கில் வென்று மூன்றாவது சுற்றுக்கு தகுதிபெற்றார். மூன்றாவது கேமில் பெஸோட்ஸ்கா 8–11 என வென்றாலும், அடுத்த கேமை மனிகா வென்று, ஆதிக்கத்தை நிலைநாட்டினார். கலப்பு இரட்டையர் பிரிவில் மனிகா–அசந்தா சரத் இணை ஏற்கெனவே ரவுண்ட் 16 சுற்றில் சீனாவின் உலக நம்பர் 1 இணையின் யூன்–செங் ஐயிடம் வீழ்ந்தது.



https://t.me/Tamil_epaper2

### இந்தியா இன்று...

**பென்சிங்**
மகளிர் சாப்ரே தனிநபர் டேபிள் 64, சி.ஏ. பவானி தேவி, 5.30.

**வில்வித்தை**
ஆடவர் அணிகள் எலிமினேஷன், அதானு தாஸ், தருண்தீப், பிரவீண் ஜாதவ், 6.00.

**துப்பாக்கி சுடுதல்**
ஆடவர் ஸ்கீட் தகுதிச்சுற்று, மைராஜ் அகமது கான், அங்கத் வீர் பஜ்வா, 6.30.

**டேபிள் டென்னிஸ்**
ஆடவர் ஒற்றையர் இரண்டாவது சுற்று, சரத் கமல், 6.30.

**டென்னிஸ்**
ஆடவர், ஒற்றையர் இரண்டாவது சுற்று, சுமித் நாகல்.

**டேபிள் டென்னிஸ்**
மகளிர் ஒற்றையர், இரண்டாவது சுற்று, சுதிர்தா முகர்ஜி, 8.30.

**செயிலிங்**
ஆடவர் லேஸர் ரேஸ், 2,3, விஷ்ணு சரவணன், 8.35.

**பாட்மிண்டன்**
ஆடவர், இரட்டையர் குரூப் பிரிவு, சாத்விக்–சிராக் ஷெட்டி, 9.10.

**வில்வித்தை**
ஆடவர் அணிகள் காலிறுதிச் சுற்று, தகுதி பெற்றால், 10.15.

**செயிலிங்**
மகளிர் லேஸர் ரேடியல் ரேஸ் 3,4, நேத்ரா குமணன், 11.05.

**வில்வித்தை**
ஆடவர் அணி அரையிறுதி, தகுதி பெற்றால், 11.47.

**டேபிள் டென்னிஸ்**
மகளிர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று, மனிகா பத்ரா, 12.00.

**துப்பாக்கி சுடுதல்**
ஆடவர் ஸ்கீட் இறுதிச்சுற்று, தகுதி பெற்றால், 12.20.

**வில்வித்தை**
ஆடவர் அணி பதக்கச் சுற்று, தகுதி பெற்றால், 12.45.

**குத்துச்சண்டை**
ஆடவர், ரவுண்ட் 32 சுற்று, 75 கிலோ, ஆஷிஷ்குமார், 3.06.

**நீச்சல்**
ஆடவர், 200 மீ. பட்டர்பிளை, ஹீட் 2, சாஜன் பிரகாஷ்.

**ஹாக்கி**
குரூப் ஏ, மகளிர் ஹாக்கி, இந்தியா–ஜெர்மனி, 5.45.

## ரோயிங்: அரையிறுதியில் அர்ஜுன்–அரவிந்த்



ஆடவர் ரோயிங் டபுள் ஸ்கல்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் லால் ஜால்–அரவிந்த் சிங் இணை அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

சீ பாரஸ்ட் வாட்டர்வேயில் நடைபெற்ற நடைபெற்ற ஆடவர் லைட்வெயிட் டபுள் ஸ்கல்ஸ் பிரிவில் பந்தய தூரத்தை 6:51: 36 நிமிட நேரத்தில் கடந்து மூன்றாவது இடத்தை பெற்றனர். இதன் மூலம் அரையிறுதிக்கு தகுதி பெற்றனர்.

இதுதொடர்பாக அர்ஜுன்–அரவிந்த் கூறியதாவது:

எங்களுக்கு பயிற்சியாளர் என்ன கூறினாரோ அதை பின்பற்றினோம். இந்தியாவில் ரோயிங் விளையாட்டு பிரபலமானதாக இல்லை. ஒலிம்பிக்கில் அரையிறுதிக்கு தகுதி பெற்றாலே அது பெரிய உந்து சக்தியாக இருக்கும் எனக் கூறினார். சனிக்கிழமை ஹீட்ஸில் இருவரும் 5–ஆவது இடத்தை பெற்றிருந்தனர்.

ஒலிம்பிக்கில் இது இந்திய வீரர்களின் சிறப்பான தகுதியாகும் என ரோயிங் பெடரேஷன் தலைவர் ராஜலட்சுமி கூறியுள்ளார். பதக்கம் வெல்வார்களா எனக் கூற முடியாது. எனினும் அரையிறுதியில் பங்கேற்கும் 12 போட்டியாளர்களில் நமது வீரர்களும் உள்ளனர்.

இரண்டு அரையிறுதி பந்தயங்கள் 6 படகுகளுடன் நடைபெறும். அதில் முதல் மூன்று இணைகள் இறுதிக்குள் நுழையும் என்றார். செவ்வாய்க்கிழமை அரையிறுதிச் சுற்று நடைபெறுகிறது.

## ஹாக்கி: ஆஸ்திரேலியாவிடம் 7–1 என இந்தியா தோல்வி

ஆடவர் ஹாக்கி குரூப் ஏ பிரிவின் ஒரு பகுதியாக நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வலுவான ஆஸ்திரேலியாவிடம் 7–1 என்ற கோல் கணக்கில் படுதோல்வி அடைந்தது இந்திய அணி.

பதக்கம் வெல்லும் வாய்ப்பு அணியாக இந்தியா ஹாக்கி அணி கருதப்பட்டுள்ளது. முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணியை 3–2 என்ற கோல் கணக்கில் வெற்றி கண்ட இந்திய அணி ஞாயிற்றுக்கிழமை உலகின் இரண்டாம் நிலை அணியான ஆஸ்திரேலியாவை எதிர் கொண்டது. ஆட்டம் தொடங்கியது முதலே ஆஸி. அணி தனது ஆதிக்கத்தை செலுத்தியது.

தொடக்கத்திலேயே 10–ஆவது நிமிடத்தில் ஆஸி. வீரர் டேனியல் முதல் கோலடித்தார். அதன் பின் 21–ஆவது நிமிடத்தில் ஜெரேமி ஹேவர்ட், 23–ஆவது நிமிடத்தில் ஆன்ட்ரு பிளின், 26–ஆவது நிமிடத்தில் ஜோஷ்வா பெல்ட்ஸ், கோலடித்தனர்.

இரண்டாவது பாதியில் பிளேக் கோவர்ஸ் 40, 42–ஆவது நிமிடங்களிலும், டிம் பிராண்ட் 51–ஆவது நிமிடத்திலும் கோலடித்தனர்.

இந்திய தரப்பில் தில்ப்ரீத் சிங் 34–ஆவது நிமிடத்தில் ஒரே ஒரு கோலை அடித்தார். மன்ப்ரீத் சிங் தலைமையிலான இந்திய அணி செவ்வாய்க்கிழமை ஸ்பெயினை எதிர்கொள்கிறது. முதல் பாதி ஆட்டத்தில் இந்திய வீரர்கள் ஆட்டத்தை தங்கள் கட்டுக்குள் வைக்க முயன்றனர். ஆனால் ஆஸி. பார்வர்ட் வீரர்களின் தொடர் தாக்குதல் ஆட்டத்தால் இந்திய தற்காப்பு அரண் கேள்விக்குறியானது.



பந்தை கைப்பற்ற முயலும் இந்திய, ஆஸி. அணி ஹாக்கி வீரர்கள்.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஆட்டம் ஆஸி. அணியின் கட்டுப்பாட்டில் சென்று விட்டது. 5 நிமிட இடைவெளியில் 3 கோல்களை அடித்தது.

### ஜெர்மனியுடன் மகளிரணி மோதல்

இந்திய மகளிரணி திங்கள்கிழமை உலகின் மூன்றாம் நிலை அணியான ஜெர்மனியுடன் மோதுகிறது. முதல் ஆட்டத்தில் ராணி ராம்பால் தலைமையிலான அணி 1–5 என்ற கோல் கணக்கில் நம்பர் ஒன் அணியான நெதர்லாந்து அணியிடம் வீழ்ந்தது.

பலமான நெதர்லாந்து அணிக்கு இந்திய மகளிர் கடுமையான சவாலை ஏற்படுத்தினர். ஆட்டத்தின் அம்சங்கள் குறித்து ஆலோசித்தோம். ஜெர்மனியும் வலிமையான அணி என்பதால் ஆட்ட உத்திகளை வகுத்துள்ளோம். நிலையான ஆட்டத்தை நமது அணியினர் வெளிப்படுத்த வேண்டும் என பயிற்சியாளர் மாரிஜின் கூறியுள்ளார்.

## முதல் டி20: இந்தியா வெற்றி

### சூரியகுமார், புவனேஷ்வர் அபாரம்

**கொழும்பு, ஜூலை 25:** இலங்கைக்கு எதிரான முதல் டி20 ஆட்டத்தில் இந்திய அணி 38 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய இந்தியா 164/5 ரன்களை சேர்த்தது. இளம் வீரர் சூரியகுமார் யாதவ் அபாரமாக ஆடி 50 ரன்களை சேர்த்தார். பின்னர் ஆடிய இலங்கை அணி புவனேஷ்வரின் அபார பந்துவீச்சால் 126 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

ஒருநாள், டி20 தொடர்களில் ஆடுவதற்காக இலங்கைக்கு சென்றுள்ளது இந்திய அணி. ஒரு நாள் தொடரை 2–1 என கைப்பற்றிய நிலையில், முதல் டி20 ஆட்டம் கொழும்புவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

டாஸ் வென்ற இலங்கை பவுலிங்கை தேர்வு செய்தது. இதையடுத்து இந்திய தரப்பில் பிரித்வி ஷா, கேப்டன் தவன் தொடக்க வரிசை வீரர்களாக களமிறங்கினர்.

ஆனால் பிரித்வி ஷா சமீரா பந்தில் பானுகாவிடம் கேட்ச் தந்து கோல்டன் டக் அவுட்டானார்.

அவருக்கு பின் கேப்டன் தவன்–சஞ்சு சாம்சன் இணை ரன்களை சேர்த்தது. சஞ்சு 27 ரன்களுடனும், ஆல்ரவுண்டர் ஹார்திக் பாண்டியா 10 ரன்களுடனும் பெவிலியன் திரும்பினர்.

கேப்டன் தவன் 1 சிக்ஸர், 4 பவுண்டரியுடன் 36 பந்துகளில் 46 ரன்களை சேர்த்து, கருணரத்னே பந்தில் அவுட்டானார்.

**சூரியகுமார் 50:** நான்காம் நிலை வீரர் சூரியகுமார் யாதவ், 2 சிக்ஸர், 5 பவுண்டரியுடன் 34 பந்துகளில் 50 ரன்களை விளாசி, ஹஸரங்கா பந்தில் அவுட்டானார்.

அப்போது இந்திய அணி 153/5 விக்கெட்டுகளை எடுத்திருந்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் இந்திய அணி 164/5 ரன்களை குவித்தது.

இஷான் கிஷன் 20, க்ருணால் பாண்டியா 3 ரன்களுடன் களத்தில் இருந்தனர். இலங்கை தரப்பில் ஹஸரங்கா 2-28, சமீரா 2-24, கருணரத்னே 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.




விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் இந்திய அணியினர்.

**இலங்கை 126 ஆல் அவுட்:** 165 ரன்கள் வெற்றி இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணியில் அவிஷ்கா பெர்ணான்டோ பானுகா ஆகியோர் தொடக்கத்தில் பவுண்டரிகளாக விளாசினர்.

எனினும் இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் பானுகா 10, தனஞ்செய டி சில்வா 9, அவிஷ்கா 26 ரன்களுக்கு அவுட்டாகினர்.

10 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 3 விக்கெட் இழப்புக்கு 64 ரன்களுடன் தடுமாறிக் கொண்டிருந்தது.

**புவனேஷ்வர் 4 விக்கெட்:** அஸலங்கா மட்டுமே நிலைத்து ஆடி தலா 3 பவுண்டரி, சிக்ஸர்களுடன் 26 பந்துகளில் 44 ரன்களை விளாசினார். பண்டாரா 9, கேப்டன் ஷனகா 16, ஹஸரங்கா 0, கருணரத்னே 3, இஸுரு உடானா 1, துஷ்மந்தா சமீரா 1 என சொற்ப ரன்களுக்கு அவுட்டாயினர். அகிலா தனஞ்செயா 1 ரன்னுடன் களத்தில் இருந்தார்.

இறுதியில் 18.3 ஓவர்களிலேயே 126 ரன்களுக்கு ஆல் அவுட்டானது இலங்கை.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் தனது அபாரமான யார்க்கர், ஸ்விங் பந்து வீச்சால் 4-22 விக்கெட்டுகளை சாய்த்தார். தீபக் சஹார் 2, க்ருணால், ஹார்திக், வருண், சஹல் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதன் மூலம் 1-0 என இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.


### செப். 19–இல் மீண்டும் ஐபிஎல்

**புது தில்லி, ஜூலை 25:** கரோனா பாதிப்பால் நிறுத்தப்பட்ட ஐபிஎல் 2021 கிரிக்கெட் போட்டி வரும் செப்டம்பர் 19–ஆம் தேதி ஐக்கிய அரபு அமீரக நாட்டில் (யுஏஇ) மீண்டும் தொடங்குகிறது. துபையில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்ஸ்-சென்னை சூப்பர் கிங்ஸ் ஆட உள்ளன.

கடந்த மே மாதம் கரோனா பாதிப்பு அதிகமானதால் ஐபிஎல் ஆட்டங்கள் நிறுத்தப்பட்டன. இந்நிலையில், ஐபிஎல் ஆட்டங்களை யுஏஇக்கு மாற்ற பிசிசிஐ தீர்மானித்தது. அதன்படி செப். 19–ஆம் மீண்டும் ஐபிஎல் தொடங்கும் நிலையில், மும்பை–சென்னை அணிகள் மோதுகின்றன.

அக். 10–இல் முதல் குவாலிஃபையரும், 11–இல் எலிமினேட்டரும், 13–இல் இரண்டாவது குவாலிஃபையர் ஆட்டங்கள் நடைபெறுகின்றன. இறுதி ஆட்டம் அக். 15–இல் நடைபெறுகிறது.

## உலக கேடட் மல்யுத்தம்: தங்கம் வென்றார் பிரியா மாலிக்



தங்கம் வென்ற பிரியா மாலிக்கை தூக்கிக் கொண்டாடும் பயிற்சியாளர்கள்.

**புடாபெஸ்ட், ஜூலை 25:** உலக கேடட் மல்யுத்தப் போட்டியில் மகளிர் பிரிவில் தங்கம் வென்றார் இந்தியாவின் பிரியா மாலிக்.

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் உலக கேடட் மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி நடைபெறுகிறது. இதில் மகளிர் 73 கிலோ எடைப்பிரிவில் 5–0 என்ற புள்ளிக் கணக்கில் பெலாரஸின் கேஸ்னியா படோபோவிச்சை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார்.

இளம் வீராங்கனையான பிரியா மாலிக், புது தில்லியில் நடைபெற்ற தேசிய பள்ளிகள் விளையாட்டுப் போட்டியிலும், கேலோ இந்தியா போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்றிருந்தார். அவருக்கு நடிகர்கள் அபிஷேக் பச்சன், கரீனா கபூர், சன்னி தியோல், அனில் கபூர் உள்பட பல்வேறு தரப்பினர் சுட்டுரையில் (டுவிட்டர்) வாழ்த்து தெரிவித்தனர்.

## பிரிட்டன்

# சர்ச்சைக் கருத்து: மன்னிப்பு கோரினார் அமைச்சர்



**லண்டன், ஜூலை 25:** கரோனா அபாயத்திலிருந்து தப்புவதற்காக வீடுகளில் முடங்கியுள்ளவர்கள் குறித்து தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்கு, பிரிட்டன் சுகாதாரத் துறை அமைச்சர் சஜித் ஜாவித் மன்னிப்பு கோரினார்.

அண்மையில் கரோனாவிலிருந்து குணமடைந்த அவர், அதுகுறித்து அறிவிக்கும் சுட்டுரை (ட்விட்டர்) பதிவில், 'கரோனாவிலிருந்து பாதுகாத்துக்கொள்ள அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள். இல்லையென்றால் பயந்து நடுங்கி வீடுகளில் பதுங்கிக் கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இது, கரோனா பரவலைத் தடுப்பதற்காக மிகவும் சிரமத்துடன் பொது இடங்களைத் தவிர்த்து வருவோரை அவமதிப்பதாக பலரும் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து, சஜித் ஜாவித் மன்னிப்பு கோரினார்.

## இராக்

# அமெரிக்க படையினர் இனி அவசியம் இல்லை



**பாக்தாத், ஜூலை 25:** இராக்கில் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளுடன் சண்டையிடுவதற்கு இனி அமெரிக்கப் படையினர் தேவையில்லை என்று பிரதமர் முஸ்தஃபா அல்-காதிமி தெரிவித்துள்ளார். எனினும், இதுதொடர்பான முடிவுகள் அமெரிக்காவுடன் இந்த வாரம் நடைபெறும் பேச்சுவார்த்தைக்குப் பிறகே எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

எனினும், இராக் பாதுகாப்புப் படையினருக்கு அமெரிக்க வீரர்கள் தொடர்ந்து பயிற்சியளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ராணுவ உளவுத் தகவல்களையும் அமெரிக்காவிடமிருந்து இராக் தொடர்ந்து கேட்டுப் பெறும் என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் முஸ்தஃபா அல்-காதிமி தெரிவித்தார்.

## தலிபான்கள் தொடர் முன்னேற்றம்

# ஆப்கானிஸ்தானில் ஊரடங்கு அமல்

**காபூல், ஜூலை 25:** ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் புதிய பகுதிகளைக் கைப்பற்றி முன்னேறி வருவதைத் தடுக்கும் வகையில், அந்த நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிபிசி ஊடகம் தெரிவித்துள்ளதாவது:

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படையினர் முழுமையாக வெளியேறி வரும் சூழலில், தலிபான் பயங்கரவாதிகள் அந்த நாட்டில் புதிய பகுதிகளைக் கைப்பற்றி வருகின்றனர். அவர்கள் மேலும் முன்னேறி நகரங்களைக் கைப்பற்றுவதைத் தடுப்பதற்காக, ஏறத்தாழ நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் அந்த நாட்டு அரசு ஊடரங்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவு, தலைநகர் காபூல் மற்றும் 2 மாகாணங்களைத் தவிர, அனைத்து மாகாணங்களிலும் அமல்படுத்தப்பட்டுள்ளது.இதன்படி, உள்ளூர் நேரப்படி இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை பொது மக்கள் நடமாட்டமும் வாகனப் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆப்கன் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கும் தலிபான்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கும் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், காபூல், பாஞ்ஷிர், நங்கார்ஹர் ஆகிய பகுதிகளுக்கு ஊரடங்கிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001-ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட நியூயார்க் இரட்டை கோபுரத் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட அல்-காய்தா தலைவர் பின் லேடனுக்கு அப்போது ஆப்கானிஸ்தானில் ஆட்சி செலுத்தி வந்த தலிபான்கள் அடைக்கலம் அளித்தனர். அதையடுத்து, அந்த நாட்டின் மீது அமெரிக்கா படையெடுத்து தலிபான்களை ஆட்சியிலிருந்து அகற்றியது.

அதனைத் தொடர்ந்து, ஆப்கன் அரசுப் படைகளுக்குப் பயிற்சியளிக்கவும் தலிபான்களுக்கு எதிரான போரில் ராணுவத்துக்கு உதவவும் அமெரிக்கப் படையினர் அந்த நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாகத் தங்கியிருந்தனர்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்காக தலிபான்களுடன் அமெரிக்கா கத்தார் தலைநகர் தோஹாவில் பல கட்டங்களாகப் பேச்சுவார்த்தை நடத்தியது.

அதன் விளைவாக, இரு தரப்புக்கும் இடையே வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் கடந்த 2019-ஆம் ஆண்டு கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தில், பயங்கரவாத அமைப்புகளுடனான தொடர்புகளைக் கைவிட தலிபான்கள் ஒப்புக் கொண்டனர். ஆப்கானிஸ்தானிலிருந்து தங்களது படையினரை திரும்பப் பெற அமெரிக்கா ஒப்புக் கொண்டது.

அதன்படி, தங்களது படையினரை அடுத்த மாதம் 31-ஆம் தேதிக்குள் முழுமையாக திரும்ப அழைக்க அமெரிக்கா இலக்கு நிர்ணயித்துள்ளது.

ஏற்கெனவே 95 சதவீத அமெரிக்க வீரர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிவிட்ட நிலையில், ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பல்வேறு பகுதிகளை தலிபான்கள் கைப்பற்றி முன்னேறி வருகின்றனர். இதில், ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த எல்லைப் பகுதிகளும் அடங்கும்.

இந்தச் சூழலில், தலிபான்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.



ஹெராத் பகுதியில் வாகனங்களில் செல்பவர்களை சோதனையிடும் ஆப்கன் ராணுவத்தினர் (கோப்புப் படம்)

## கரோனா தடுப்பு

# தவறான திசையில் அமெரிக்கா: தலைமை மருத்துவ ஆலோசகர்



ஆன்டனி ஃபெளச்சி

**வில்மிங்டன், ஜூலை 25:** கரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் அமெரிக்கா தவறான திசையில் செல்வதாக அந்நாட்டு அதிபர் ஜோ பைடனின் தலைமை மருத்துவ ஆலோசகரும் தொற்றுநோய் நிபுணருமான ஆன்டனி ஃபெளச்சி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் சிஎன்என் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

கரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் அமெரிக்கா தவறான திசையில் செல்கிறது. இது மிகவும் விரக்தி அடைய வைக்கிறது. தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களும் கட்டாயம் முகக் கவசம் அணிந்துகொள்வதற்கு பரிந்துரைப்பது குறித்து அரசின் பொது சுகாதார அதிகாரிகள் தொடர்ந்து பரிசீலித்து வருகின்றனர்.

கரோனா தீநுண்மியால் எளிதில் பாதிக்கப்படக் கூடிய குறைந்த நோய் எதிர்ப்பாற்றல் கொண்டவர்கள், புற்றுநோயாளிகள், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்கள் உள்ளிட்டோர் ஏற்கெனவே தடுப்பூசியின் இரண்டு தவணைகளை செலுத்தியிருந்தாலும், அவர்கள் கூடுதலாக ஒரு தவணை தடுப்பூசியை செலுத்திக் கொள்ள பரிந்துரைக்கப்படலாம். இதுதொடர்பான தரவுகளை அரசு நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர் என்று தெரிவித்தார்.

அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகை சுமார் 33.30 கோடியாகும். இவர்களில் தடுப்பூசி செலுத்திக் கொள்ள தகுதியானவர்களின் மொத்த எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 49 சதவீதம் பேர் (16.30 கோடி பேர்) மட்டும்தான் இதுவரை தடுப்பூசி செலுத்திக் கொண்டிருப்பதாக அந்நாட்டின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு அமைப்பு (சிடிசி) தெரிவித்துள்ளது.

## கரோனா: பாதிப்பும் பலியும்...

| நாடுகள் | பாதிப்பு | பலி |
|---|---|---|
| அமெரிக்கா | 3,51,84,671 | 6,26,713 |
| இந்தியா | 3,13,71,901 | 4,20,551 |
| பிரேஸில் | 1,96,70,534 | 5,49,500 |
| ரஷியா | 61,26,541 | 1,53,874 |
| பிரான்ஸ் | 59,78,695 | 1,11,616 |
| பிரிட்டன் | 56,69,260 | 1,29,130 |
| துருக்கி | 55,87,378 | 50,879 |
| ஆர்ஜென்டீனா | 48,39,109 | 1,03,584 |
| கொலம்பியா | 47,16,798 | 1,18,538 |
| இத்தாலி | 43,12,673 | 1,27,942 |

| நாடுகள் | பாதிப்பு | பலி |
|---|---|---|
| ஸ்பெயின் | 42,80,429 | 81,221 |
| ஜெர்மனி | 37,62,194 | 92,037 |
| ஈரான் | 36,91,432 | 88,800 |
| இந்தோனேசியா | 31,66,505 | 83,279 |
| போலந்து | 28,82,146 | 75,242 |
| மெக்ஸிகோ | 27,41,983 | 2,38,316 |
| தென் ஆப்பிரிக்கா | 23,68,105 | 69,488 |
| உக்ரைன் | 22,48,450 | 52,847 |
| பெரு | 21,02,904 | 1,95,795 |
| நெதர்லாந்து | 18,43,521 | 17,800 |

| நாடுகள் | பாதிப்பு | பலி |
|---|---|---|
| செக் குடியரசு | 16,72,409 | 30,357 |
| சிலி | 16,07,749 | 34,958 |
| இராக் | 15,52,648 | 18,287 |
| பிலிப்பின்ஸ் | 15,48,755 | 27,224 |
| கனடா | 14,25,987 | 26,544 |
| வங்கதேசம் | 11,64,635 | 19,274 |
| பெல்ஜியம் | 11,13,465 | 25,220 |
| ஸ்வீடன் | 10,96,799 | 14,615 |
| பிற நாடுகள் | 3,08,56,485 | 5,88,085 |
| மொத்தம் | 19,45,84,161 | 41,71,716 |

https://t.me/Tamil_epaper2



# நூல் அரங்கம்

## வரப்பெற்றோம்

**படித்தேன் ரசித்தேன் (கட்டுரைகள்)** - டாக்டர் ஜெ. பாஸ்கரன்;பக்.190;ரூ.150;குவிகம் பதிப்பகம், ஃப்ளாட் எண்.1, மூன்றாவது தளம், ஜே.கே. அத்விதா, 99, செளபாக்யா காலனி, அண்ணா மெயின்ரோடு, கே.கே.நகர், சென்னை-600 078.

**ஈர வெயில் (கவிதைகள்)** - ஜோ; பக்.96; ரூ.100; நன்செய் பிரசுரம், 1-257, கொருக்கை, திருத்துறைப்பூண்டி- 614711.

**அபூர்வ சக்திகள் அமானுஷ்ய ஆற்றல்கள்** - வேணுசீனிவாசன்; பக். 200; ரூ.200; அழகு பதிப்பகம், சென்னை-49; 044- ✆2650 2086.

**மக்களோடு மக்களாய்... எதிரொலி மணியன்** - தொகுப்பு: கெங்கை குமார், பூங்குயில் சிவகுமார்; பக்.312; ரூ.120; பூங்குயில் பதிப்பகம்,100,கோட்டைத் தெரு, வந்தவாசி -604 408.

**கர்மவினைகள் நீக்கும் கால பைரவ ரகசியம்** - ஜெகாதா; பக்.272; ரூ.260; சங்கர் பதிப்பகம், சென்னை-49; ✆044 - 2650 2086.

**அவ்வையார் படைப்புக் களஞ்சியம்** - தாயம்மாள் அறவாணன்; பக்.694; ரூ.600; தமிழ்க்கோட்டம், சென்னை-29; ✆044 - 2374 4568.

**தானம், கொடை, செட்டில் மென்ட்** - ஏ.ஜெகனாதன், பி.விஜய் கிருஷ்ணா; பக்.98; ரூ.110 ; ராஜாத்தி பதிப்பகம், சென்னை-24; ✆044- 2483 4643.

**வாழ்வே வசந்தம் ஆகட்டும்** - ஜெ.கமலநாதன்; பக்.136; ரூ.90; சுவாமிமலை பதிப்பகம், சென்னை-17; 044 - 2435 3742.

**கதவைத் தட்டாதீர்கள் (எழுச்சியூட்டும் எண்ணங்கள்)** - கருமலைப் பழம் நீ ; பக்.164; ரூ.150; நிவேதிதா பதிப்பகம், 10/3, வெங்கடேஷ் நகர் பிரதான சாலை, விருகம்பாக்கம், சென்னை-92.

**இந்திய இலக்கியத்திற்கு கு.சின்னப்ப பாரதியின் பங்களிப்பு(கட்டுரைத் தொகுப்பு) – பக்.224; ரூ.150; பாரதி புத்தகாலயம், சென்னை–18– ✆044 – 2433 2424.**



தமிழ் இலக்கிய உலகுக்கு இடதுசாரி இயக்கம் வழங்கிய மிகப் பெரிய கொடை கு. சின்னப்ப பாரதி. கவிஞராகவும், புனைவுப் படைப்பாளியாகவும் இவர் எழுதியிருக்கும் நூல்கள் அனைத்துமே சர்வதேச அளவில் கொண்டாடப்படுகின்றன. தமிழகத்தில் அல்லாமல் கேரளத்திலோ, மேற்கு வங்கத்திலோ கு. சின்னப்ப பாரதி பிறந்திருந்தால், அவருக்குத் தரப்பட்டிருக்கும் அங்கீகாரமும், கௌரவமும் பன்மடங்கு அதிகம். கொண்டாடப்படும் எழுத்தாளராக இருந்திருப்பார்.

'கு.சி.பா.' என்று பரவலாக அறியப்படும் கு. சின்னப்ப பாரதி அளவிற்கு, வேற்று மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட இன்றைய தமிழ் எழுத்தாளர் இன்னொருவர் இருக்க வழியில்லை. இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், ரஷியன், ஜெர்மன் என்று அவரது படைப்புகளை மொழியாக்கம் செய்வதில் பல வெளிநாட்டு ஆய்வாளர்கள் முனைப்புக் காட்டுவதில் இருந்து அவரது எழுத்தின் வீச்சும், அதன் ஆளுமையும் வீரியமும் விளங்கும்.

"கு. சின்னப்ப பாரதிக்கு நிகராகத் தமிழில் எந்த எழுத்தாளரையும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. ரஷிய மொழியின் மிகச் சிறந்த எழுத்தாளரும், நோபல் விருது பெற்றவருமான மைக்கேல் ஷோலக்கோவ் போன்ற சர்வதேச முக்கியத்துவம் மிக்கபடைப்பாளிக்குநிகரானவர் நமது கு.சி.பா." என்று 'காலந்தோறும்...' என்கிற தனது கட்டுரையில் பதிவு செய்கிறார் எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி.

எழுத்தாளர் கு.சின்னப்பபாரதி குறித்து 46 முக்கியமான இலக்கிய ஆய்வாளர்கள் எழுதிய கட்டுரைகள் 'இந்தியஇலக்கியத்திற்குகு.சின்னப்பபாரதியின் பங்களிப்பு' என்கிற தலைப்பில் புத்தக வடிவம் பெற்றிருக்கின்றன. 'மக்கள் மீது அக்கறை கொண்ட எழுத்துச் சிற்பி' என்று பிரபல ஹிந்தி எழுத்தாளர் சித்ரா முத்கலும், 'கு. சின்னப்ப பாரதியின் நாவல்களும் எதார்த்தப் போக்கும்' என்று ஹிந்தி கவிஞர் சஞ்சய் செளஹானும் பாராட்டுகிறார்கள் என்றால் எந்த அளவுக்கு அவரது எழுத்துகள் தமிழக எல்லை கடந்து தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன என்பதை உணரலாம்.

தொ.மு.சி. ரகுநாதனை முற்போக்கு இலக்கியத்தின் மூலவர் என்றும், கு. சின்னப்ப பாரதியை உற்சவர் என்றும் போற்றும் எழுத்தாளர் சு. சமுத்திரம், அவரைத் தனது 'படைப்பிலக்கிய முன்னோடி' என்று வர்ணிக்கிறார். கு.சி.பா.வின் 'தாகம்' நாவலையும், பெர்ல்.எஸ். பக் எழுதிய 'நல்ல பூமி' நாவலையும் ஒப்பாய்வு செய்கிறார் மார்க்சிய ஆய்வாளர் பேராசிரியர் எஸ். தோத்தாத்ரி.

இந்தப் புத்தகத்தை 'சாகித்திய அகாதெமி' தேர்வுக் குழுவினருக்கு அனுப்பிக் கொடுத்து படித்துப் பார்க்கச் சொல்ல வேண்டும். அப்போதுதான் கு.சின்னப்பபாரதிக்கு இன்னும் விருது வழங்கப்படவில்லை என்பது அவர்களுக்கு நினைவுக்கு வரும்.

**தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள் உரையாசிரியர்கள் நோக்கு – கு. முதற்பாவலர்; பக்.464; ரூ.350; முத்தமிழ் நிலையம், 335, மாரியம்மன் கோவில் தெரு, திண்டிவனம் வட்டம் – 604 101.**




தமிழ் யாப்பியலின் முந்தைய நிலையை எடுத்துரைப்பதாக தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள ஒரு பகுதிதான் செய்யுளியல். இது பல்வேறு வகைகளாக யாப்பு வகைகளைக் கூறும் பகுதி. செய்யுளியலில் இடம்பெற்ற இலக்கணங்கள் பலவகையான மாற்றங்களையும், வளர்ச்சியையும் அடைந்து, பின்னாளில் தனித்தனி நூல்களாக வெளிவந்திருக்கின்றன.

யாப்பியல் தொடர்பாக அறிஞர் பலரும் ஆராய்ந்து அரிய பல தகவல்களையும் வெளியிட்டிருக்கிறார்கள் - வெளியிட்டும் வருகின்றனர். அச்சில் வராத யாப்பியல் ஆராய்ச்சி கூட வெளிவந்துள்ளது. காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள யாப்பியல் ஆராய்ச்சியில் இருந்து புதிதாகச் சிலவற்றை இந்நூல் ஆராய்ந்து எடுத்துரைக்கிறது. குறிப்பாக உரையாசிரியர்களின் நோக்கில் ஆராயும் இந்நூல் தொல்காப்பியச் செய்யுளியலும் உரைகளும் என்பதை முதல் பகுதியில் ஆராய்கிறது.

இரண்டாவது பகுதி அடி, யாப்பு, பா, அளவியல் ஆகிய உறுப்புகளை வடிவ உறுப்புகளாக வகைமை செய்து, தொல்காப்பிய உரைகளுடன் ஒப்புநோக்கி அவற்றை யாப்பருங்கல விருத்தியுரையுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து 'வடிவ உறுப்புகள்' எனவும்; மூன்றாவது பகுதி தூக்கு, தொடை, வண்ணம் ஆகியன அடிப்படையிலும், பொருள் அடிப்படையிலும் 'ஒலி உறுப்புகள்' என்ற தலைப்பிலும்; நான்காம் பகுதி 'மரபு, நோக்கு' பற்றியும்; அம்மை,அழகு,தொன்மை,தோல்,விருந்து,புலன், இயைபு,இழைபு ஆகிய எட்டு உறுப்புகள் கவிதையழகியலில் பெறும் இடத்தை விரிவாக 'வனப்பு' என்கிற பகுதியிலும் ஆராய்ந்து ஆய்வாளர் ஆய்வு முடிவைத் தந்திருக்கிறார்.

தமிழ் இலக்கிய - இலக்கணம் கற்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் கைவசம் இருக்க வேண்டிய நூல்.

**விவேகானந்தம் – எஸ்.சுஜாதன் – தமிழில்: ப.விமலா; பக். 320; ரூ. 350; காவ்யா, சென்னை–24; ✆044–2372 6882.**



மலையாளத்தில் எழுதப்பட்ட சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றுப் புதினத்தின் தமிழ் மொழிபெயர்ப்பே 'விவேகானந்தம்'.


இந்து மதத்தின் சாராம்சங்களை இந்தியாவுக்குள் மட்டுமன்றி மேற்கத்திய நாடுகளிலும் சுவாமி விவேகானந்தர் பரப்புரை செய்தார். இந்தியா, வெளிநாடுகளில் சுவாமி விவேகானந்தர் மேற்கொண்ட சுமார் ஆறு வருடப் பயணங்களில் அவருக்கு ஏற்பட்ட பல்வேறு அனுபவங்களை இந்த நாவல் பதிவு செய்துள்ளது.

தீவிர இந்து மதப் பற்றாளரான சுவாமி விவேகானந்தர் பிற மதங்களிலுள்ள நல்ல பல கருத்துகளை தயங்காமல் ஏற்றுக்கொண்டார். சனாதன தர்மத்தை அவர் வலியுறுத்தியபோதும் அதிலுள்ள சாதியப் பாகுபாட்டை தனது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து விமர்சித்தும் எதிர்த்தும் வந்துள்ளார்.

அமெரிக்காவில் பல்சமய மாநாட்டில் கலந்து கொண்டு பல்வேறு மதத்தினரிடையே இந்து மதம் குறித்த புரிதலை ஏற்படுத்துவதன் மூலம் இந்தியாவிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் சொந்த நாட்டு மக்களை முன்னேற்ற முடியும் என சுவாமி உறுதியாக நம்பினார்.

மதம், மொழி, இனம், தேச எல்லைகளைக் கடந்து சுவாமி விவேகானந்தர் அனைவராலும் அறியப்பட்டவர் என்றாலும் பரவலாக அறியப்படாத அவரது பயணங்கள், ஆன்மிக சிந்தனைகள், பகுத்தறிவு, அத்வைதக் கோட்பாடுகள், உபதேசங்கள், ஆத்ம பலம் குறித்து நாவல் வடிவில் வெளிவந்துள்ள இந்நூல் எடுத்தியம்புகிறது.

**குடந்தைப்பகுதிசித்தர்கள்–இரா.கண்ணன்; பக்.380; ரூ.250; இரா.கண்ணன், 7/1445, வள்ளலார் தெரு, குருமூர்த்தி நகர், பிள்ளையாம்பேட்டை, அம்மாசத்திரம் அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம் ; ✆0435 - 2413539.**



தென்னாட்டில் திருக்கோயில்கள் அதிகமிருப்பது போலவே சித்தர்கள் சமாதி நிலை அடைந்த அதிஷ்டானங்களும் அதிகம் உள்ளன. 'கோயில் நகரம்' என அறியப்படும் கும்பகோணம் நகரிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அமைந்துள்ள முப்பத்தெட்டு சித்தர்களின் அதிஷ்டானங்கள் பற்றியும் அந்த சித்தர்கள் நிகழ்த்திய அற்புதச் செயல்கள் குறித்தும் இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

நாடறிந்த சித்தர்களான திருமூலர், பட்டினத்தார், பாடகச்சேரி சுவாமிகள், போதேந்திரர், ஸ்ரீதர ஐயாவாள் போன்றவர்களோடு நாம் அதிகம் அறிந்திராத மூட்டை சுவாமிகள், கத்தரிக்காய் சித்தர், புடலங்காய் சித்தர், மேட்டூர் சித்தர், ஆட்டுக்குட்டி சித்தர் போன்ற பலரைப் பற்றியும் ஏராளமான புதிய செய்திகள் இந்நூலில் உள்ளன.

பெரும்பாலான சித்தர்கள் கல்லைப் பொன்னாக்குவது, தீரா நோயைக் குணப்படுத்துவது, பாம்பு தீண்டி இறந்தவனை உயிர்ப்பிப்பது என்று இருந்து கொண்டிருந்தாலும் சில சித்தர்களின் செயல்கள் வியப்பளிக்கின்றன.

மதங்கொண்ட யானையை மூலிகைச் செடி கொண்டு அடக்கிய ஆட்டுக்குட்டி சித்தர், கட்டிய கணவனையே மகனாகப் பாவித்து துறவு மேற்கொண்ட பத்மாவதி தாயார் போன்றோரது செயல்களும் வியப்பை ஏற்படுத்துகின்றன.

கும்பகோணத்தில் இருந்த மௌனசுவாமிகளை அன்னிபெசண்ட் அம்மையாரும் சுவாமி விவேகானந்தரும் சந்தித்தது, ஆடுதுறை சைதன்ய சிவம்மதுரைஉக்கிரபாண்டிதேவரின்குழந்தைக்கு வடலூர் வள்ளலார் நினைவாக ராமலிங்கம் என பெயர் சூட்டியது (அவரே பின்னர் முத்து ராமலிங்கத் தேவர் ஆனார்) போன்றவை சுவையான செய்திகள்.


தமிழகத்தின் மற்ற பகுதிகளில் வாழ்ந்த சித்தர்கள் குறித்தும் இப்படிப்பட்ட தொகுப்பு நூல்கள் வர வேண்டும்.

**ஜே.பி.சந்திரபாபு திரையிசைப் பாடல்கள்- பொன்.செல்லமுத்து; பக்.168; ரூ.125; மணிவாசகர் பதிப்பகம், சென்னை–104; ✆ 044 - 2536 1039.**

ஒரு சிலர் குறித்து எத்தனை புத்தகங்கள் வெளிவந்தாலும் அத்தனையும் வாசகர்களின் வரவேற்பைப் பெறும். அவர்கள் குறித்த சம்பவங்களும், செயல்பாடுகளும் ஏற்படுத்தும் வியப்பு அத்தகையவை. மக்கள் மனதில் அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் தாக்கமும் அதற்குக் காரணம். அந்தப் பட்டியலில் இடம் பெற்றவர்களில் ஒருவர் நகைச்சுவை நடிகராகவும், பாடகராகவும் தமிழகத்தால் கொண்டாடப்படும் ஜே.பி.சந்திரபாபு.

சந்திரபாபு நடித்த திரைப்படங்கள் 70. அதில் 25 திரைப்படங்களில் அவரது பாடல்கள் இடம் பெறவில்லை. 45 படங்களில் 65 பாடல்களைப் பாடியிருக்கிறார். அந்த 65 பாடல்களையும், அவை இடம் பெற்ற படங்கள், அந்தத் திரைப்படங்கள் வெளியான ஆண்டு மட்டுமல்லாமல், அதன் தயாரிப்பு, இயக்கம், இசை ஆகியவையும், அந்தப் பாடல்களை இயற்றிய பாடலாசிரியர்களையும் பதிவு செய்து கொடுத்திருக்கிறார் பொன்.செல்லமுத்து.

நகைச்சுவை நடிகர்களில் காளி என்.ரத்தினமும், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும் சொந்தக் குரலில் பாடி நடித்தார்கள். ஆனால் வேறு நடிகர்களுக்காக அவர்கள் குரல் கொடுத்ததுமில்லை; பாடியதுமில்லை. சந்திரபாபு அப்படியல்ல. அவர் தனக்காகவும் பாடி இருக்கிறார், பிறருக்காகவும் பாடி இருக்கிறார். தனக்காகப் பாட பிற பாடகர்களையும் அனுமதித்திருக்கிறார்.



அவருடைய தந்தை ரோட்ரிக்ஸ், காங்கிரஸ் தலைவர் தீரர் சத்தியமூர்த்தியின் நண்பர். அதனால் அவரது வீட்டிலேயே வளைய வந்து கொண்டிருந்தவர் சிறுவனாக இருந்த சந்திரபாபு. குழந்தைகளாக இருந்த சந்திரபாபுவையும் தீரர் சத்தியமூர்த்தியின் மகள் லட்சுமியையும் பார்த்துக் கொள்வது, சத்தியமூர்த்தியின் அணுக்கத் தொண்டரான காமராஜர். அதனால்தான் சந்திரபாவுவின் திருமணத்துக்கு முதல்வராக இருந்த காமராஜர் வந்து வாழ்த்தியதாகச் சொல்வார்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட சந்திரபாபுவின் தந்தை, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். இலங்கையில் வளர்ந்த சந்திரபாபுவுக்கு சிங்கள மொழியும் தெரியும். இந்தியா திரும்பிய சந்திரபாபுவின் தந்தைக்கு ராம்நாத் கோயங்கா, ஏ.என்.சிவராமன் ஆகியோரிடமுள்ள சுதந்திரப் போராட்டத் தொடர்பால் தினமணியில் வேலை கிடைத்தது. சந்திரபாபுவின் சென்னை வாழ்க்கைக்கும், திரைப்பட வாய்ப்புக்கும் அதுதான் வழிகோலியது.

சந்திரபாபு நடித்த படங்கள், அவர் பாடிய பாடல்கள் மட்டுமல்லாமல், அவர் குறித்த தெரியாத விவரங்களையும் உள்ளடக்கி புத்தகமாக்கியிருக்கிறார் பொன். செல்லமுத்து.

ஜே.பி.சந்திரபாபு திரைப்படப் பாடல்கள் குறித்த புத்தகம், வெறும் தொகுப்பல்ல, திரையுலகம் குறித்த முக்கியமான தகவல் பெட்டகம்.

# Look on

## AUCTION OF BANK PROPERTIES

### FLATS

| AUTHORISED BANK | PROPERTY LOCATION | PROPERTY DETAILS | RESERVE PRICE | AUCTION DATE | CONTACT NO. |
|---|---|---|---|---|---|
| Karur Vysya Bank ARB Gopalapuram | Saligramam | 620 sq. ft flat in second floor with 273 sq. ft UDS | 44.68 Lakhs | 19/8/2021 | 044 - 24305455 |
| Axis Bank Kodambakkam | Thaiyur | 636 sq. ft flat in 4th floor with 334 sq. ft UDS (Ref: Balaji) | 13.04 Lakhs | 26/8/2021 | 90723 72666 99620 41143 |
| Axis Bank Kodambakkam | Madambakkam | 802 sq. ft flat in second floor with 403 sq. ft UDS (Ref: Shanoi) | 19,85,400 | 26/8/2021 | 90723 72666 99620 41143 |
| Axis Bank Kodambakkam | Chitlapakkam | 674 sq. ft flat in second floor with 317 sq. ft UDS (Ref: Sudhan) | 17.91 Lakhs | 26/8/2021 | 90723 72666 99620 41143 |
| Axis Bank Kodambakkam | Thaiyur B Village | 1141 sq. ft flat in 2nd floor with 432 sq .ft UDS (Ref: Thangaraju) | 24.41 Lakhs | 26/8/2021 | 90723 72666 99620 41143 |
| City Union Bank Anakaputhur | Anakaputhur | 632 sq. ft flat in second floor with 345 sq. ft UDS | 20 Lakhs | 4/8/2021 | 044 - 2248 3667 |
| Karur Vysya Bank Teynampet | Ullagaram | 574 sq. ft flat in first floor with 300 sq. ft UDS (Ref: Suresh) | 20.66 Lakhs | 19/8/2021 | 044 - 2430 5455 |
| Karur Vysya Bank Teynampet | Karanai Puducherry | 793 Sq.ft flat in ground floor with 473 Sq.ft UDS (Ref:Rosemary) | 17.55 Lakhs | 19/8/2021 | 044 - 2430 5455 |
| South Indian Bank Nungambakkam | Manivakkam | 1045 sq. ft flat in 4th floor with 537 sq. ft UDS | 34.73 Lakhs | 11/8/2021 | 044 - 28281109 |
| Canara Bank (Maduravoyal II) | Ambattur | 929 sq. ft flat in 2nd floor with 465 sq ft UDS (Ref: N. Ravi) | 32.50 Lakhs | 17/8/2021 | 044 - 2432 8428 94441 44000 |
| Canara Bank Koyambedu II | Kattupakkam | 1080 sq. ft flat in second floor with 486 sq. ft UDS (Ref: Karthikeyani) | 35.60 Lakhs | 17/8/2021 | 044 - 2479 3373 94443 96490 |
| Canara Bank Koyambedu II | Thirumullaivoyal | 1160 sq. ft flat in first floor with 522 sq. ft UDS (Ref: Gokula) | 35 Lakhs | 17/8/2021 | 044 - 2479 3373 94443 96490 |
| Canara Bank Koyambedu II | Mugalivakkam | 772 sq. ft flat in second floor with 386 sq. ft UDS (Ref: Muruganantham) | 33.40 Lakhs | 17/8/2021 | 044 - 2479 3373 94443 96490 |
| Canara Bank Koyambedu II | Ayapakkam | 918 sq. ft flat in second floor with 412 sq. ft UDS (Ref: Ramesh) | 27.50 Lakhs | 17/8/2021 | 044 - 2363 8013 94440 0358 |
| ICICI Bank Ambattur Industrial Estate | Ekkatur village, Kanchi district | 3015 sq. ft flat in 3rd floor with 930 sq. ft UDS (Ref: suresh) | 96.30 Lakhs | 18/8/2021 | 75502 14251 |
| South Indian Bank Nungambakkam | Perungalathur | 1123 sq. ft flat in ground floor with 679 sq. ft UDS | 40.40 Lakhs | 18/8/2021 | 044 - 2823 8250 |
| Indian Bank Ambattur | Anakaputhur | 825 sq. ft flat in second floor with 290 sq. ft UDS | 30 Lakhs | 6/8/2021 | 044 - 2657 5661 |
| Indian Bank Ashok Nagar | Kollacherri, kundrathur | 880 sq. ft flat in ground floor with 388 sq. ft UDS | 27.50 Lakhs | 24/8/2021 | 044 - 2489 2696 |
| Indian Bank Ashok Nagar | Ninnakarai village (Maraimalar nagar) | 865 sq, ft flat in second floor with 399 sq. ft UDS | 25.55 Lakhs | 24/8/2021 | 044 - 2489 2696 |
| Bank of Baroda SARB, Egmore | Kazhipattur village, Chengalpattu taluk | 1765 sq. ft flat in 4th floor with private terrace, 458 sq. ft & 881 sq. ft UDS | 66.50 Lakhs | 12/8/2021 | 044 - 2888 5428 |
| Canara Bank ARMB, Teynampet | Melkottiyur, Chengalpet taluk | 975 sq. ft flat in 4th floor with 363 sq. ft UDS (Ref: suganthi) | 22.60 Lakhs | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |
| Canara Bank ARMB, Teynampet | Madhavaram | 865 sq. ft flat in 2nd floor with 328 sq. ft UDS (Ref: Amsaveni) | 26 Lakhs | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |
| Canara Bank ARMB, Teynampet | Jafferkhanpet | 1290 sq. ft flat in gorund floor with 786 sq. ft UDS and car parking (Ref: Techno) | 50.50 Lakhs | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |
| Canara Bank ARMB, Teynampet | Pudupakkam, (Vandalur - kelambakkam road) | 1062 sq. ft flat in 3rd floor with 575 sq. ft UDS (Ref: Banu) | 28.97 Lakhs | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |
| Canara Bank ARMB, Teynampet | Jafferkhanpet | 710 sq. ft flat in first floor with 433 sq. ft UDS (Ref: Techno) | 28.96 Lakhs | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |
| Canara Bank ARMB, Teynampet | Madhavaram | 1050 sq. ft flat in first floor with 459 sq. ft UDS (Ref: Jothiraja) | 27.40 Lakhs | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |
| Canara Bank ARMB, Teynampet | Kodambakkam | 850 sq ft flat in ground floor with 524 sq ft UDS (Ref: Vijayakumar) | 53.10 Lakhs | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |

### PLOTS

| AUTHORISED BANK | PROPERTY LOCATION | PROPERTY DETAILS | RESERVE PRICE | AUCTION DATE | CONTACT NO. |
|---|---|---|---|---|---|
| ICICI Bank Ambattur Industrial Estate | Vadapalani | All that piece and parcel of vacant land measuring 2450 sq. ft | 1.75 Crores | 24/8/2021 | 90044 74395 |
| Axis Bank Kodambakkam | Kilmanambedu, poonamalle taluk | All that piece and parcel of vacant lan measuring 1162 sq. ft (Ref: Raghu) | 11.25 Lakhs | 13/8/2021 | 99620 05554 |
| Axis Bank Kodambakkam | Perungalathur | All that piece and parcel of vacant land measuring 1150 sq. ft (Ref: sundaravel) | 36.95 Lakhs | 13/8/2021 | 99620 05554 |
| Karur Vysya Bank ARB Gopalapuram | Pulipakkam, Chengalpattu taluk | All that piece& parcel of vacant land measuring 1920 sq. ft | 18.24 Lakhs | 19/8/2021 | 044 - 24305455 |
| Canara Bank ARMB, Teynampet | Kovalam | 1240 sq. ft vacant land | 17.22 Lakhs | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |
| Punjab National Bank Spencer plaza | Thozhur, Thiruvallur Taluk | Vacant land 3742 sq. ft (Ref: Vijayakumar) | 15.15 Lakhs | 12/8/2021 | 044 - 2850 2030 044 - 2850 2033 |
| Punjab National Bank Spencer plaza | Ayemichery, Kanchipuram | Housing site 3256 sq. ft (Ref: Prabhakaran) | 30 Lakhs | 12/8/2021 | 044 - 2850 2030 044 - 2850 2033 |
| Punjab National Bank Spencer plaza | Zamin Pallavaram | All that piece and parcel of land measuring 8400 sq. ft (Ref: V. Babu) | 3.10 Crores | 12/8/2021 | 044 - 2850 2030 044 - 2850 2033 |
| Punjab National Bank Spencer plaza | Madambakkam | All that piece and parcel of land 1500 sq. ft (Ref: Athish) | 20 Lakhs | 12/8/2021 | 044 - 2850 2030 044 - 2850 2033 |
| Punjab National Bank R.H. Road | Athipattu | All that piece and parcel of vacant land measuring 3200 sq. ft (Ref: Raj) | 11.52 Lakhs | 12/8/2021 | 044 - 2811 3137 044 - 2811 4150 |

### LAND AND BUILDING

| AUTHORISED BANK | PROPERTY LOCATION | PROPERTY DETAILS | RESERVE PRICE | AUCTION DATE | CONTACT NO. |
|---|---|---|---|---|---|
| Canara Bank Perambur - II | Megazinepuram, vyasarpadi | All th at piece and parcel of land and building measuring 632 sq. ft (Ref: Venilla) | 27.60 Lakhs | 17/8/2021 | 044 - 2551 2746 |
| Axis Bank Kodambakkam | Kavalkazhani, sriperumbudur taluk | All that piece and parcel of land and building measuring 19845 sq. ft (Ref: Mahesh) | 6,88,500 | 13/8/2021 | 99620 05554 |
| Axis Bank Kodambakkam | Athipattu | All that piece and parcel of land and building measuring 3877 sq. ft (Ref: Maran) | 19.50 Lakhs | 13/8/2021 | 99620 05554 |
| Bank of Baroda SARB, Egmore | Erandam Kattalai, kundrathur | All that piece and parcel of land and building measuring 2400 sq. ft | 82.80 Lakhs | 12/8/2021 | 044 - 2888 5428 |
| Canara Bank ARMB, Teynampet | Vannia Teynampet | All that piece and parcel of residential land and building measuring 1070 sq. ft | 78.20 Lakhs | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |
| Canara Bank ARMB, Teynampet | Anakaputhur | All that piece and parcel of house and ground measuring 4800 sq. ft (Ref: Thiyagarajan) | 1,01,43,000 | 4/8/2021 | 044 - 24339160 044 - 2435 0042 |
| Punjab National Bank Spencer plaza | Padi | All that piece and parcel of land and building measuring 1187 sq. ft (Ref: Dinakaran) | 48.10 Lakhs | 12/8/2021 | 044 - 2850 2030 044 - 2850 2033 |
| Punjab National Bank Spencer plaza | Ikkadu, Tiruvallur | Unfinished individual house - 1209 sq. ft (Ref: Viswasam) | 12.24 Lakhs | 12/8/2021 | 044 - 2850 2030 044 - 2850 2033 |
| Punjab National Bank Spencer plaza | Valasaravakkam | All that piece and parcel of land measuring 975 sq. ft and residential building thereon (Ref: Shivaraman) | 85.26 Lakhs | 12/8/2021 | 044 - 2850 2030 044 - 2850 2033 |
| Punjab National Bank Spencer plaza | Pulianthope | Land 1054 sq. ft & 4 storied building thereon, (ground to Third floor - 1000 sq. ft) & 500 sq. ft in 4th floor - Ref: bluemoon | 50 Lakhs | 12/8/2021 | 044 - 2850 2030 044 - 2850 2033 |
| Punjab National Bank Spencer plaza | Perambur | All that piece and parcel of land and building measuring 1334 sq. ft (Ref: Babu sri) | 92 Lakhs | 12/8/2021 | 044 - 2850 2030 044 - 2850 2033 |
| Punjab National Bank R.H. Road | Nandhivaram | Land 2747 sq. ft and building measuring 1200 sq. ft (Ref: Muthukumar) | 50 Lakhs | 12/8/2021 | 044 - 2811 3137 044 - 2811 4150 |
| Punjab National Bank R.H. Road | Vepery | All that piece and parcel of land measuring 662 sq. ft with building thereon (Ref: RAB) | 97.77 Lakhs | 12/8/2021 | 044 - 2811 3137 044 - 2811 4150 |
| Punjab National Bank R.H. Road | Selaiyur | Villa 1143 sq. ft in ground and first floor (Ref: Masila) | 63 Lakhs | 12/8/2021 | 044 - 2811 3137 044 - 2811 4150 |
| Punjab National Bank R.H. Road | Kosapet | Land 1316 sq. ft with plinth area 3390 sq. ft in ground, first and second floor (Ref: Barath) | 88.65 Lakhs | 12/8/2021 | 044 - 2811 3137 044 - 2811 4150 |
| Punjab National Bank R.H. Road | Saligramam | All that piece and parcel of land 776 sq. ft together with building thereon (Ref: Pothumani) | 63.19 Lakhs | 12/8/2021 | 044 - 2811 3137 044 - 2811 4150 |
| Punjab National Bank R.H. Road | Vishnu kanchi | All that piece and parcel of land and building measuring 1320 sq. ft (Ref: Vignesh) | 35 Lakhs | 12/8/2021 | 044 - 2811 3137 044 - 2811 4150 |
| South Indian Bank Nungambakkam | Sekkadu Village | All that piece and parcel of land 3213 sq. ft with residential building | 94.50 Lakhs | 2/8/2021 | 044 - 28238250 044 - 28281109 |

https://t.me/Tamil_papers

**PLEASE CALL ON MOBILE DURING OFFICE HOURS ONLY**

**Disclaimer : This publication shall not be reponsible for any error / misstatement / omission in the above particulars and doesn't hold any rights / responsibility for the details provided above. For More Information, Please Contact the Respective Bank Branches.**

DINAMANI, Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 3459/63 Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, "Express Gardens", 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. - Editor: K.Vaidiyanathan Chennai Vol. 88, No. 208
COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.

epaper.dinamani.com